www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
දිනමුරසු වාරමලර්
ஏப்.24-30,1994
ரூபா 8/50

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 47



மூன்று கால் மனிதன்

புலிகளை அணைக்க 'றோ' முயற்சியா?

## இந்திய அரசின் உடனடி மறுப்பும் விடுதலைப் புலிகளின் நீண்ட மௌனமும்!

எக்ஸ்ரே ரிப்போர்ட்

ரசிகன் தரும் இலக்கிய நயம்

மகாபாரதம்





## மேலதிகமாய் ஒரு உடலோடு வாழும் மனிதன்!

உள்ளே கமல்–விஜயகாந்த்! அசத்தலான படங்கள்!!

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# இளைப்பாறுதல் ஒரு நன்கொடை

"வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்." மத்-11:28

இரட்சிக்கப்பட்டவர்களாகிய நாம் இயேசு கிறிஸ்துவில் இளைப்பாறுதல் அடைந்துள்ளோம். இரட்சிக்கப்படாதவர்கள் அவரண்டை வந்தால் இளைப்பாறுதலைப் பெறுவார்கள். ஏனெனில் மேற்கூறிய வசனத்தில் அதைத் தருவதாக அவர் வாக்களிக்கிறார். எதுவும் நன்கொடையைவிட இலவசமானதாக இருக்க முடியாது. அவர் மகிழ்ச்சியோடு கொடுப்பதை நாம் மகிழ்க்கியுடன் ஏற்றுக்கொள்வோமாக. புகழார்வம், பிறர் பொருளை அடைய இச்சை, சிற்றின்ப அவா,ஏக்கம் இவற்றால் ஏவப்பட்டு நீங்கள் கடுமையாக உழைக்கிறீர்கள். இந்த இரக்கமற்ற அடிமைத்தனத்திலிருந்து இயேசு உங்களை விடுதலை செய்து உங்களுக்கு இளைப்பாறுதல் அளிப்பார். நீங்கள் "பாரஞ் சுமக்கிற"வர்களாயிருக்கிறீர்கள். ஆம் பாவம், அச்சம், கவலை, கண்ணீர், மரணபயம் ஆகிய பாரங்களைச் சுமக்கிறீர்கள். ஆனால் நீங்கள் அவரண்டை வந்தால், அவர் உங்கள் பாரங்களை இறக்கிவிடுவார். நாம் இனிமேலும் பாவச் சுமையைத் தூக்காதவாறு பாரமாக நம்மை அழுத்திய பாவச்சுமையை அவர் சுமந்தார். பாரமான சுமையினால் அழுத்தப்பட்டு, வருத்தப்படுகிறவர்கள் ஒவ்வொருவரும் வருத்தப்படாமலிருக்க அவர் தம்மையே சுமை தாங்கி ஆக்கினார்.

இயேசு இளைப்பாறுதல் அளிக்கிறார். இது உண்மை. இதை நீங்கள் நம்புகிறீர்களா? இதைச் சோதித்துப் பார்க்க விரும்புகிறீர்களா? அப்படியானால் உடனே செயல்படுங்கள். மற்றவைகளை நம்புவதை விட்டுவிட்டு, இயேசுவைப் பற்றிய எண்ணம் மட்டுமே உள்ளவர்களாயும் அவர் தம்மைக் குறித்துக் கொடுத்துள்ள சான்றுறுதியையும், அவரைப் பற்றிய எல்லாவற்றையுமே நம்பினவர்களாயும் அவரண்டை வாருங்கள். அவ்விதம் வரும்போது அவர் கொடுக்கும் இளைப்பாறுதல் ஆழமிக்கதாயும், பாதுகாப்பு அளிக்கிறதாயும், புனிதமானதாயும், நித்தியமானதாயும் இருக்கும். மோட்ச நிலை எற்படுத்தக்கூடிய இளைப்பாறுதலை அவர் அளிக்கிறார். இன்று அவரண்டை வரும் எல்லோருக்கும் அதை அளிக்கிறார்.

குணத்தி பிரபா-கனடா.

## ஆன்மீகம்



# நரக நெருப்பை அணைக்கும் தொழுகை

அருமை நபி (ஸல்) அவர்கள் அருளியதாக ஹஜ்ரத் இப்னு மஸ்ஊது (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். தொழுகை நேரம் வந்தவுடன் ஒரு மலக்கு "ஆதமுடைய மக்களே! உங்களை எரிப்பதற்கு நீங்களே மூட்டியுள்ள நெருப்பை (உங்கள் பாவங்களை) அணைக்க எழுந்து செல்லுங்கள்." என்று கூறுகிறார். நூல்: தர்.்.கீப்.

தொழுகையினால் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன என்ற கருத்து பல ஹதீஸ்களில் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தொழுகையில் இஸ்திஃபாரும் (பாவமன்னிப்பு கேட்பதும்) இருக்கிறது. ஆகவே, தொழுகையில் பாவங்களைப் பற்றிய மனவருத்தம் உண்டாகிவிட்டால் எல்லா வகையான சிறிய பெரிய பாவங்களும் மன்னிக்கப்பட்டுவிடும். அல்லாஹ் தனது திருமறையில் "பகலில் இரு ஓரங்களிலும், இரவில் சில பகுதிகளிலும் தொழுகையை நிலை நிறுத்துவீராக! நிச்சயமாக, நன்மைகள் பாவங்களைப் போக்கி விடுகின்றன" என்று கூறுகிறான். பிரபல ஸஹாபி ஹஜ்ரத் ஸல்மான் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள் "இஷாத் தொழுகைக்குப் பின் மனிதர்கள் மூன்று பிரிவாக பிரிந்து விடுகிறார்கள். முதல் பிரிவின் அந்த இரவை பாக்கியமாகவும், நன்மை பயப்பதாகவும் கருதுகிறார்கள். மக்கள் சுகமாக தூங்கும்போது இவர்கள் தொழுகை போன்ற வணக்கங்களில் ஈடுபடுகிறார்கள். அந்த இரவு அவர்களுக்கு நன்மையானதாகவும், இலாபகரமாகவும் ஆகிவிடுகிறது. இரண்டாவது பிரிவினர் தனிமையைச் சந்தர்ப்பமாகக் கருதிப் பாவமான காரியங்களைச் செய்கிறார்கள். இதனால் அந்த இரவு அவர்களுக்கு வேதனைக்குரியதாகவும், கேடாகவும் ஆகிவிடுகிறது. மூன்றாவது பிரிவினர் இஷாவுக்குப் பின் தூங்கி விடுகிறார்கள். அவர்களுக்கு அந்த இரவில் நன்மையுமில்லை. அழிவுமில்லை. இலாபமுமில்லை, நஷ்டமுமில்லை.

கவிப்பிரியா நிஷா-வெல்லம்பிட்டிய.

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
முத்திரை பதித்துவிட்ட
சித்திரைப் புத்தாண்டின் பின்
உங்கள் அனைவரோடும் அன்போடு
கைகுலுக்கிக் கொள்வதில் ஆனந்தம்.

முரசு முகம் மலர்த்திய பின்னர்
முதலில் வந்திருக்கும் முத்தான புத்தாண்டு.
போரும், பூசலும்,
புரையோடிய புண்ணாக வலி தருவதால்
கரை, மீறிய மகிழ்ச்சிக்கு
இடமில்லாமல் போய்விட்டது.

பானையிலே சோறாக்க அரிசியிட்டால்
அது வெந்து பதமாகும்வரை
வெளியே சத்தம் வருமல்லவா?
உள்ளே கொதிக்கிறது என்று பொருள்.
வெந்து பதமாகிவிட்டால் சத்தம் வராது.
எடுத்துப் பரிமாறி உண்ணலாம்.
எல்லோருக்கும் திருப்தி வருமன்றோ.

பானையிருக்கிறது. அரிசியிருக்கிறது.
பானைக்குள்ளே விடுவதற்கு தண்ணீரும் இருக்கிறது.
ஆனால் எல்லாமே தனித்தனியாக இருக்கிறது.
அடுப்புமட்டும் அணையாமல் எரிந்துகொண்டிருக்கிறது.
வீணாக எரிந்து விறகுகள் நாசமாகின்றன.

சமைத்திட வேண்டியவர்கள்
சண்டையிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.
உலைவைக்க ஒன்று சேரவேண்டிய கரங்கள்
கொலை வாள்களோடு நின்று பொருதுகின்றன.

மனம் விட்டுப் பேசினால் பரிகாரம் உண்டு.
மனமுண்டானால் இடமுண்டு என்பார்கள்.

தீர்வு கண்டேயாவது என்ற தெளிவிருந்தால்
பேச்சிலே தொய்வு வராது. பிணக்கில் முடியாது.

சிலர் சத்தம் போடுவார்கள்.
தீர்விலே பிழை என்று கூவுவார்கள்.
அது சோறு பதமாகும்வரை
வெளியே கேட்கும் சத்தம் போலத்தான்.
உறுதியோடு தீர்வை நடைமுறைப்படுத்த
அதன் பலனை நாடு உணர
சத்தங்கள் யாவும் சத்தின்றி அடங்கிப்போகும்.

நூறுபேர் இருந்தால் அந்த நூறுபேரையும்
திருப்தி செய்திடக்கூடிய தீர்வு என்று
தேடிக்கொண்டிருந்தால்
அந்த தேடலுக்கு முடிவு இருக்காது.

நேர்மையான, நியாயமான தீர்வே
உகந்த மார்க்கம்.
அதை உணராத கொஞ்சம் பேர்
இருக்கத்தான் செய்வார்கள்.
அவர்களுக்கு பயந்து
தேவையான தீர்வு காணாமல் தயங்குவது
சுறாவுக்கும்-சுழிக்கும் பயந்து
கடலில் மூழ்கி முத்தெடுக்க தயங்குவதாகிவிடும்.

மூச்சடக்கி முயன்றால்தான்
முத்தே கிடைக்கிறது.
முனைப்போடு முயற்சியில் இறங்கினால்தான்
தேவையான தீர்வு கிடைக்கும்.
முத்தெடுக்கப் போகிறோம் என்று
கரையில் நின்று உரையாற்றிக் கொண்டிருந்தால்
அது பொதுக்கூட்டமாகலாமே தவிர
பொதுவான பிரச்சனைக்கு தீர்வாகாது.
காலத்தை வேண்டுமானால்-
கரை காணாத கடலாக நீட்டிக்கொள்ளலாம்.
அதனால்-விலையில்லா உயிர்கள்தானே
விரயாகி, விறகுகளாய் எரிந்து கருகிப்போகின்றன.

மலர்ந்துள்ள சித்திரைப் புத்தாண்டிலாவது
உலை வைத்து சோறாக்கி பதமாக
பரிமாறும் பொறுப்பில் உள்ளவர்கள்
திறந்த மனதோடு செயலில் இறங்கட்டும்.

■

'பவ' வருசத்தில் முகமலர்வோடு
முரசு தொடர்ந்து-
தன் தனித்துவப் பாணியோடு முன்செல்லும்.
முரசின் வளர்ச்சியில்
உற்ற துணையாக, உயிரோட்டமாக
உள்ள உங்கள் அனைவரையும்
இறுகத் தழுவுகிறோம்.
வாழ்த்துக்கள் அனுப்பிய அனைவருக்கும்
இதய நன்றி சொல்லுகிறோம்.

■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை-

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## கவிதைப்போட்டி இல-44

**புகை மீது பெண்களுக்குப் பகை!**
**களம் தேடி வந்த கவிதைகள் சாட்சி!!**

இம்முறை கவிதைப் போட்டிக்கு தம் நெஞ்சில் உள்ள புகை மீதான பகை உணர்வை மடலில் கொட்டி அனுப்பியிருப்பவர்களில் அநேகமானோர் பெண்கள். (பெண்களுக்கு முன் ஸ்ரைலாக சிகரெட் பிடிக்கும் ஆண்கள் கவனத்தில் கொள்வார்களாக)

பெண்களின் அமோகமான பெரும்பான்மை வாக்குகள் புகைத்தலுக்கு எதிராகவே என்பதை இடம்பெறும் கவிதைகள் சாட்சி சொல்லும்.

### பரிசுக்குரிய கவிதை

**வியப்பற்ற (வி)சித்திரம்**

வான் நிறைந்த போரின் புகை
வடக்கே கண்டவர்க்கு
வாய் துறந்த போதைப் புகை
புதுமை வியப்பல்ல!
எஸ். சுபாஷினி
கொழும்பு-13.

### வியக்கப்பட்டவை


**அரக்கன்**
புகை அரக்கனின்
பூத கரத்தில்
புதையுண்டு தவிக்கும்
இளமை இங்கே.
கோகிலா குமாரவேல்
இரத்தினபுரி.

**முடியப்போறாய்...**
முகமோ பிஞ்சு;
முடியோ பஞ்சு;
மூட்டுகிறாய் நஞ்சு;
முடியப் போறாய் அஞ்சு.
செல்வி.ஞா.ஸ்ரீகலா
மட்/ மகிழவட்டவான்.

**என்ன ஆச்சரியம்**
என்ன ஆச்சரியம்;
இங்கே,
மனித மலர்கள்
சிகரெட் நெருப்பில்
தகனம் செய்யப்பட்டு!
சிகரெட் புகையில்
புதைக்கவும் படுகிறதே!
ஆசான்
பூண்டுலோயா-வடக்கு.


**தீவட்டி**
வசுவண்டிக்குள்
அபிஷேகம் செய்து
எங்கள் உடலுக்கு
தீ-வைக்கும்
தீ வட்டிகள்.
இரா.தமிழ்தாசன்
இறக்குவானை.

**அவல வினா**
பேதை மனிதனை
போர் தான் அழிக்கிறது
போதையுமா அழிக்கிறது?
உவர்மலை ஜோசி ஜெயமாறன்
திருமலை.



**இனவாதப் புற்று**
சிகரெட்டைப் போல
இங்கே மனிதத்தின் எரிவு!
சீரழிக்கும் புற்றைப்போல
இங்கே இனவாதத்தின் விரிவு!
செ.வாமதேவன்
பெரியகல்லாறு.

## கவிதைப் போட்டி இல-47



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=.

அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 30.04.1994.

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 47
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு-5

**சந்தோஷம்**
சொற்ப நேர சந்தோஷத்தில்
அற்ப மனித அழிவுகள்
ஜெரி ஜேசுதாசன்-திருமலை.

**தற்கொலை**
சுவாரஸ்யம் தரும்;
சுகமான-தற்கொலை.
எம்.சண்முகம்-கிரான்.

**போரும் புகையும்**
போர் அன்று கொல்லும்
புகையோ நின்று கொல்லும்
ச.மகாலிங்கம்-வெளிமடை.

**புகையும்...**
அந்தோ பரிதாபம்
புகையும் புகைபிடிக்கும்
கலியுகக் காலமிதோ!
எஸ்.சுகிர்தா
கொழும்பு-13.

புகைத்தலால் உன் வாழ்வு
புகையாகும் என்பதை-உன்
புகை வடிவைப் பார்த்தேனும்
புரிவாரோ மானிடர்கள்.
சி.கலைச்செல்வி
மட்டக்களப்பு.

**உண்மை அறியீரோ?**
உள்ளிழுக்கும் புகை
உதட்டை மட்டுமன்று
உடலையே எரிக்கும்
உண்மை அறியீரோ?
-லேகா-
கொழும்பு-13.

மனதிற்கு மகிழ்ச்சி மரணத்தின் வரவேற்பு
உடலுக்கு உவகை ஆனால்...
உயிருக்கில்லை உத்தரவாதம்.
தேவி மகேஷ்-டிக்கோயா.

**அறியாத அழிவு**
அணுவினால் உலகம்
அழிந்திடும் என்று
எண்ணிடும் மனிதன்
புகையினால் நாளும்
அழிவதை அறிவானோ...
அ.சாந்தி-திருமலை.

**வேதனை**
போர்கால தீயினாலே
வளி எல்லாம் புகை என்று
வயிறு இங்கு எரிவதனால்
என் வாயில் சிகரெட்டு.
தெ.லோஜனா-கொழும்பு-15.

உதட்டுத் துப்பாக்கி
உறுமலினால்
கருகிப் போவது
மனித வாழ்வே!
-யாழ் ஜன்ஸி கபூர்-
அனுராதபுரம்.

**போதைப் புகைப் பேய்**
மனித வெறுமையைத்
தோற்றுவிக்க
விண்ணில் படர்ந்த
போதைப் புகைப்பேய்.
சி.கிரிஜா
காரைதீவு.

**நகையை கொல்லும் புகை**
பகையாம் புகையை புகைக்கின்
நகையாம் புன்னகையும்-எமை
நாடாதோடுமே.
சா.விக்னேஸ்வரன்
கல்முனை-01.

**தேவை**
உனக்கு இன்று
நிம்மதி தேவை
சவப் பெட்டிக்கு நாளை
சில்லறை தேவை.
புவனேஸ்வரி ஆறுமுகம்
பசறை.

**விசுவாசம்!**
நீ(வி)சுவாசிக்கும்
புகை
உன் வாழ்வை
இருளாக்குகிறதே
உணரவில்லையா?
செல்வி.எம்.ஏ.ஜெஸ்மின்
காத்தான்குடி-6.

புகைத்ததனால் இளமையிலே
புகைந்துபோன ஆவிநான்
பொய்யல்ல நுரையீரல்
பகையாளி புகைதான்
சுதா.கணபதி-அதிகாரவத்தை.

**புதிய கண்டுபிடிப்பு!**
இதோ...!
மலிந்துவிட்ட
வெடி மருந்தில்
சிகரெட்
ஜீவி-திருமலை.

**நாகரிக அழிவு**
நாகரிகப் படுத்தி
நாட்டையே அழிக்கிறது!
அருன் சிவா
திருகோணமலை.

**சமாதி**
போதை வஸ்த்தால் உனக்கு
சமாதி காத்திருக்கின்றது
போரால் உலகிற்கே
சமாதி காத்திருக்கின்றது
எச்.அஜித்-மாவனெல்ல.

# வாசகசாலை

### எப்படிப் பெறுவது?

அன்புடையீர்,

தினமுரசு வாரமலரை ஆரம்பத்திலிருந்து பெற்று வாசிக்கும் வாய்ப்பினை இழந்தவர்களுள் நானும் ஒருவன். ரசிகன் அவர்களால் ஏற்கனவே எழுதப்பட்ட தொடர்கதையான 'கண்ணே மதுமிதா' மிக விறுவிறுப்பான கதை. எனினும் இக்கதையினை ஆரம்பத்திலிருந்து வாசிக்க முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. 11வது அங்கத்தின் பின்னர்தான் பத்திரிகை ஒழுங்காகக் கிடைத்தது. அவற்றிலும் சில மீண்டும் இரவலாகக் கொடுக்கப்பட்டு பிரதிகள் ஒழுங்காக கைவசம் சேர்ந்த பாடில்லை.

இங்குள்ள தங்கள் விற்பனையாளரிடம் கேட்டதில் பழைய பிரதிகள் எதுவும் கைவசம் இல்லை என்று கூறிவிட்டார். தங்களிடம் விசாரிக்கும்படியும் சொன்னார். தவறவிட்ட முரசின் இதழ்களை மீண்டும் எவ்வாறு பெறுவது என்பதை அறியத் தருமாறு கே கேட்டுக்கொள்கிறேன்.

வீ.பாலச்சந்திரன்-கண்டி.

**உங்கள் வேண்டுகோள் போன்று ஏற்கனவே சில வாசகர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். அவர்களுக்கு தபால் மூலம் குறிப்பிட்ட பிரதிகளை அனுப்பியுள்ளோம். ஏனைய வாசகர்களுக்காகவும் இத்தகவலைத் தருகிறோம்.**

**சொற்ப பிரதிகளே கைவசமுள்ளன.**

**தங்களுக்குத் தேவையான பிரதியின் திகதி அல்லது இதழின் இலக்கத்தை விபரமாக எழுதி, பிரதி ஒன்றுக்கு ரூ. 9.50க்குரிய முத்திரைகளை (தபால் செலவுடன்) அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். மிகவும் சொற்பமான பிரதிகளே கைவசமுள்ளமையினால் தங்கள் கோரிக்கையினை 10-5-94க்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வையுங்கள்.**

**உங்களுடைய பெயர், முகவரி ஆகியவற்றை தெளிவாக எழுதி அனுப்புவது அவசியம்.**

**-நிர்வாகி-**

□□



இனிய முரசே,

இராஜதந்திரி, நாரதரின் அரசியல் அலசலும் ரசிகனின் 'கொலை விழும் நேரம்' 'இலக்கிய நயம்' படு சூப்பர். குலாம்ஷாவின் வரவை எதிர்பார்க்கும் ரசிகன்.

என்.எஸ்.பாபு-ராகல.

□□

முத்தான தகவல்களோடு வாரா வாரம் களம் காணும் அன்பின் முரசே, வாராவாரம் எக்ஸ்ரே ரிப்போட் என்னை சிந்திக்க வைக்கின்றது. ஏன் என்றால் எந்த செய்தியை ஆவலோடு எதிர்பார்க்கின்றேனோ அந்த செய்தியை உடனுக்குடன் தருவதால் வாழ்க வாரா வாரம். உனக்காக ஒரு ராஜா.

மா.வரதராஜன்-நிந்தவூர்-20.

□□

தித்திக்கும் தினமுரசே,

ஊடலும், கூடலும் கலந்து வரும் இலக்கியப் பகுதியை தவறாது வாசித்து வரும் நான் (சலிக்கவில்லை) ரசிகனுக்கு ஓர் அன்பு வேண்டுகோள் விடுகிறேன். பிரிவுத்துயரில் வாடும் பெண் நிலையை விளக்கும் ஓர் இலக்கியப் பகுதி வெளிவரவில்லையே...! என்று தருவீர்கள்..?

குலாம்ஷாவைக் காண உள்ளம் ஆவலுடன் காத்திருக்கின்றது.

ஜே.புளோரன்ஸ்-கெங்கல்ல.

□□

வெள்ளி தோறும் உன்னை நினைத்தே என் மூச்சை விடுகிறேன் முரசே, உன்னில் இடம் பெறும் அனைத்து அம்சங்களும் பிரமாதம். புதிய தகவல்களை பிரசுரிப்பதில் உனக்கு நிகர் நீயே! வாய்மையே வெல்லும். அதன் வழியே தினமுரசு செல்லும் என்று கூறி உன்னை வாழ்த்துகிறேன்.

கே.ரவி-நிந்தவூர்-7.

□□

புத்தம் புது பொலிவுடன் நித்தம் நீ வருவாயோ என்று ஏங்குது என் சித்தம்.

அப்பழுக்கற்ற உன் அனைத்து அம்சங்களும் என்னை அள்ளி அணைக்கின்றன. இலக்கிய நயத்தோடு ரசிகன் வழங்கும் கொலை விழும் நேரம் சூப்பரோ சூப்பர்.

ராசீன் மொகமட்-ஏத்தாலை.

□□

'முரசம்' என்ற தலைப்பில் ஆசிரியரின் அட்டகாசமான கருத்து மாலை - 'இல்லை இது' தினமுரசு வாரமலரின் கழுத்து மாலை! முடிவே இல்லாத ஒரு முன்னேற்ற பாதையில் பறந்து செல்லும் ஒரு தமிழ் பத்திரிகையாக வாசகர் மனங்களில் பவனி வரும் தினமுரசு இன்னும், எங்கும், பிரகாசிக்க என் இனிய வாழ்த்துக்கள்.

லூனுவத்தை-ரவிந்தர்.

□□

வாரந்தோறும் வளர்பிறைபோல் உதயமாகும் வார மலரே! உனது வருகை என்போன்ற மாணவ உள்ளங்களுக்கு பயனுள்ளதாகவே உள்ளது. உன்னிடம் தென்படும் ஓரிரு குறைகள் மறைந்து நீ பௌர்ணமி நிலவினைப்போல் என்றென்றும் காட்சியளிக்க

மாணவ குழாத்தின் ஊடாக வாழ்த்தி விடைபெறுகிறேன்.

அன்பு தஸ்லீம் எஸ்.எச்-வவுனியா.

□□

# எல்லாளன் படையின் பின்னணி என்ன?

## கொழும்பு குண்டு வெடிப்பில் பலியானவருக்கு அஞ்சலி! கனடாவில் புலிகளின் பத்திரிகையில் இரங்கல் கவிதை!!

### புலிகள் அமைப்பினரின் பத்திரிகையில் படத்தோடு இரங்கல்

கொழும்பில் 08.04.92 அன்று ஹோட்டல்களில் நடைபெற்ற குண்டு வெடிப்புகளுக்கு புலிகள் அமைப்பினர் இதுவரை உத்தியோகபூர்வமாக உரிமை கோரவில்லை.

குண்டொன்றை கொண்டு செல்லும் போது அக்குண்டு வெடித்ததில் பலியானவர் என்று சந்தேகிக்கப்படும் அன்ரனி அல்போன்ஸ் அருள்தாஸ் கனடாவில் இருந்து வந்தவர் என்று பொலிஸ் வட்டாரங்கள் கூறியிருந்தன.

அதே சமயத்தில் கொழும்பு குண்டுவெடிப்புக்களுக்கு 'ஈழம் படை' என்ற பெயரில் உரிமைகோரி வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்றுக்கு தொலைபேசி மூலமாக ஒருவர் செய்தி கொடுத்திருந்தார்.

தொலைபேசி மூலமான தகவலுக்கு முக்கியத்துவம் கொடுத்து அந்தச் செய்தி நிறுவனமும் 'ஈழம் படை' உரிமை கோரியதாக செய்தி வெளியிட்டது. சில பத்திரிகைகளிலும் அச்செய்தி வெளியாகியிருந்தது.

இப்போது "பீம் சிங் இதென்ன புதிய குழப்பம்?" என்பதுபோல 'எல்லாளன் படை' என்ற பெயரில் கொழும்பு குண்டு வெடிப்புகளுக்கு உரிமை கோரப் பட்டிருக்கிறது.

வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்கு அச்சுறுத்தலும் அதே 'எல்லாளன் படை' என்ற பெயரில் விடுக்கப்பட்டிருக்கிறது.

'எல்லாளன் படை' என்ற பெயரில் உரிமை கோரப்பட்ட செய்தியை யாழ்ப்பாணத்தில் உள்ள தினசரிகளும், 'புலிகளின் குரல்' வானொலியும் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டுள்ளன.

ஏற்கனவே 'ஈழம் படை' என்ற பெயரில் உரிமை கோரப்பட்டபோது யாழ் பத்திரிகைகள் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

எனவே-தமது நடவடிக்கைகள் சிலவற்றுக்கு நேரடியாக உரிமை கோர முடியாதபோது வேறு எவரும் அதற்கு உரிமை கோராமல் தடுக்கவே 'எல்லாளன் படை' என்ற பெயரில் உரிமை கோரும் முறையை புலிகள் அமைப்பினர் ஆரம்பித்துள்ளனர் என்று தெரிகிறது.


15-04-1994 உலகத்தமிழர் 27

கண்ணீர் அஞ்சலி

அன்ரனி அல்போன்ஸ் அருள்தாஸ்

மலர்வு: 22.07.1964 உதிர்வு: 08.04.1994

வாசைதூறும் —வல்வை நலன்புரிச் சங்கம். (கனடா)

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ள மக்களது அதிருப்திகளை தூண்டாத வகையில் அரசாங்கத்திற்கு நெருக்கடி ஏற்படுத்தும் விதமாகவும், உல்லாசப் பயணத்துறை மூலமான வருமானத்துக்கு சேதம் ஏற்படுத்தவுமே சக்தி குறைந்த குண்டுகள் புலிகள் அமைப்பினரால் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்றே கருத்து நிலவுகிறது.

வெளிநாடுகளில் உள்ள தமது அலுவலகங்கள் மூடப்படுகின்ற சூழலை தோற்றுவிக்காத வகையிலும், தற்போது தென்னிலங்கையிலும் சில சிங்களப் பத்திரிகைகள் மற்றும் புத்தி ஜீவிகள் சிலர் மட்டத்தில் தமக்கு சாதகமான கருத்துக்கள் ஏற்பட்டுவருவதை கெடுத்துக் கொள்ளாத வகையிலும் உயிரிழப்புக்களை தவிர்க்கும் வகையில் இலக்குகள் தெரிவு செய்யப்பட்டன என்றே நம்பப்படுகிறது.

இதே வேளையில் உல்லாசப் பயணிகளின் வருகையை குறைப்பதற்கு தொடர்ந்தும் முயற்சி செய்வதாக இருந்தால், புலிகள் அமைப்பின் பெயரில் அதைச் செய்யும்போது வெளிநாடுகளில் உள்ளவர்கள் மத்தியில் புலிகள் வெளிநாட்டவர்களுக்கு எதிரானவர்கள் என்ற கருத்து ஏற்பட இடமளிக்கும்.

வெளிநாடுகளில் உள்ள புலிகளது அலுவலகங்கள் மூடப்படக்கூடிய நிலையும் ஏற்படலாம்.

அதனால் 'எல்லாளன் படை' என்ற பெயரில் உல்லாசப் பயணத்துறைக்கு எதிரான தமது நடவடிக்கைகளை புலிகள் ஆரம்பித்துள்ளனர் என்றே தெரிகிறது.

அதனை உறுதிப்படுத்தும் வகையில் கனடாவில் இருந்து புலிகள் அமைப்பினரால் வெளியிடப்படும் 'உலகத் தமிழர்' பத்திரிகை ஒரு அஞ்சலி செய்தியை விளம்பர வடிவில் வெளியிட்டுள்ளது.

15.04.94 அன்று வெளிவந்துள்ள 'உலகத் தமிழர்' பத்திரிகையில் கண்ணீர் அஞ்சலி ஒன்று வெளியீடப்பட்டுள்ளது. 'வல்வை நலன்புரிச் சங்கம் - கனடா' என்ற முகவரியோடு அந்த அஞ்சலி வெளியிடப் பட்டுள்ளது.

அந்த அஞ்சலியில் உள்ளதன்படி அருள்தாஸ் யாழ்ப்பாணம் இளவாலையைச் சேர்ந்தவர். பிறந்தது 22.07.1964. கனடாவில் இருந்துவிட்டு பின்னர் கொழும்புக்கு வந்தவர். அவரது முழுப்பெயர் அல்போன்ஸ் அன்ரனி அருள்தாஸ். கனடாவில் உள்ள ரொறன்ரோ விளையாட்டுக் கழகத்திலும் அருள்தாஸ் உறுப்பினராக இருந்திருக்கிறார்.

அருள்தாஸ் குண்டு வெடிப்புக்களோடு சம்பந்தமற்றவரோ, தற்செயலாக குண்டு வெடிப்பில் சிக்கியிருப்பாரோ? என்ற சந்தேகத்தையும் அந்த அஞ்சலியில் உள்ள வரிகள் இல்லாமல் செய்துவிடுகின்றன.

**"விழவு கண்டு மனையோடு எந் மகவுகளுங் கொண்டு-கல்வீடு காரோடு கனடாவில் வியனுற வாழ்தல் விட்டு-இழவு காணும் ஈழ(த்) தமிழரோடு வாழ்வில் இணைந்து வாழ இளவல் நீ முனைந்தாய்: பிரிந்தாய்: இது இழவல்ல; புதுக் கனவு!"**

என்ற வாசகங்கள் அந்த அஞ்சலி செய்தியில் காணப்படுகின்றன.

உலகத் தமிழர் பத்திரிகையில் அந்த அஞ்சலி வெளிவந்திருப்பதால் புலிகள் அமைப்பினர் 'வல்வை நலன்புரிச் சங்கத்தின்' பெயரில் தமது மறைமுக அஞ்சலியை தெரிவித்திருப்பதாகவே நம்பப்படுகிறது.

## "போரில்-சமாதானத்தில் பலமான நிலையில் புலிகள் அரசுக்கு போதிய அவகாசம் வழங்கிவிட்டோம்"

### குண்டுவெடிப்புத் தினத்தன்று அன்ரன் பாலசிங்கம்

கொழும்பில் குண்டு வெடிப்புக்கள் நடைபெற்ற தினமான 8.04.94 அன்று யாழ்ப்பாணத்தில் புலிகள் இயக்க அலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஒரு பத்திரிகையாளர் மாநாடு நடத்தினார்.

அங்கு அவர் கருத்துத் தெரிவித்திருக்கும் போது, "இங்கு ஆயர்கள் வந்துள்ளனர். பௌத்த பிக்குகள் வந்துள்ளனர். தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள் வந்துள்ளனர். எல்லோரையும் நேசக்கரம் நீட்டி வரவேற்றோம். அவர்களிடம் ஒரேயொரு விடயத்தை திரும்ப திரும்ப வலியுறுத்தினோம். அதாவது புலிகள் சமாதானத்திற்கு விரோதமானவர்கள் என்று இனி உலகம் கூற முடியாது. அரசுக்கு போதிய அவகாசம் வழங்கியாகிவிட்டது. போரிலும், சமாதானத்திலும் பலமான நிலையில் நாம் இருக்கிறோம். நாம் யுத்த நிறுத்தத்திற்கும் தயார். பேச்சுவார்த்தைக்கும் தயார். இதைப் போய் அரசிடம் சொல்லுங்கள் என்று கூறி அனுப்பினோம்." என்று அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

# 'சந்திரிகாவை நம்பி காலை விட முடியுமா?' கூட்டை விரும்பிய தமிழ் கட்சிகள் தடுமாற்றம்!!

### அரசு-தொண்டா மறுபடி உறவு! பொதுவேட்பாளர் திட்டம் பழுது!!

ஐக்கிய தேசியக் கட்சி மீது ஏற்பட்ட நம்பிக்கையீனங்களும், சமீபத்திய தேர்தல் முடிவுகளும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பக்கம் தமிழ் கட்சிகள் சிலவற்றை செல்ல வைத்தன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் அடுத்த தலைவராக வரக்கூடியவர் என்று நம்பப்படும் திருமதி சந்திரிகா குமாரணதுங்க பண்டாரநாயக்காவையும் தமிழ் கட்சிகள் சில சந்தித்து பேச்சு நடத்தியிருக்கின்றன.

எனினும், இனப் பிரச்சனை விடயத்திலோ, சம்பந்தப்பட்ட தமிழ் கட்சிகளோடு எதிர்வரும் தேர்தல்களில் கூட்டு சேர்ந்து கொள்வது பற்றியோ திருமதி சந்திரிகா தெளிவான முடிவு எதனையும் வெளியிடவில்லை.

இதனால் சம்பந்தப்பட்ட தமிழ் கட்சிகள் என்ன செய்வது என்று கையைப் பிசைந்துகொண்டிருக்கின்றன.

தமிழர் விடுதலைக் கூட்டணியும் சுதந்திரக் கட்சிமீதும், ஐக்கிய தேசியக் கட்சிமீதும் அதிருப்தி தெரிவித்து, இரு கட்சிகளிடமும் அரசியல் தீர்வுக்கு திட்டம் கிடையாது என்றே கூறியிருக்கிறது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இருந்தும் இனவாதக் கூச்சல்கள் இடைக்கிடையே கேட்கின்றன.

"அமைச்சர் தொண்டமான் கேட்பதையெல்லாம் கொடுத்தால் சிங்களவர்கள் தொண்டா முன்பாக அடிபணிந்து கிடக்க வேண்டும்" என்று திரு.நெவில் பெர்னாண்டோ கூறியிருந்தார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் அன்று முதல் இன்றுவரை தீவிரமான இனவாதம் பேசிவருபவர்களில் அவரும் ஒருவர்.

திருமதி சந்திரிகா மாற்றங்களை ஏற்படுத்த முனைந்தாலும்கூட திரு.நெவில் பெர்னாண்டோ போன்றவர்களை குட்டி இருத்தி வைக்கும் ஆளுமையை அவர் இன்னமும் பெறவில்லை.

இந்த நிலையில் திருமதி சந்திரிகாவுக்கு ஆதரவு தெரிவிக்க முன்வந்த தமிழ் கட்சிகளின் நிலை தர்மசங்கடமாகியிருக்கிறது.

எதிர்வரும் தேர்தல்களில் தமிழ் அரசியல் கட்சிகள் இணைந்து போட்டியிடக்கூடிய சாத்தியங்களும் குறைவாகவே உள்ளன.

தமிழ் கட்சிகள் சில தமக்கிடையே கூடிப்பேசி வருகின்றன. அந்தப் பேச்சுக்களில் எவ்வித நம்பிக்கையான அறிகுறிகளும் இதுவரை தென்படவில்லை என்று சம்பந்தப்பட்ட தமிழ் கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன.

அமைச்சர் தொண்டமானை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களது பொது வேட்பாளராக நிறுத்துவது பற்றி பேசிக்கொண்டிருந்த தமிழ் அரசியல்வாதியொருவர் தற்போது தானே நேரடியாக தேர்தலில் குதிப்பது பற்றி யோசித்து வருகிறார்.

ஜனாதிபதியும் - அமைச்சர் தொண்டமானும் உறவாகியதால் தமிழ் பொது வேட்பாளர் திட்டத்துக்கு நஷ்டம் ஏற்பட்டுவிட்டது.

இதேவேளை எதிர்வரும் பாராளுமன்ற பொதுத் தேர்தலில் திருகோணமலையில் தமிழர் விடுதலைக் கூட்டணி தனது வேட்பாளராக திரு.இரா.சம்பந்தனை நிறுத்த முன்வரலாம் என்று கூறப்படுகிறது.

ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளோடு கூட்டுச் சேர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணி போட்டியிட முனையக்கூடும். அப்படி முனைந்தால் தமக்கு விரோதமான அமைப்புக்களோடு கூட்டுச் சேர்ந்துள்ளார்கள் என்று புலிகள் அமைப்பினரின் அதிருப்தியை கூட்டணியினர் சம்பாதிக்க நேரலாம்.

புலிகளோடும் ஏனைய தமிழ் அமைப்புக்களோடும் பகையற்ற போக்கை கைக்கொள்ள முனையும் கூட்டணியினர் தம்மை ஏதாவதொரு தமிழ் அரசியல் கட்சியோடு இனம் காட்ட முன்வருவார்களா என்பது சந்தேகம் என்றே தமிழ் கட்சி ஒன்றின் பிரமுகர் தெரிவித்தார்.

# நாலுகாலோடு பிறந்த குழந்தை கண்டவர் வியந்தனர் கண்டியில்!

### உள்நாட்டில் ஒரு ஆச்சரியம் - நேரடி ரிப்போர்ட்

(கண்டி நிருபர்)



கண்டியில் இருந்து சுமார் 15 மைல்களுக்கு அப்பால் உள்ள அங்கும்புரை பிரதேச கிராமம் ஒன்றில் 30 வயது மதிக்கத்தக்க சிங்கள மாது அதிசயக் குழந்தை ஒன்றை அண்மையில் பெற்றெடுத்தார்.

கண்டி பெரியாஸ்பத்திரியில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்ட இந்தக் கர்ப்பிணி (1.1.94ல்) ஒரு தலை, இரண்டு காதுகள் 4 கைகள் 4 கால்கள் கொண்ட ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தாள். மருத்துவ மனையாளர்கள் இந்தக் குழந்தை பிறந்ததும் மிகவும் சிரமப்பட்டு அதன் உயிரைக் காப்பாற்ற பெரும் பிரயத்தனப்பட்டனர். என்றாலும் அது பிறந்து எட்டு செக்கன்டுகளில் இறந்துவிட்டது. 3.5 கிலோ கிராம் நிறையுள்ள இந்தக் குழந்தை பிறந்ததும் ஆஸ்பத்திரியாளர், பொதுமக்கள் தொல்லை தரக்கூடும் என்ற காரணத்தினால் அந்த குழந்தையின் சடலத்தை பேராதனை போதனா மருத்துவ பீடத்திற்கு ஆய்வுக்காக அனுப்பி விட்டனர். ஹரிஸ்பத்துவ தொகுதியில் உள்ள அங்கும்புரையில் வசிக்கும் திருமணமாகிய இந்தப் பெண்ணுக்கு ஒரு ஆண் குழந்தையும் ஏற்கனவே உண்டு.

தாயின் நலன்கருதி ஆஸ்பத்திரி நிர்வாகம் அவரது பெயரை வெளியிட மறுத்துவிட்டது.

இதே போன்ற சம்பவம் தமிழ்நாட்டிலும் இடம்பெற்றுள்ளது. முரசு 42ல் 6ம் பக்கம் அது பற்றிய செய்தி வெளிவந்திருந்தது.

## பாலியல் குற்றம் புரிந்தவர் மாட்டினார் புலிகளின் நீதி! மரண தண்டனை!

சிறு வயதுடைய பெண் ஒருவரை அவரது சம்மதம் இன்றி பாலியல் பலாத்காரம் புரிந்த ஒருவருக்கு புலிகள் அமைப்பினரின் 'நீதிமன்றத்தில்' மரண தண்டனை விதிக்கப்பட்டது.

திருமணமாகி ஒரு குழந்தைக்கும் தந்தையாக உள்ளவரான வட்டக்கச்சியை சேர்ந்த கந்தசாமி சிறீதரன் (வயது 21) என்பவருக்கே மரண தண்டனை வழங்கப்பட்டதாக புலிகள் அறிவித்துள்ளனர்.

கிளிநொச்சியில் உள்ள கூட்டுறவுச் சங்கத்தில் பணமோசடி செய்த மூன்று ஊழியர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டு, அவர்களது பெயர்களும் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது.

## பயிற்சி திட்ட கருத்தரங்கும் நகர சபை தலைவர்கள் பட்ட பாடும்!

(திரு மலை நிரு பர்)

திருமலை நகரசபை மற்றும் பிரதேச சபைகளுக்கும் வவுனியா நகரசபைக்கும் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கான பயிற்சி திட்ட கருத்தரங்கு கடந்த 19ம் 20ம் திகதிகளில் திருமலையில் நடைபெற்றது.

உள்ளூராட்சி திணைக்களம் ஒழுங்கு செய்திருந்த அக்கருத்தரங்கின் முதல் நாளன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கலந்துகொண்டு உரையாற்றினார்.

கருத்தரங்கின் பெயர் முதலில் சிங்கள மொழியிலும், அடுத்து தமிழ் மொழியிலும் எழுதப்பட்டிருந்தது. வடக்கு-கிழக்கு மாகாண ஆட்சி மொழி தமிழாக இருப்பதால் முதலில் தமிழில் எழுதவேண்டும் என்று மேற்கொண்ட முயற்சி தடுக்கப்பட்டதாக ஒரு தகவல் கூறுகிறது.

கருத்தரங்கில் கலந்துகொள்ள வந்த மதகுருமார்கள் மேடையின் கீழே நாற்காலிகளில் அமரவைக்கப்பட்டனர். அதிகாரிகள் மட்டும் மேலே இருக்க, நாம் கீழே இருக்க முடியாது என்று பௌத்த குரு ஒருவர் பிரச்சனை எழுப்பினார். வேண்டுமானால் பிரதமரோடு பேசுகிறேன் என்று அவர் உரத்து பேசத் தொடங்க, இறுதியில் அவர் மட்டுமே மேடையில் இருக்க அனுமதிக்கப்பட்டார். ஏனைய மதகுருமார் மேடையின் கீழ் இருந்த ஆசனங்களில் இருந்தனர்.

திருமலை நகரசபைத் தலைவருக்கு ஆசனம் ஒதுக்கப்படாமையால் அவரும் கதிரைக்கு போராட வேண்டி ஏற்பட்டது.

கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களுக்கு தங்குமிட வசதி ஒழுங்காக செய்து கொடுக்கப் படவில்லை. தண்ணீர் வசதிகூட இல்லாத இடத்தில் பிரதிநிதிகள் தங்கவைக்கப்பட்டது பிரச்சனையாகியது. சகல பிரதிநிதிகளும் தங்க ஒரு இடம் தேடி அலைந்தது பரிதாபமாக இருந்தது. வவுனியா நகரசபைத் தலைவர் தம்மை ஒழுங்காக கவனிக்கவில்லை, வெளிநடப்பு செய்ய வேண்டிவரும் என்று கூறிக்கொண்டிருக்க, அதிகாரிகள் சிலர் சமரசம் பேசிக்கொண்டிருந்தனர்.

கருத்தரங்கில் கலந்துகொள்ள வந்த திருமலை, வவுனியா, நகரசபைத் தலைவர்கள்கூட உச்சிமுதல் உள்ளங்கால்வரை பரிசோதிக்கப்பட்டே உள்ளே அனுமதிக்கப்பட்டனர்.

தமக்கு கீழே பணிபுரியும் அதிகாரிகளிடமே கருத்தரங்கில் பாடம் கேட்கும் பரிதாப நிலை நகர சபைத் தலைவர்களுக்கு ஏற்பட்டதுதான் வேதனை.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# ஜனாதிபதியின் பேச்சுக்கு எதிரான வாக்குகள்!

# வடக்கு-கிழக்கு பிரிப்புக்கும் எதிர்ப்பு!!

## வெற்றிக்குக் காரணம் சொல்கிறார் திருமலை நகரசபைத் தலைவர்

சிறிய வாடகை வீடு. போதிய வசதிகள் இல்லை. "வணக்கம் வாருங்கள்" என்ற அன்பான உபசரிப்பு. இவர்தான் அண்மையில் நடந்து முடிந்த தேர்தலில் தெரிவான திருகோணமலை நகரசபைத் தலைவர் திரு.பொ.சூரியமூர்த்தி. அவரை எமது நிருபர் பேட்டி கண்டார். அப்போது அவர் கூறிய கருத்துக்கள்.

(திருமலை நிருபர்)

**கேள்வி:** இம்முறை பெரும்பான்மை இன கட்சிகள் நகரசபையைக் கைப்பற்றி விடுமோ என்ற பயம் காரணமாக மக்கள் திரண்டு உங்களுக்கு வாக்களித்திருக்கிறார்கள். மக்கள் தங்கள் நோக்கில் வெற்றி பெற்றதாக உணருகிறார்கள். இவ் வெற்றி பற்றி நீங்கள் எவ்வாறு உணர்கிறீர்கள்?

**பதில்:** *ஜனாதிபதியின் இனவாதப் பேச்சு. அரசின் பாரபட்சப் போக்கு வடக்கு கிழக்கைப் பிரிக்கவெடுக்கும் முயற்சி என்பவற்றுக்கெதிராக மக்கள் எங்களை ஆதரித்திருப்பதாக உணர்கிறேன்.*

**கேள்வி:** ரெலோ இயக்க சார்பான சுயேச்சைக் குழு வேட்பாளராக நீங்கள் நின்று வெற்றி பெற்றுள்ளீர்கள். நீங்கள் ரெலோவின் அரசியற் கொள்கையை ஏற்றுக்கொண்டதாகக் கருதலாமா?

**பதில்:** *நான் டெலோ உறுப்பினர் அல்ல. பெரிய மனிதர்கள் பலர் இத் தேர்தலில் நிற்கப் பின்வாங்கியதால் வந்தவன் நான். எனினும் நல்ல கொள்கைகள் எங்கிருப்பினும் ஏற்றுக்கொள்ளத்தக்கதே!*

**கேள்வி:** நகரசபைக்குச் சொந்தமான காணிகளில் அத்துமீறல்கள் இடம் பெற்றதாக அறிகிறோம். உங்கள் கருத்தென்ன?

**பதில்:** *அவ்வாறு நடந்துள்ளதாக நானும் அறிகிறேன். பதவிப் பிரமாணத்தின் பின்னர் படிப்படியாக இது சம்பந்தமான விபரங்களை அறிந்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள உள்ளேன்.*

**கேள்வி:** பொதுமக்கள் தொடர்பு எவ்வாறு அமைய வேண்டும் என எதிர்பார்க்கிறீர்கள்?

**பதில்:** *ஏனைய ஊழியர்களைப் போல் நானும் ஒழுங்காக நகரசபைக்குச் சென்று சேவை செய்யவுள்ளேன். பொதுமக்கள் எந்த வேலை நாட்களிலும் அலுவலகத்தில் என்னைச் சந்திக்கலாம்.*

**கேள்வி:** நகர வீதிகள் தற்போது மோசமாக இருப்பது பற்றி..?

**பதில்:** *உங்களைப் போலவே நானும் உணர்கிறேன். நகரசபையின் நிதி நிலைமை எவ்வாறு என்பது தெரியவில்லை. நிதி நிலைமையை அனுசரித்து மிக விரைவில் வீதிகளைத் திருத்துவேன். பெரும்பாலான திருத்த வேலைகள் இளைஞர்களும் பொது மக்களும் இணைந்து சிரமதான அடிப்படையில் செய்ய வேண்டுமென எதிர்பார்க்கிறேன்.*

**கேள்வி:** நகரசபை ஊழியர்களுக்கு-குறிப்பாக நகர சுத்தி ஊழியர்களுக்கு பல வருடகாலமாக மழைக் கோட்டுகள் வழங்கப்படவில்லையாம். அதுபற்றி தங்கள் எண்ணம்?

**பதில்:** *எந்தத் தரத்தில் இருப்பினும் நகரசபை ஊழியர்கள் கம்பீரமாக இருக்கவேண்டும் என நான் எதிர்பார்க்கிறேன். அதற்கிசைவாக என் நடவடிக்கைகள் இடம்பெறும்.*

**கேள்வி:** சாதாரண மக்கள் மத்தியில் இருந்து நீங்கள் தெரிவாகி உள்ளீர்கள். எனினும் உங்களுக்கும் மக்களுக்குமிடையில் திரைபோட சில சுயநலமிகள் முயலலாம் அல்லவா..? ஏனெனில் இது பழைய அரசியல் பாடங்கள்..

**பதில்:** *நிச்சயம் அவ்வாறு நிகழ நான் இடம் கொடுக்க மாட்டேன். உங்களைப் போலவே மக்கள் நிலைமைகளை நானும் உணர்ந்திருக்கிறேன். எனவே ஏமாற்றும் போர்வழிகளுக்கு இடமில்லை.*

**கேள்வி:** வேறு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

**பதில்:** *ஊழல் லஞ்சங்கள் இல்லாத நேர்மையான நிர்வாகத்தை நடத்தி மக்களின் கௌரவத்தைக் காப்பேன். பத்திரிகைத் துறையினரும் எமக்கு உதவியாக இருப்பார்கள் என நம்புகிறேன்.*

நிர்வாகம் சிறப்பாக இருந்தால் உதவுவது நிச்சயம். முயலுங்கள் சூரியமூர்த்தி.


விளம்பரப் பகுதி





நுவரெலியா மாவட்ட மக்களின் நலனைக் கருதி P.K. SAMY ASSOCIATES (PVT) LTD ஸ்தாபனத்தார் அறிமுகப் படுத்தும் புதிய தொலைத் தொடர்புச் சேவை.

இல: 21, பஸ்தரிப்பு நிலையம், நுவரெலியாவில் பல நவீன கருவிகளின் துணைகொண்டு நுவரெலியா, கந்தப்பொல, ராகல, உடபுசல்லாவ, மத்துரட்ட, பண்டாரவளை, அப்புத்தளை, மஸ்கெலியா, ஹட்டன், தலவாக்கலை முதலான ஊர்களிலிருந்து எமது நிர்வாகத்தின் மூலமாக உள்நாட்டு, வெளிநாட்டுத் தொடர்புகளை ஒரு நொடியில் பெறலாம்.

*வாடிக்கையாளர்கள் முற்பண டெபாசிட் தொகையைச் செலுத்தி சலுகைகளைப் பெற்றுக் கொள்ளவும்.*

**விபரங்களுக்கு:**

*நிர்வாகி*

*கொம்மியூனிகேசன் ஆலோசனைப் பிரிவு*

*பி.கே.சாமி அஸோஸியேட்ஸ் பிரைவேட் லிமிடெட்*

*இல: 32-33 தின சந்தைக் கட்டடம்*

*நுவரெலியா*

*தொலைபேசி: 052-2508, 052-3093, 078-61933*

**MANAGER**

Communication Section

P.K. Samy Associates (pvt) Ltd.

No. 32-33 daily Fair Complex

Nuwara Eliya

*Phone: 052-2508, 052-3093, 078-61933*

## மகேண்றியா எலக்றிக்கல்ஸ்

கேஸ் அடுப்புகள், கேஸ் அடுப்பு, மின்சார உதிரிப்பாகங்கள், பைசிக்கிள் உபகரணங்கள், மின்சார உபகரணங்கள், கேஸ் அடுப்புகள் திருத்தல், பைப்பொருத்தும் வேலைகள், வீட்டு வயரிங் அனைத்தும் செய்து கொடுக்கப்படும்.

20/1, பன்சல வீதி, மட்டக்களப்பு

## பெண்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

ஒரே மாதத்தில் முழுமையாக சேட் தைத்து கொள்ளக்கூடிய விதத்தில் தையல் பயிற்சி அளிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்.

(தென் இந்தியா சென்று 5 வருடம் தையல் பயிற்சி பெற்றவர்கள்)

ஞாயிறு காலை 9 மணி முதல் 1 மணிவரை.

FANCY TAILORS

No. 42, 1st Floor Super market

Borella, Colombo-8

Tel: 688315

## அராபிய மாந்திரிகம்

உங்களின் முயற்சிகள் நிறைவேற, வியாபாரம் பெருக, வீடும் கடையும் கார்மானமாக, நோய்கள் நீங்க, திருமணத் தடங்கல் அகல, குடும்பம் ஒற்றுமைப்பட, காதலில் வெற்றிபெற முதலான மாந்திரிகத் தேவைகள் எதுவானாலும் இன-மத பேதங்களின்றி நம்பிக்கையோடு செய்வதற்கும், எம்மை நேரில் சந்திப்பதற்கும் வெள்ளி பின்னேரமும், சனி, ஞாயிறு, போயா மற்றும் விடுமுறை தினங்களிலும் வருக.

இடம்-எலுவில பள்ளிவாசலுக்குச் சமீபமாக.

(இரகசியங்கள் பாதுகாக்கப்படும்)

ஸுல்பிகா புஹாரி

சம்ஸ் அல்-மன்ஸில்

17, எலுவில,

பாணந்துறை.


## வன்முறைக்கு இல்லை வரையறை!



கடந்த 1990 வன்செயலில் அம்பாறை மாவட்டத்தில் பாதிக்கப்படாத தமிழ்க் கிராமங்கள் இல்லை எனலாம். அவற்றுள் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட திராய்க்கேணி கிராம மக்கள் சமீபத்திலே மீள் குடியமர்த்தப்பட்டனர். வன்முறையின் கரங்கள் ஆலயத்தினையும் விட்டு வைக்கவில்லை. திராய்க்கேணி தம்பிரான் ஆலயம் முற்றாக சேதமடைந்து இருப்பதைப் படத்தில் காணலாம்.

*(படம்: காரைதீவு நிருபர்)*

## பிறந்தநாள் வாழ்த்து



செல்வன் வீ. முரளிதரன்

*14.04.1994*

திரு.திருமதி வீராச்சாமி-விசாலாட்சி தம்பதியின் செல்வப் புதல்வன் முரளிதரன் முந்தலில் உள்ள தனது இல்லத்தில் ஏழாவது பிறந்த தினத்தை புதுவருடத்தன்று வெகுவிமரிசையாகக் கொண்டாடினார்.


ராஜன் அண்ணா, ராமநாதன் அண்ணா, பவானி அக்கா, டினேஷ் அங்கிள், உடப்பு முகுந்தன் மச்சான் மற்றும் உற்றார் உறவினர் முரளியை பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ்க என வாழ்த்தினார்கள்.

A. Thinesh kumar

Fairly Pharmacy, Mundel

## முதலாம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி

அன்னையின் மடியில் 07 ■ 04 ■ 1928 ✝



இறைவன் அடியில் 31 ■ 03 ■ 1993 ✝

**அருட்திரு சாள்ஸ் செந்தில்வேல் O.M.I.**

"இறைவனில் விசுவாசம் கொண்டவர்கள் இறப்பிலும் வாழ்வார்கள்"

*அன்னை மரியின் அருந்தவப் புதல்வரே!*
*அமலமரித் தியாகிகள் சபை ஈன்றெடுத்த குருமகனே!*
*அன்னை மாமரியின் மந்திர மாலையாம்*
*செபமாலையைப் பாரினில் பரப்ப*
*தங்கள் வாழ்க்கையையே அர்ப்பணித்து*
*மக்களின் இதயங்களில்*
*மாதா பக்தியை வளர்த்து விட்டீர்கள்!*
*தங்கள் ஆன்மா சாந்தி அடைய*
*எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.*

இவரின் ஆன்மா சாந்தியடைய வெள்ளவத்தை (கொழும்பு) புனித லோறன்ஸ் தேவாலயம், ரொறன்ரோ கனடாவில் புனித அந்தோனியார், ஸ்காபறோ புனித மரிய கொறற்றி தேவாலயங்களில் இரங்கல் பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

*யாழ். புனித யுவானியர்*
*பங்கு மக்கள்.*

## மணி மண்டப வேலைகள் பாதிப்பு

*(காரைதீவு நிருபர்)*

காரைதீவு விபுலானந்த ஞாபகார்த்த பணி மன்றத்தினர் பல இலட்ச ரூபா செலவில் நிர்மாணித்துவரும் விபுலானந்த மணி மண்டபத்தின் கட்டுமான வேலைகள் கொந்தராத்துக்காரருக்கும் உப கொந்தராத்துக்காரருக்கும் இடையே ஏற்பட்டுள்ள குழப்பநிலை காரணமாக ஸ்தம்பிதமடைந்துள்ளன.

தற்போது அப்பகுதி மாட்டுத் தொழுவமாக காட்சியளிக்கின்றது. இதனால் கொதிப்புற்ற பணி மன்றத்தினர் கொந்தராத்துக்காரரின் அனுமதிப் பத்திரத்தை வலுவிழக்கச் செய்து புதிய ஒருவரை சேர்த்து மண்டப வேலைகளை முடிக்க எண்ணியுள்ளனர்.

## வெள்ளம் வடிந்தது!

## வீதிகள் திருத்தப்படுமா?

கல்முனை மெயின் வீதிகள், கல்முனை வர்த்தக ஸ்தாபனங்கள், கல்முனைக்குடி, உள்ளூர் வீதிகள், கல்முனைக்குடி வாசிகள் வதிவிடங்கள் போன்றவைகள் கடந்த ஒரு மாதகாலமாக இப்பகுதியில் பெய்த பெய் மழை காரணமாக நீரில் மூழ்கியது.

இந்நீரை வெளியேற்றுமுகமாக வீதிகள் குறுக்கு நெடுக்காக பிளக்கப்பட்டு ஆற்றுடனும் கடலுடனும் அந்நீர் சங்கமமாக்கப்பட்டது.

ஆனால் இப்போது இவ்வீதிகள் பாதசாரிகளுக்கும் வாகன ஓட்டிகளுக்கும் பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்துகிறது.

காரணம் பிளக்கப்பட்ட வீதிகள் நிரப்பப் படவில்லை. செப்பனிடப்படவுமில்லை. வெள்ளம் வெளியேற்றப்பட்டுவிட்டது. எங்கள் வேலையும் முடிந்துவிட்டன என்று நினைத்து விட்டார்கள் போலும். சம்பந்தப்பட்ட சகலரும்.

உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு உள்ள பொய் எல்லாம் இப்பகுதியில் கொட்டி குவித்தார்கள். பாதைகள் திருத்தப்படும் பாருங்கள் என்றார்கள். ஆனால், இதுவரை பாதைகள் திருத்தப்படவும் இல்லை. அவர்கள் பார்வை படவும் இல்லை.

**எம்.சி.கலீல்-கல்முனை-05.**


## M.S. BOOK CENTRE

கம்பளையில் பாடசாலைப் புத்தகங்கள், தமிழ்-ஆங்கில மற்றும் சிங்கள அகராதிகள், அப்பியாசக் கொப்பிகள்-உபகரணங்கள் எம்மிடம் கிடைக்கும்.

தினமுரசு, பூங்கா, எழுச்சிக்குரல், செவ்வந்தி, மற்றும் இந்திய சஞ்சிகைகளான குமுதம், கல்கண்டு, ஆனந்தவிகடன், கல்கி, ஸ்போட்ஸ்ரார், பொம்மை, பேசும்படம், மங்கை, மங்கையர் மலர், ராணி, ராணி முத்து, ராணி காமிக்ஸ் முதலானவற்றிற்கான-

*கம்பளையின் ஏக விநியோகஸ்தர்*

**M.S. BOOK CENTRE**

**No. 01, New Bazaar Kadugannawa Road, Gampola.**

எம்மிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

தினமுரசு விநியோகஸ்தர்-கம்பளை

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொல்லப்பட்டு மூன்றாண்டுகள் பூர்த்தியாகப் போகின்றது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தீர்ப்பு இன்னமும் வரவில்லை.

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

ஆனால்-புலிகளே ராஜீவ் கொலைக்கு காரணம் என்ற வலுவான கருத்தை புலிகள் விடுத்த மறுப்புக்கள் பாதிக்கச் செய்யவில்லை.

தமிழ்நாட்டில் புலிகளுக்கு ஆதரவான அமைப்புக்கள் சில ராஜீவ் கொலையை நியாயப்படுத்தும் ரீதியில் பிரச்சாரம் செய்துவருவதும்,

யாழ்ப்பாணத்தில் புலிகள் அமைப்பினர் ராஜீவ் கொலையில் பெரிதாகக் கவலைப்பட ஏதுமில்லை என்ற எண்ணம் ஏற்படும் வகையில் பிரச்சாரத்தை மேற்கொண்டு வருவதும் கவனிக்கத்தக்கது.

ராஜீவ் கொலையான மறுநாளே புலிகள் மறுப்பு அறிக்கைவிட்டு கொலைக்கு தாம் பொறுப்பல்ல என்று கூறியிருந்தனர்.

அப்போது இலண்டனில் இருந்த கிட்டு ராஜீவ் கொலையாளிகளைப் பிடிக்க தாம் உதவத்தயார் என்று பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

எனினும் யாழ்ப்பாணத்தில் இருந்த புலிகளின் தலைமை பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

ராஜீவின் தாயாரான முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி கொல்லப்பட்ட போது பிரபாகரனின் கையொப்பத்துடன் புலிகள் அமைப்பினர் அனுதாபச் செய்தி விடுத்திருந்தனர்.

இந்திராவின் மரணம் பேரிழப்பு என்றும் கூறியிருந்தனர்.

ஏனைய தமிழ் அமைப்புக்களும் அனுதாப அறிக்கைகளை வெளியிட்டிருந்தனர்.

இலங்கையில் தமிழர் வாழும் பகுதிகள் கறுப்புக்கொடிகளோடு சோகத்தில் ஆழ்ந்து போயிருந்தன.

ஆனால் ராஜீவ் கொலைக்கு ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளும், அமைப்புக்களும் அனுதாபம் தெரிவித்தபோதும்,

பிரபாகரன் மௌனமாகவே இருந்தார். புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் ஒரு கறுப்புக்கொடிகூட தலைகாட்டவில்லை.

ஆனால் ராஜீவ் காந்தி கொலை மிகப் பாரிய தவறு என்று தமிழர்களில் பெரும் பாலானோர், புலிகளது ஆதரவாளர்கள் உட்பட கவலைப்பட்டுக்கொண்டனர்.

இந்திய அமைதிப்படையின் காலத்தில் நடைபெற்ற அத்துமீறல்கள், அந்த படையோடு நின்ற தமிழ் அமைப்புக்களது அட்டகாசங்கள், அராஜகங்கள் என்பவற்றால் அதிருப்தியுள்ளவர்கள்கூட ராஜீவ் கொலையில் வருத்தப் படவே செய்தனர்.

இந்தியா நமது நண்பன். இந்தியா தனது நலன்களை முதன்மைப்படுத்தும்போது நமது அபிலாசைகளை திருப்தி செய்ய முடியாமல் போகலாம். ஆனால் இந்தியா என்றொரு நாட்டின் அனுதாபமும் ஆதரவும் இல்லாமல் போனால் நாம் தனிமைப்பட்டுப்போவோம் என்று புலிகளது பிரபல ஆதரவாளர்களே பேசிக்கொண்டார்கள்.

ஆனால் அதனை பிரபாகரனிடமோ அல்லது புலிகளது தலைமை மட்டங்களிலோ பகிரங்கமாக எடுத்துச் சொல்ல அவர்கள் பயந்தார்கள்.

எனினும், ராஜீவ் கொலையால் உள் நாட்டிலும், வெளிநாட்டிலும் ஏற்பட்ட தமக்குப் பாதகமான உணர்வை புலிகள் அமைப்பினர் புரிந்துகொண்டனர்.

எனவே- ஒருபுறம் கொலைக்கான மறுப்பை தெரிவித்தபடியே, மறுபுறம் ராஜீவ் கொலை மிக வருந்தத்தக்க ஒரு சம்பவம் அல்ல;

ஒரு ராஜீவ் கொலையானதற்கு வருந்து கிறீர்கள் இந்திய அமைதிப்படை எத்தனை தமிழர்களை கொலை செய்தது. எத்தனை பெண்களை பலாத்காரம் செய்தது. இதோ புள்ளி விபரம்; பாருங்கள்! ராஜீவுக்காக கவலைப்படுவதை நிறுத்துங்கள்! என்ற ரீதியில் புலிகளது பிரச்சாரம் அமைந்திருந்தது.

நாங்கள் கொல்லவில்லை. ஆனால் அவர் கொல்லப்பட்டதில் வருத்தப்பட ஒரு காரணமும் இல்லை என்ற வகையிலான பிரச்சாரம் புத்திசாலித்தனமானது.

தெற்கில் ஜே.வி.பியினரும் விஜய குமாரனதுங்கா விடயத்தில் அவ்வாறுதான் செய்தார்கள்.

விஜய் கொலைக்கு ஜே.வி.பி. உரிமை கோரவில்லை. ஆனால் ரோகன விஜயவீரவின் குரலில் ஒரு ஒலிப்பதிவு நாடா வெளியிட்டிருந்தார்கள்.

அதில் விஜயகுமாரனதுங்காவை நாம் கொல்லவில்லை. ஆனால் அவர் ஏன் கொல்லப்படக்கூடாது? அவர் ஒன்றும் சிறந்த மனிதரல்லவே என்ற தோரணையில் ரோகண விஜயவீரா பேசியிருந்தார்.

சில விசயங்களை நேரடியாகச் சொல்லாமல் மறைமுகமாகச் சொல்லும்போது தாக்கம் குறைவாக இருக்கும். அதுதான் பிரச்சார உத்தி.

என்றாலும் ராஜீவ் கொலை விடயத்தில் புலிகள் விடுத்த மறுப்புக்கள் பின்னர் புலிகள் மூலமாகவே உண்மைத் தன்மையை இழந்துவிட்டன.

உதாரணமாக பொட்டம்மான் என்று ஒருவர் தமது இயக்கத்தில் கிடையவே கிடையாது என்றும், அது இந்திய உளவுப் பிரிவின் கற்பனை என்றும் புலிகள் கூறியிருந்தனர்.

ஆனால் இப்போது யாழ்ப்பாணத்தில் தமது மூத்த உறுப்பினர் என்று பொட்டம்மானை புலிகள் பொதுக்கூட்டங்களில் பேசவைக்கிறார்கள்.

இதில் ஒரு வேடிக்கை, பொட்டம்மான் என்று யாரும் இல்லை என்று உறுதியாக மறுத்தவர் மாத்தையாதான்.

இப்போது மாத்தையா இருக்கிறாரா இல்லையா என்று பொட்டம்மானிடம்தான் கேட்க வேண்டியிருக்கிறது.

"பொட்டம்மான் இல்லை" என்ற மாத்தையா அரங்கில் இல்லாமல் போனார். பொட்டம்மான் பகிரங்க அரங்கில் தோன்றி பிரபாகரனுக்கு அடுத்தவர் என்ற நிலையை பெற்று வருகிறார்.

ராஜீவ் கொலை வழக்குக்கு முன்னரே கொலைக்கு காரணம் புலிகள்தான் என்று இந்திய அரசு திட்டவட்டமாக செய்த முடிவின் வெளிப்பாடுதான் புலிகள் மீதான தடை.

கொலை வழக்கு என்பது குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு தண்டனை கொடுக்கலாமா? தண்டனை வழங்க போதிய ஆதாரம், சாட்சிகள் உண்டா என்பதை தீர்மானித்து தீர்ப்புச் சொல்லவே நடத்தப்படுகிறது.

தீர்ப்பு எப்படி அமைந்தாலும் ராஜீவ் கொலைக்கு காரணம் புலிகளே என்ற கருத்தில் மாற்றமிருக்காது.

ஆகவேதான் இந்திய அரசோடு புலிகள் மீண்டும் மெல்ல, மெல்ல, முன்புபோல் இல்லாவிட்டாலும்கூட விரோதிகளாகவும் இல்லாமல், நல்ல நெருங்கிய நண்பர்களாகவும் இல்லாமல் இரண்டுக்கும் இடைப்பட்ட அளவிலே ஒரு உறவை ஏற்படுத்திக்கொள்ள வாய்ப்பு உண்டா? என்ற கேள்வி எழுந்திருக்கிறது.

இந்திய உளவுப்பிரிவான 'றோ' புலிகளோடு மீண்டும் பேசியிருப்பதாக ஒரு தகவல் வெளியே வந்திருக்கிறது.

தமிழ்நாட்டில் ஜெயலலிதாவுக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் இடையே கூட்டு முறிந்து, பார்த்து விடுவோம் ஒரு கை என்று பலப் பரீட்சை நடந்துகொண்டிருக்கிறது.

அந்தப் பலப்பரீட்சையில் காங்கிரசின் தமிழகத் தலைமை ஒரு பிரச்சார ஆயுதத்தை தூக்கிக்கொண்டு வெளியே வந்திருக்கிறது.

அது ஒன்றும் புதிய ஆயுதமல்ல. ஏற்கனவே பயன்படுத்தியதுதான்.

ஒரு வித்தியாசம்; அப்போது அந்த ஆயுதத்தை ஜெயலலிதாவும், தமிழக காங்கிரசும் இணைந்து நின்று ஆளுக்கு ஒரு கைகொடுத்து தூக்கிப் பிடித்திருந்தனர்.

குறி கருணாநிதி மீது இருந்தது. கருணாநிதி புலிகளுக்கு ஆதரவு கொடுத்து தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கை சரிந்து விழச் செய்துவிட்டார் என்று சொல்லி அந்த பிரச்சார ஆயுதத்தை வீசினார்கள். குறி தப்பாமல் கருணாநிதியின் ஆட்சிக் கட்டிலை தாங்கிய அதிகாரக் கயிற்றை அது அறுத்து வீழ்த்திவிட்டது.

இப்போது மீண்டும் அதே ஆயுதத்தை தமிழக காங்கிரஸ் ஜெயலலிதாவின் ஆட்சிக் கட்டிலுக்கு குறிவைத்து உயர்த்த, ஜெயா உஷாராகிவிட்டார்.

அதன் விளைவாகத்தான் றோவும்-புலிகளும் மீண்டும் சந்தித்தனர். உறவுகளைப் புதுப்பிப்பது பற்றிச் சிந்தித்தனர் என்ற தகவல் ஜெயலலிதா வட்டாரத்தில் இருந்து கிளம்பி வந்தது.

அப்படி ஒன்றும் கிடையாது. என்று இந்திய மத்திய அரசு சார்பாக உடனே மறுக்கப்பட்டு விட்டது.

என்றாலும், புலிகள் தரப்பில் இருந்து மௌனமே பதிலாக இருக்கிறது. இதுவரை மறுக்காதது மர்மமாகவும் இருக்கிறது.

றோவின் நடவடிக்கைகள்தான் இந்திய அரசு தவறான முடிவுகள் எடுக்கக் காரணம் என்று புலிகளது அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் முன்னர் கூறியிருந்தார்.

இலங்கைப் பிரச்சனையில் 'றோ'வில் இருந்த சில அதிகாரிகள் தமது விருப்பு வெறுப்புப்படி தவறான முடிவுகளுக்கு மத்திய அரசை தூண்டினார்கள் என்ற கருத்தில் உண்மை இல்லாமல் இல்லை.

றோவில் இருந்த அதிகாரிகளை தனிப்பட்ட ரீதியில் திருப்த்தி செய்தால் ஆயுதம் கொஞ்சம் அதிகமாகக் கிடைக்கும் என்று தமிழ் இயக்கங்களது தலைவர்கள் சிலர் பரிசுப் பொருட்களோடு திரிந்த சம்பவங்களும் உண்டு.

'றோ' என்பது ஆய்வு-பகுப்பாய்வு பிரிவு என்று அழைக்கப்படுகிறது. அதனைவிட இந்திய மத்திய உளவுப் பிரிவும் இருக்கிறது. ஆயினும் தமிழ் அமைப்புக்களை கையாளவும், இலங்கைப் பிரச்சனையில் ஈடுபடவும் 'றோ'தான் கூடிய அதிகாரங்களைப் பெற்றிருந்தது. 'றோ' அதிகாரிகள் சிலர் ஏறக்குறைய தமிழ் அமைப்புக்களது எஜமானர்கள் போலவே நடக்க முற்பட்டார்கள்.

தமக்கு சகல பிரச்சனையும் தெரியும் என்பதுபோல் நடந்துகொண்டார்கள். ஆனால் அரசியல் ரீதியான பிரச்சனையை எப்படி கையாள்வது என்ற அடிப்படையே தெரியாமல் நடந்துகொண்டார்கள். அதுதான் சகலவற்றையும் குழப்பமாக்கியது.

இந்தியப் படையும், புலிகளும் மோதிக் கொண்டிருந்தபோதும் கூட சென்னையில் கிட்டுவை சுற்றிச் சுற்றி வந்து 'றோ' பேச்சு நடத்தியது.

உண்மையில் அப்போது கிட்டுவுக்கே பிரபாகரன் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறார் என்பது தெரியாது. ஆனால் கிட்டுவுக்கு எல்லாமே தெரியும் என்று 'றோ' நினைத்துக்கொண்டிருந்தது.

கிட்டு 'றோவோடு' சிரித்துப் பேசிக் கொண்டிருக்க, அதே அலுவலகத்தின் இன்னொரு பகுதியில் இருந்து "இந்திய படையின் அட்டூழியங்கள்" என்று புலிகள் பிரசுரங்கள் எழுதிக்கொண்டிருந்தார்கள். புத்தகங்கள் அடித்து தமிழ் நாட்டில் விநியோகித்தார்கள்.

இறுதியில் தனது கணிப்பு தவறு என்று 'றோவுக்கு புரிந்துபோனபோது, வந்த கோபத்தில் கிட்டுவைப் பிடித்து பாதுகாப்புத் தடைச் சட்டம் போட்டு சிறையில் போட்டார்கள்.

'றோ'வைப் பொறுத்தவரை இந்தியாவின் நலனே பிரதானம். எந்தவொரு நாட்டின் உளவுப் பிரிவும் அப்படித்தான் இருக்கும். ஆனால் 'றோ'வில் இருந்த சில அதிகாரிகளுக்கு தமது சொந்த நலனிலும் கொஞ்சம் அக்கறை இருந்தது. அந்த கொஞ்ச அக்கறை சில நேரங்களில் பெரிய தவறுகளுக்கும் காரணமாக இருந்தது.

இப்போது மீண்டும் 'றோ' புலிகளோடு பேசுவது என்றால் இரு தரப்பும் குறுவாளை உள்ளங்கைக்குள் ஒளித்துவைத்துக் கொண்டு தான் வணக்கம் என்று கைகூப்ப வேண்டியிருக்கும்.

## நாரதர்

இலங்கைப் பிரச்சனையில் புலிகளை தவிர்த்துவிட்டு தீர்வு பற்றிப் பேசமுடியாது என்ற நிலை மிக தெளிவாகியிருக்கிறது.

ஏனைய தமிழ் அமைப்புக்களை மட்டுமே முன்னர்போல் முன்னே இறக்கிவிட்டு புலிகளை ஓரம்கட்டுவது சாத்தியமான விசயம் அல்ல.



முன்னாள் பாரதப் பிரதமர்
அன்னை இந்திரா காந்தி

இந்தியாவின் அரசியல் நிகழ்ச்சிப் போக்குகளிலும் தாக்கம் செலுத்தக் கூடியவர்களாக புலிகள் இருக்கிறார்கள்.

எனவே-புலிகளோடு பேசி, முழு விரோதம் என்ற நிலையை மாற்றி இரு தரப்புக்கும் ஆபத்தில்லாத உறவை ஏற்படுத்த 'றோ' முயற்சி செய்யலாம் என்பதை மறுக்க முடியாது.

எதிர்வரும் மே மாதத்தோடு இந்தியாவில் புலிகள் மீது விதிக்கப்பட்ட தடை காலாவதியாகிறது.

தடை மேலும் நீடிக்குமா? இல்லையா? என்ற கேள்வி எழுதுவதற்கு இடையில் தமிழக அரசியல் மோதல் சூடுபிடித்துவிட்டது.

புலிகளோடு உறவு இல்லை என்று மறுத்துள்ள மத்திய அரசு மீண்டும் தடையை நீடிக்க வேண்டிய நிலையில் இருக்கிறது.

'ராஜீவ்' கொலைக்கு காரணமான புலிகளோடு உறவு என்ற விசயம் உண்மை என்று கருதப்படுமானால் அடுத்த தேர்தலில் காங்கிரசுக்கு பாதகம்தான் ஏற்படும். நேரு குடும்பத்தின் மீது காங்கிரஸ் தலைமை பிடிப்பிருப்பதாக காட்டிக்கொள்ளாது போனால் வாக்காளர்கள் மத்தியில் உள்ள அதன் பிடி தளர்ந்துபோகலாம்.

எனவே-அதனை மத்திய அரசில் ஆளும் கட்சியாக உள்ள காங்கிரஸ் விரும்பாது.


இப்போதும் 'ராஜீவ்காந்தி' என்ற பெயர் காங்கிரஸ் கட்சிக்கு பிரதானமானதாகவே இருக்கிறது.

'ராஜீவ்' குடும்பத்தில் இருந்து திருமதி சோனியாவோ அல்லது வேறு ஒருவரோ அரசியலுக்கு வந்தால் காங்கிரஸ் தலைமை அவர்களது கைகளுக்குத்தான் போகும். அந்தளவுக்கு நேரு குடும்பம் காங்கிரசிலும், இந்தியாவிலும் வேர் விட்டுள்ள விலாசம் கொண்டிருக்கிறது

எனவே-உடனடியாக அல்லது சமீப எதிர்காலத்தில் இந்திய அரசு புலிகளோடு பகிரங்கமாகவோ அல்லது மறைமுகமாகவோ அணைத்துக்கொள்ளும் போக்கை அனுசரிக்க முடியாது.

'றோ' - புலிகள் பேச்சில் உண்மை உண்டோ இல்லையோ அது வேறு விசயம். ஆனால் 'றோ' இந்திய நலனை முன்னிட்டு ஏதாவது செய்ய நினைத்தால்கூட இந்திரா காங்கிரசின் அரசியல் நலன் புலிகளோடு உடனடி உறவுக்கு ஒத்துவராது.

## புலிகளை அணைக்க 'றோ' முயற்சியா?
## இந்திய அரசின் உடனடி மறுப்பும் விடுதலைப் புலிகளின் நீண்ட மௌனமும்!



அன்ரன் பாலசிங்கம்

"இந்திய அரசு 'றோ' கொடுத்த தவறான தகவல்களின் அடிப்படையில் தவறு செய்தது."

## அதிரடி அய்யாத்துரை



தேர்தல் காலப் பிரசாரங்கள் சூடாய்த்தான் இருக்கும். ஆனாப் பாருங்கோ அதெல்லாம் உண்மை தான் எண்டு நம்பினா கதை காலி. திருவான மலையை தமிழர் கையை விட்டுப் போகாமல் மீட்கப் போறதாய் சொல்லி வாக்கு வாங்கி பதவிக்கு வந்தவை தேசிய கீதம் பாடி தேசியக் கொடி ஏத்தினவை. பிறகு தலைவர் போய் கீதம்பாடி தேசியக்கொடி ஏத்தினவை. பிறகு தலைவர் போய் சிங்கள குடியிருப்பாளர்களை சந்திச்சவராம். ஐயா காணி உறுதி எடுத்துத்தாருங்கோ எண்டு அவை கேட்க, தலைவரும் அதுக்கென்ன செய்தால்போச்சு எண்டு சொன்னவராம். மண்ணை மீட்க உறுதி எடுத்தது மறந்து காணி உறுதி எடுத்துக் கொடுக்க உத்தரவாதம் கொடுக்கிறார். அதுசரி காணி உறுதி எடுத்துக்கொடுக்கிற அதிகாரம் தலைவருக்கு இருக்குதோ? மொத்தத்திலை உனக்கும் பெப்பே உங்கப்பனுக்கும் பெப்பே இது தாண்டா அரசியல்.

கிழக்கிலை பச்சை வட்டாரத்திலை கோஷ்டிப் பூசல். ஒரு கோஷ்டித் தலைவரை பிடிச்சு உள்ளுக்கை போட்டவை. இரெண்டு எழுத்தாரோடை தொடர்பாம். தெரியாமத்தான் கேட்கிறன். எலக்சனிலை வேட்பாளராய் நிறுத்தி வாக்கு கேட்க விடேக்கை அதெல்லாம் தெரியாதோ? இன்னொரு விசயம் பச்சைக் கட்சியிலை இருக்கிற தமிழ் பேசுற பிரமுகர்கள் யாராவது இரெண்டு எழுத்தாருக்கு எதிராய் இதுவரை வாய் திறந்தவையோ? இல்லைத்தானே. அப்ப அவைக்கும் என்ன இரெண்டு எழுத்துக் கனெக்சனோ? பிடிக்காட்டி உடனை ரெண்டு எழுத்துக்காரர் எண்டு கைகாட்டி விடுறது பெரிய கொடுமை பாருங்கோ.

வெளிநாடுகளிலை இருந்து விடுமுறையிலை வாற எங்கடை ஆக்கள் செக்கிங் நடக்கேக்கை பாஸ்போட் விசா எண்டு எல்லாத்தையும் எடுத்துக்காட்டி நாங்கள் வெளிநாட்டிலை இருந்து வந்தனாங்கள். அதாலை அப்பாவிகள் எண்டு நிரூபிக்கப் பார்க்கிறவை. இனி அதுவும் ஏலாது. அதிலையும் கனடாவிலை இருந்து வந்தவை பாடு அரோகரா. ஃபிறம் கனடா எண்டு சொல்லி பாஸ்போட்டை எடுக்கேக்கையே கை கால் உதறுதாம். ஏன் எண்டு தெரியும்தானே.

மலையக தனித்துவத் தலைவர் மேல்மட்ட அளவிலை நெருக்கமானதாலை அடுத்த தலைவர் வட்டாரம் அப்செட் ஆகியிருக்குதாம். அரசனை நம்பி புருசனை கைவிட்ட கதையாய் முடிஞ்சுது எண்டு முணுமுணுப்பும் கேட்குதாம்.

அயலக எழுத்தாளர் ஒருவர் இஞ்சை வந்தாலும் வந்தார். பின்னுக்கும் முன்னுக்கும் காவடி தூக்கி அலைஞ்ச ஆட்கள் சிலர் பட்டபாடு- பெரும்பாடு. அவர் யாழ்ப்பாணம் போய் பார்த்திருக்கிறார். விறைச்சுப் போனார். தண்ணீர் தண்ணீர் படத்திலை தீவிரவாதி எண்டால் தாடி வைச்சு, சிகரெட் பத்திக்கொண்டு காட்டுக்கை போய் மரத்தோடை நிக்கிறமாதிரி பாலசந்தரோடை சேர்ந்து படம் எடுத்தவருக்கு, தெருவிலையும், வீடுகளிலையும் ஆயுதம் சகிதம் ஆட்களைக் காணேக்கை விறைப்பு வரத்தானே செய்யும்.

கொழும்பு குண்டு விவகாரத்திலை மாண்டவர் ஏஜன்சி தொழில் பார்க்கத்தான் வந்தவராம். ஆட்களையும் அனுப்பினவராம். இடையிலே ஏதோ தடங்கல். பிறகுதான் ரெண்டு எழுத்தாரோடை தொடர்பாம் எண்ட மாதிரி ஒரு நியூஸ். வெளியிலை கதைச்சுப் போடாதையுங்கோ. எல்லாப் பக்கத்தாலையும் எல்லோ பிரச்சனை.

கலைஞர் கருணாநிதி இருக்கிறார் பாருங்கோ. எப்பவும் இளமையான சிந்தனைதான் மனுசனுக்கு. அவற்றை அரசியல் சரியோ பிழையோ எண்டு வாதம் செய்யிறவையும், அவர் தமிழ் எழுத்துலகிலை ஒரு கில்லாடி எண்டதை மறுக்கமாட்டினம்.

"அன்ன நடை-மிகச்
சின்ன இடை-கவைக்
கன்னல் மொழி-உடல்
மின்னல் ஒளி!
கட்டுக்குலையாப்
பட்டுமேனியில்-வாழை
மொட்டிரண்டு
முளைத்துக்கொண்டு
ஆடவர் இதயம்
தொட்டிழுத்துத்
துளைத்துப்போடும்"

இது தான் எழுதிய கவிதைகளில் மிகப் பிடித்த கவிதை எண்டு கலைஞரே சொன்ன கவிதை பாருங்கோ.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# பாகிஸ்தானின் கையில் 12 அணுகுண்டுகள்!

## வேண்டாம் என்கிறது அமெரிக்கா!

## வெறுப்படைகிறது இந்தியா!!





நாசவேலையா? காஸ்மீரில் பிரிவினைவாதிகளின் ஆதிக்கம்

இரண்டாவது உலக மகா யுத்தத்தில் ஜப்பான் நகரான ஹீரோஷிமாவில் அமெரிக்கா போட்ட அணுகுண்டை இன்னமும் உலகம் நினைவில் வைத்திருக்கிறது.

ஜப்பானில் இப்போதும் அணுகுண்டின் தாக்கத்தினால் ஏற்பட்ட வடுக்கள் மறையவில்லை.

அணுவாயுதங்களின் பரவலை தடுப்பது, மீண்டும் பாவிக்காமல் இருப்பது என்று உலகெங்கும் பிரச்சாரங்களும் குறைவின்றி நடந்து வருகின்றன.

வல்லரசுகளும் வாய் வலிக்காமல் அணுவாயுத ஒழிப்புக்கு ஒத்துழைப்பதாக கூறியபடியே, திரைமறைவில் பயங்கரமான அணு ஆயுதங்களை பத்திரமாக பாதுகாத்து வைத்திருக்கின்றன.

அமெரிக்காவிடம் விதம் விதமான அணு ஆயுதங்கள் கைவசம் இருக்கின்றன.

அமெரிக்கா அணு ஆயுதங்களை தன் கையில் வைத்திருக்கும். வேறு நாடுகள், நாமும் ஒரு அணுகுண்டு வைத்திருக்கலாமே என்று தயாரிக்கத் தொடங்கினால் அமெரிக்கா சும்மா இருக்காது. கோபப்படும்; கொதிக்கும்.

இப்போது அமெரிக்காவின் கோபம் பாகிஸ்தான்மீது திரும்பியிருக்கிறது.

இந்திய அமெரிக்க உறவுகள் சற்று கசப்பாக இருந்தபோது பாகிஸ்தானை முதுகில் தட்டிக்கொடுத்து உற்சாகப்படுத்தியது அமெரிக்காதான்.

இப்போது உலக அரசியல் போக்கு மாறிவருவதால் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே முன்புபோல் கசப்புக்கள் இல்லை. சோவியத் யூனியன் சிதறிப்போனதால் இந்தியாவும் அமெரிக்காவை அனுசரித்துப் போகிறது.

தெற்கு ஆசியாவில் பாகிஸ்தானைவிட இந்தியாவின் உறவு அமெரிக்காவுக்கு அதிக முக்கியமானது.

இந்தியாவையும் திருப்திப்படுத்திக் கொண்டு பாகிஸ்தானுடனும் உறவுகளை வைத்திருக்க அமெரிக்கா விரும்புகிறது.

அதே சமயம், பாகிஸ்தான் இராணுவ ரீதியில் வலிமை பெற்றுவிட்டால், எங்கேதான் சொல்கிறபடி எல்லாம் நடக்காமல் போய் விடுமோ என்ற எண்ணமும் அமெரிக்காவிடம் இருக்கிறது.

பாகிஸ்தான் அமெரிக்காவோடு உறவாக இருந்தபடியே அமெரிக்காவுக்கும் தெரியாமல் அணுகுண்டுகளை தயாரித்து முடித்துவிட்டது.

விசயம் அறிந்து விழித்துக்கொண்ட அமெரிக்கா தனது உளவுத்துறை மூலம் மோப்பம் பிடித்ததில் 12 அணுகுண்டுகள் பாகிஸ்தானிடம் இருப்பது தெரியவந்தது.

இதனால் அமெரிக்கா மட்டுமல்ல பாகிஸ்தானின் அயல்நாடான இந்தியாவும் கவலை கொண்டுள்ளது.

ஆனால் அமெரிக்க உளவுத்துறை கணிப்புப்படி இந்தியா இப்போது நினைத்தாலும் 20 அணுகுண்டுகளை உற்பத்திசெய்ய முடியும். அதற்குரிய சாதனங்கள் அதனிடம் இருக்கிறது.

காஸ்மீர் பிரச்சனையால் இரு நாடுகளும் வரிந்துகட்டி நிற்கும் நிலையில் அணு குண்டுகளையும் கையில் வைத்துக் கொண்டிருப்பது அபாயம்தான். எனவே இரு நாடுகளுக்கும் இடையே சமாதானத்தை ஏற்படுத்த அமெரிக்கா முனைகிறது.

ஆனால் பில் கிளின்ரன் காஸ்மீர் பிரச்சனையில் கருத்துச் சொல்லி இந்தியாவில் அது வெறுப்புக்குள்ளாகி அமெரிக்கா இந்திய உறவுகளில் சங்கடங்களை ஏற்படுத்தி இருக்கிறது.

அமெரிக்க அதிகாரிகள் பாகிஸ்தானுக்கு சார்பாகவே நடந்துகொள்வதாக இந்தியா குறைபட்டுக்கொள்கிறது.

அணுகுண்டு வேண்டாம் என்று அமெரிக்கா பாகிஸ்தானுக்கு புத்தி சொன்னாலும்கூட போர்த் தளபாடங்களை தொடர்ந்து வழங்குவது இந்தியாவை கவலை கொள்ளவும் அமெரிக்காமீது கசப்பு கொள்ளவும் வைத்துள்ளது.

# அதிரடி அய்யாத்துரையாருக்கு ஒரு மடல்!

கொச்சிக்கா போடியார் எழுதுவது-

அதிரடி அய்யாத்துரை அண்ணய ஒருக்கா சந்திக்க வேணுமெண்டு நினைச்சநான். கொழும்பிலதான் நீங்கள் வாடி போட்டிட்டியல்போல. கொழும்புப் பக்கம் வரவேணுமெண்டு நினைச்சநான். சரியான பயம் எனக்கு. கொழும்புக்கு வாறத எண்ணினா கிருமி கலங்குது.

போன கிளம- பொடியனுக்கு வழக்குப்பேச காசோட வந்த இரண்டு பொண்டுகளும் மருதானை முக்குக்குள்ளே காடையும் குடுத்திட்டு தப்பினம் புழைச்சமெண்டு வந்திட்டினம். அண்ணய் அப்புச் சுப்பான காரு இல்ல. இருபத்தி ரெண்டாயிரம். இதயெல்லாம் நினைச்சு இப்ப வரமாட்டன் அண்ண.

இலக்சன் கிலச்சனெல்லாம் ஒஞ்சி போச்சி. எண்டாலும் ஒம்பது ஆட்கள் வெண்டபாட்டியில இருந்து ரெண்டு பேர இழுத்துத்து வாங்க, நாங்களும் வாற மெண்டு ஒரு கத. நாவக்குடா ஆத்துக்கால கொக்கட்டுச்சோல பக்கம் மெதுவாக அரட்டிட்டுப்போன மறுகா புடிச்சிப் பாக்கட்டும் எண்டு கதைச்சதாம். பிளான் புழைச்சிப் போயிட்டாம் அண்ண. கண்ணில எண்ண குத்தின மாதிரி இருந்ததால தான்..கள்ள வோட்டும் வெண்டு போட்டு, கடத்திற வேலைக்கு ஏன் போகவேணும் எண்டு ஆக்கள் கதைத்தாங்க.



அண்ண: இஞ்ச முசுப்பாத்தியாத்தான் ஆத்துக்கு அங்கால வயலுக்க போறதும் குறைஞ்சு போச்சு. வெள்ளாமையும் கையும், கணக்கும் சரிதான், என்றிரதால மிச்சமா செய்யுறதுமில்ல. ஏனென்டா அவனுகளும் கிடக்கானுகள். இவனுகளும் கிடக்கானுகள்.

இந்த சோலி தொந்தரவுக்குள்ள நாலு நெல்ல எறிவமென்டா எத்தின கட்டளைச் சட்டங்கள்.

முதலெண்டா கவுன்மெந்துலை ஏசண்டுத்துரையும் வந்து ஆரம்ப கூட்டம் போட்டா எல்லாம் சிக்காரா முடியும்.

டவுனுக்குள்ளயும் முதலப்போல நிண்டு கிண்டு கதைச்சிக்கயும் ஏலா.

செண்டியில்லோ இருக்கு.

ரெண்டு கிழமைக்கு முன்ன அரசடிக்கு கிட்ட நிண்ட பள்ளிப் பொடியனுக்கு வெடிப்பட்டு செத்துப்போனான். மிஸ்பராம் பொடியனும் அரசடி மகாஜன விலதான் நாலாம் ஆண்டில படிச்சவன். இன்னுமொண்டு - ஒண்டேயொண்டு கண்ணே கண்ணேயெண்டு வளர்த்த பொடியன் ஆண்டவனுக்குத்தான் கண்ணில்லையா எண்டு கதைக்காங்க.

மெய்தான் - பள்ளிப் பொடியன் செத்ததை எழுதைக்க இன்னுமொண்டும் நினைப்புக்கு வருகுது. பள்ளிக்கூடங்கள பாக்க 'டீம்' வந்ததாம். டவுனுக்குள்ள பெர்ம்புளப்புள்ளுற பள்ளிக்கொஸ்ட லுக்குள்ள ராப்பொழுதில போனதாம். வாச்சர் பொடியனும் கொஞ்சம் போட்டிருந்தவராம். செக்குப் பண்ணிறதுக்கு வந்திருந்தம் எண்டு சொல்லின்னாங்களாம். ராவில செக்குப் பண்ண போற வேல நல்லா இல்ல எண்டுத்து கதைக்கினம். நாணயமில்லாத இந்த வேலையைப் பத்தித்தான்.கத,சிவா சிவா எண்டு கையை வைக்கினம் தலையில.

இன்னுமொரு புதினம் அண்ணேய். டவுனுக்குள்ள உள்ள ஆம்பிளப் பள்ளிப் பொடியன் ஒருவன் -றோட்டில ஓடக்குள்ள- மோட்டார் சைக்கிளில பட்டுத்தான் சின்னக்காயம். அடிச்ச ஆளும், அடி வாங்கின பொடியனும் - இந்தப் பள்ளியிலதான் படிக்கானுகள்.

காயப்பட்ட பொடியன்ர அம்மா கல்லடிப்பக்கத்தில பிறின்சிபலாம். மோட்டார் சைக்கிளில வந்த பொடியன்ர அம்மா நேஸாம். பிறின்சிப்பல் அப்பா பிறின்சிப்பல் ஐயாவிட்ட இரண்டு நாளைக்கு புறகு வந்து ஏசிப்போட்டாவாம். என்ட மகனுக்கு ஏதும் நடந்திருந்தா-உன்ன மேடர் பண்ணியிருப்பமெண்டு நம்மட புள்ளயள வழிநடத்தி பெரியதாய் இப்படி பயப்படுத்திறதா எண்டு கேக்காங்க. மட்டக்களப்பில இதுதான் இப்ப கதை. வாற கிழம சீவனோட கிடந்தா எழுதுவன்.

## வாகனப்புகை உயிருக்குப் பகை!

வீதிகளில் செல்லும் வாகனங்கள் புகை கக்கிக்கொண்டு செல்லும்போது அலட்சியமாய் இருந்து விடாதீர்கள். அதில் ஆபத்து இருக்கிறது. ஆளைக்கொல்லும் ஆற்றல் அந்த விஷப் புகைக்கு இருப்பதாக இங்கிலாந்தில் கண்டுபிடித்திருக்கிறார்கள். பல தொற்று நோய்களும் ஏற்படுகின்றன.

இங்கிலாந்தில் தொழிற்சாலைகள் மற்றும் வாகனங்கள் வெளியேற்றும் நச்சுப்புகையால் ஆண்டுதோறும் பலியாவோர் எண்ணிக்கை என்ன தெரியுமோ? ஒன்று-பத்து-நூறல்ல. பத்தாயிரம்பேர்! ஜிக்கு புக்கு என்று புகைவிட்டுவரும் வாகனங்கள் அருகில் வரும்போது கவனம் மக்காள்! கவனம்!!

## எய்ட்ஸ் அதிர்ச்சி!

ஆபிரிக்க நாடான காங்கோவில் மக்கள் தொகை 25 இலட்சம். அந்த 25 இலட்சத்தில் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டோர் தொகை எவ்வளவு என்கிறீர்கள்? என்ன ஒரு ஆயிரம் பேர் இருக்குமா? இல்லை ஐயா இல்லை. 80 ஆயிரம் பேர்! இன்னொரு அதிர்ச்சி, அதில் 50 ஆயிரம்பேர் பெண்கள்! ஆண்டுதோறும் 6 ஆயிரம் பெண்கள் அங்கு எய்ட்ஸால் பாதிக்கப்படுகின்றனர்.

# தீக்குச்சி போன்ற தோற்றம்

## திசையெங்கும் தந்தது வெளிச்சம்!

தந்தை செல்வாவின் 17வது நினைவு தினம் ஏப்ரல் 26.
அவரது நீங்காத நினைவுகளோடு.... -அற்புதன்-

தேக்குமரத் தேகமல்ல. தீக்குச்சியை நிமிர்த்தி நிறுத்தி வைத்தது போன்ற தோற்றம்தான்.

அந்த தீக்குச்சியின் உதடுகள் உச்சரித்த ஒற்றுமை என்ற வெளிச்சத்தில் இங்கே திசைக்கொன்றாக சிதறிக்கிடந்த கட்சிகள் ஒரு கொடியின் கீழே ஒன்று திரண்டன.

அவர் நடந்து வரும்போது நிலம் அதிராது. ஆனால் தமிழ் பேசுவோர் நெஞ்சம் எல்லாம் இனிக்கும்.

வாள் ஏந்தி வீசும் வலிய கரங்களல்ல. ஆனால் ஒரு விரல் அசைந்தால் போதும் தமிழ் பேசும் மக்கள் கடல் அந்த உத்தரவுக்கு கட்டுப்படும்.

அதுதான் தந்தை செல்வா. உச்சரிக்கும்போதே தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையின் சின்னமாக உயர்ந்திருந்த கோபுர மனிதன். குன்றென உயர்ந்திருந்த தலைவன்.

அவர் உச்சரிக்கும்போது வார்த்தைகளுக்குக்கூட வலி இருக்காது. ஆனால் வருகின்ற வார்த்தைகள் வலிமை கொண்டவையாக இல்லாமல் போகாது.

கடுமையான வார்த்தைப் பிரயோகங்கள் கடுகளவும் கிடையாது. அதேபோல் கயமையான அரசியலுக்கும் அவரது அகராதியில் இடம் கிடையாது.

வாரிசு அரசியலுக்கு அவர் வழிகாட்டியதில்லை. தனக்கு அடுத்தபடியாக வளர்ந்துவரும் தலைமை மீதும் அவர் சந்தேகப்பட்டு வளர்ச்சியை தடுக்க சூழ்ச்சி வலை விரித்ததுமில்லை.

அதனால்தான் தந்தைக்குப் பின் தளபதி அமிர்தலிங்கம் என்று தொடர்ச்சியான தலைமைத்துவம் தோன்ற முடிந்தது.

மடியிலே கனம் இல்லாதபோது மனதிலே பயம் எழமுடியாது.

தந்தைக்கு உடலிலே பலவீனம் இருந்ததே தவிர உள்ளத்திலே உருக்கு நிகர் உறுதி இருந்தது.

எனவேதான், எங்கே தன்னை எடுத்தெறிந்து விடுவார்களோ என்ற சந்தேகம் இல்லாமல் இருந்தது.

பலவீனர்களாக இருப்பவர்களே சந்தேகப்படுகிறார்கள். பக்கத்தில் இருப்பவன் தன்னைவிட பலமானவனாக இருந்தால் பலவீனர்கள் பயப்படத் தொடங்கிவிடுவார்கள்.

அந்த பயம் கோஷ்டி சேர்க்கிறது. துதிபாடுகிறவர்களை தூக்கி தோளில் வைக்கிறது. துணிச்சலாய் செயல்படுகிறவர்களை தூக்கி எறிந்து ஓரம் கட்டுகிறது. அதுவே ஒற்றுமைக்கு உலை வைக்கிறது.

தனித்தலைவராக இருந்தே தந்தையால் கட்சி நடத்த முடிந்திருக்கும்.

தந்தையரின் சந்திப்பு



மென் தேக மனிதர் தந்தை செல்வா தமிழகம் சென்றபோது வெண்தாடி வேந்தர் தந்தை பெரியாரோடு! இருவரும் தாம் சொன்னவற்றை மறக்காதவர்கள். அரசியல் சித்து விளையாட்டுக்களை வெறுத்து வாழ்ந்தவர்கள். இருவருமே இன்றில்லையே!!

'நான்' என்ற அகங்காரம் அவரது அகராதியில் இருந்திருந்தால் கூட்டணி என்ற கூட்டுத்தலைமை கருக்கொள்ளக்கூட முடியாமல் போயிருக்கும்.

பலவீனம் மனதில் இருந்திருந்தால் ஜீ.ஜீ.என்னும் தனக்கு சமமாக இருந்த மற்றொரு தலைவரோடு கைகுலுக்கி "கூட்டுத்தலைமைக்கு சம்மதம் வாருங்கள்." என்று கூறியிருக்க முடியாது.

இரண்டு மணிநேரம் ஆங்கிலத்தில் பேசுவதே தலைமைத்துவத்திற்கு உரிய தகுதி என்ற விதியை இரண்டு வார்த்தைகள் உரத்து உச்சரிக்க முடியாத ஒரு தலைவனால் மாற்ற முடிந்தது என்றால் அது மந்திர சக்தியல்ல. தந்திர முயற்சியுமல்ல.

அவரிடம் உண்மை இருந்தது. உச்சரித்த வார்த்தைகளில் அந்த ஒளி தெரிந்தது. அந்த ஒளியிலே ஒற்றுமை பூவாகி, காயாகி கனியாகியது.

அவர் தந்துவிட்டுப் போன அந்த ஒற்றுமைக் கனியை நமக்குள் அடிபட்டுக்கொண்டதில் கைதவறி கீழே போட்டுவிட்டோம். கால்களுக்கிடையில் சிக்கி அந்த கனி நசுங்கிப் போவது தெரியாமல் தொடர்ந்தும் அடிபட்டுக் கொண்டிருக்கிறோம்.

இதுதான் இன்றைய அவலம். தகுதி இருக்கிறதோ இல்லையோ எல்லோருமே தலைவராக ஆசைப்பட்டதால் கனியைவிட கதிரைகள் மீதே கவனப்பட ஆரம்பித்தார்கள். அதுதான் சோகத்தின் தொடக்கம்.

இன்று ஒன்றுபடுத்த ஒருவருமில்லை. விட்டுக்கொடுத்து கைகுலுக்கிக்கொள்ள யாருமில்லை. கைகுலுக்கும்போதே காலை வாரிவிடவும் திட்டம் போடுவதால் உருவான ஒற்றுமைகளும் கால் பதித்துக் கொள்ள முன்னரே காணாமல் போய்விடுகின்றன.

விளம்பரத்துக்காகவே சகலமும் என்பதில் ஒற்றுமையும் உள்ளடக்கப்படுவதால் அரசியல் வானம் கறுத்த ஆடைக்குள் துக்கம் கொண்டாடிக்கொண்டிருக்கிறது.

தந்தையை நினைக்கும் இந்த வேளையில் அன்றைய நினைவுகள் நெஞ்சை நிரப்பி, மீண்டும் ஒரு விடியல் அரசியல் வானில் உதிக்குமோ என்ற வேதனை கலந்த எதிர்பார்ப்பு விசுவரூபமாய் எழுகிறது.

தந்தை செல்வாவுக்கு உண்மையான அஞ்சலி; மறுபடி இங்கே தமிழ் பேசும் மக்களது ஒற்றுமையும், ஒன்றுபட்ட கூட்டுத்தலைமைத்துவமும் உருவாகி எழுவதுதான்.

செல்வாவை நினைத்துக்கொண்டு அவர் சொன்னவற்றை மட்டும் வசதியாக மறந்துவிடுவது துரோகம். அந்த மாபெரும் மாசற்ற தலைவனுக்கு செய்யும் துரோகம். அதை மறவாதிருப்போம்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# 'ஐரிஷ் பாணி'யைத் தழுவிய ஹோட்டல் குண்டு வெடிப்புகள்!

கொழும்பில் இடம்பெற்ற ஹோட்டல் குண்டுவெடிப்புக்கள் பாதுகாப்புத்துறை வட்டாரங்களை உஷாரடையச் செய்துள்ளன. அத்துடன் தேர்தல் அமர்க்களங்களில் மூழ்கி தமது வெற்றி, தோல்விபற்றி பிரஸ்தாபித்து வந்த அரசியல் கட்சிகளை நாட்டு, நடப்புகளின் யதார்த்த நிலைகுறித்து எச்சரிப்பதாகவும் இக்குண்டு வெடிப்புக்கள் விளங்கியிருந்தன.

கொழும்பு மாநகர் குண்டுவெடிப்புகளுக்குப் புதிதானதொன்றல்ல. கடந்த பத்து வருட காலத்தில் பாரிய குண்டுவெடிப்புகள் கொழும்பின் பல்வேறு இடங்களிலும் இடம்பெற்றுள்ளன. இக்குண்டு வெடிப்புகள் பெருமளவில் உயிர், உடமைச் சேதங்களையும் ஏற்படுத்தியிருந்தன.

கொழும்பில் சில வருடங்களுக்கு முன்னர் புறக்கோட்டை, மருதானை ஆகிய இடங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்கள் பாரிய உயிர்ச் சேதங்களை ஏற்படுத்தியிருந்தன. நூற்றுக்குமதிகமானவர்கள் இக்குண்டு வெடிப்புக்களின் போது கொல்லப் பட்டிருந்தனர்.

இவைதவிர கட்டுநாயக்கா விமான நிலையத்தில் 'ஏயர் லங்கா' விமானமொன்றில் வைக்கப்பட்ட குண்டொன்று வெடித்ததிலும் பலர் கொல்லப்பட்டிருந்தனர். மேலும் கொழும்பு மத்திய தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு, வேறு சிறிய அளவிலான குண்டுவெடிப்புகளும் தலைநகரான கொழும்பில் பலத்த 'தலையிடி'யைக் கொடுத்திருந்தன.

மேற்குறிப்பிட்ட குண்டுவெடிப்புகள் தவிர கடந்த ஒரு சில வருடங்களாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படைப்பிரிவினர் என்று சந்தேகிக்கப்படுவோரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களும் பாரிய சேதங்களை உண்டுபண்ணியிருந்தன.

தற்கொலைப் படையினரின் தாக்குதல்கள் பல முக்கிய தலைகளை உருளச் செய்திருந்தன. தேசிய பாதுகாப்பமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன, கடற்படைத் தளபதி கிளான்ஸி பெர்னாண்டோ உட்பட நாட்டின் தலைவராக இருந்த ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவும் தற்கொலைப்படை நபர்களின் குண்டுத் தாக்குதல்களுக்குள்ளாகி மரணத்தைத் தழுவியிருந்தனர்.

இவைதவிர இரு வருடங்களுக்கு முன்னர் கொழும்பிலுள்ள கூட்டுப்படைத் தலைமையகமும் வெடிமருந்துகள் நிரப்பப்பட்ட வாகனமொன்றில் வந்த தற்கொலைப் படை நபர் ஒருவரினால் நாசமாக்கப்பட்டிருந்தது.

கொழும்பில் குண்டு வெடிப்புகள் ஏற்படுத்தியுள்ள தாக்கம் சாதாரணமானதல்ல. நாட்டின் ஜனாதிபதி முதற்கொண்டு, பாதுகாப்பமைச்சர், படைத்தளபதி ஆகியோர் உட்பட கூட்டுப்படைத் தலைமையகம், விமான நிலையம் மற்றும் பொதுசன மையங்கள் அனைத்தையுமே குண்டுகள் பதம்பார்த்தவையாகவே இருக்கக் காணப்படுகின்றன.

இந்நிலையில் கடந்த வாரங்களில் கொழும்பில் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களான தாஜ்சமுத்திரா, மரியட் ஆகியவற்றிலும் வெள்ளவத்தையில் உள்ள சபயர் ஹோட்டலிலும் மற்றும் கல்கிசை ஹோட்டலுக்கு அருகாமையில் வெடித்த குண்டுகள் உயிர் உடமைகளுக்குப் பாரியளவு சேதத்தை உண்டுபண்ணியிராத போதிலும், பாதுகாப்புக்குப் பெருமளவு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக இருக்கின்றன.

கொழும்பு மரியட், மற்றும் தாஜ் சமுத்திரா ஹோட்டல்களில் வெடித்த குண்டுகள் அந்த ஹோட்டல்களின் பளிங்கினாலான கழிவறைகளுக்குள்ளேயே வெடித்துள்ளன. வெள்ளவத்தை சபயர் ஹோட்டலிலும் கழிவறையிலேயே குண்டு வெடித்துள்ளது.

ஆனால் கல்கிசையில் ஹோட்டலுக்கு அருகாமையில் உள்ள கடற்கரைப் பகுதியில் குண்டு வெடித்துள்ளதுடன், அக்குண்டைக் காவிச் சென்றவர் எனக் கூறப்படும் அன்தனி அல்போன்ஸோ அருள்தாஸ் என்பவரும் உடல் சிதறுண்ட நிலையில் உயிரிழந்துள்ளார். அவருடன் சென்ற மகேந்திரன் மதிவண்ணன் என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

மரியட், தாஜ்சமுத்ரா ஆகிய ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் வெடித்த குண்டுகள் உல்லாசப் பயணத்துறையை முடக்கிவிடும் நோக்கத்தைக் கொண்டவையாகக் காணப்படுகின்றன என்று அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஆனால் மரியட், தாஜ்சமுத்ரா ஆகியன வெறுமனே பிரபலம் மிக்க ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் மட்டுமல்ல. தலைநகரின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளிலும் இந்த ஹோட்டல்கள் அமைந்திருக்கக் காணப்படுகின்றன.

கொழும்பு மரியட் ஹோட்டலையடுத்தே தற்போது ஜனாதிபதி அலுவலகக் கட்டிடமாக இருக்கும் பழைய பாராளுமன்றக் கட்டிடம் அமைந்திருக்கக் காணப்படுகின்றது.

தாஜ்சமுத்ரா ஹோட்டல், இலங்கையின் இராணுவத் தலைமையகத்தை அடுத்திருக்கக் காணப்படுகின்றது. எனவே இந்த இரு ஹோட்டல்களிலும் சிறிதளவு சேதத்துடன் வெடித்த குண்டுகள் எதிர்காலத்தில் பாரியளவிலான சேதங்கள் குறித்து எச்சரிப்பனவாகவே இருக்கக் காணப்படுகின்றன.

கடற்படைத்தளபதி கிளான்ஸி பெர்னாண்டோவைப் பலியெடுத்த தற்கொலைப் படை நபரின் குண்டு வெடித்ததும் தாஜ்சமுத்ரா ஹோட்டலை அண்டிய காலிமுகத்திடல் நெடுஞ்சாலையிலேயே என்பது குறிப்பிடத்தக்கது.

இக்குண்டு வெடிப்பு மிகச் சக்தி வாய்ந்ததாக இருக்கக் காணப்பட்டது. கடற்படைத்தளபதியின் கனமான அதிநவீன மெர்ஸிடஸ் பென்ஸ் மோட்டார் கார் இக்குண்டுவெடிப்பினால் (Mercedez Benz) தரையிலிருந்து சுமார் எட்டு அடி உயரம் வரை தூக்கி எறியப்பட்டிருந்தது.

இச்சக்தி வாய்ந்த குண்டு வெடிப்பு காலிமுகத்திடலை நோக்கியிருந்த தாஜ்சமுத்ரா ஹோட்டலையும் ஆட்டங்காணச் செய்திருந்தது.

ஹோட்டலின் படுக்கையறைகள் கிடுகிடுத்ததுடன், சிலவற்றின் ஜன்னல் கண்ணாடிகளும் நொருங்கியிருந்தன.

அச்சமயம் தாஜ்சமுத்ரா ஹோட்டலில் தங்கியிருந்த நியூஸிலாந்து கிரிக்கெட் அணியினரும் பெரும் பீதியடைந்திருந்தனர். அத்துடன் அவர்கள் தமது சுற்றுப்பயணத்தை இடைநிறுத்தி தாயகம் திரும்பவும் தயாராகினர்.


-ஜெரி அடம்ஸ்
ஐ.ஆர்.ஏ. அரசியல் பிரிவுத் தலைவர்

ஆயினும் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையினரின் மன்றாட்டமான வேண்டுகோள் மற்றும் அவர்களது பாதுகாப்புக் குறித்து வழங்கப்பட்ட உறுதிமொழி ஆகியனவற்றையடுத்து நியூஸிலாந்து அணியினர் இலங்கையில் தமது கிரிக்கெட் சுற்றுப்பயணத்தை தொடர முன்வந்தனர்.

இருந்தபோதிலும் நியூஸிலாந்து அணியின் சில முக்கிய ஆட்டக்காரர்கள் சுற்றுப் பயணத்திலிருந்தும் வாபஸ் பெற்று தாயகம் திரும்பியிருந்தனர்.

நியூஸிலாந்து கிரிக்கெட் அணியினருக்கு கடந்த ஆண்டின் ஆரம்பத்தில் காலிமுகத்திடலில் கடற்படைத்தளபதியைக் கொன்ற குண்டுவெடிப்பு, இலங்கையில் ஓர் இரண்டாவது அதிர்ச்சிதரும் அனுபவமாக விளங்கியிருந்தது.

ஏனெனில் சில வருடங்களுக்கு முன்னரும் நியூஸிலாந்து கிரிக்கெட் அணியினர் இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த வேளையிலேயே கொழும்பு புறக்கோட்டையில் பாரிய குண்டு வெடிப்பொன்று பலத்த உயிர்ச் சேதத்தை ஏற்படுத்தியிருந்தது. அச்சமயம் நியூஸிலாந்து கிரிக்கெட் அணியினர் விடாப்பிடியாக நாடு திரும்பியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையினரின் விசேட விருந்தினர்களாக இலங்கை வந்திருந்த நியூஸிலாந்து கிரிக்கெட் அணியினரே பெரும் பீதியுடன் நாடு திரும்ப முன்வந்திருந்தனராயின், தமது சுய விருப்பத்தின் பேரில் இலங்கைவரும் பல்வேறு நாடுகளினதும் உல்லாசப் பயணிகள் தலைநகரில் இடம்பெறும் அசம்பாவிதங்கள் குறித்து அடையும் கலவரம் எத்தகையது என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

1983ம் ஆண்டு ஆடிக் கலவரத்தின்போது கொழும்பில் பல்வேறு கட்டிடங்கள், மோட்டார்கார்கள் என்பன தீக்கிரையாக்கப்பட்டிருந்தன. இதனையடுத்து உலக வரைபடத்தில் இலங்கை ஓர் அபாயகரமான தேசமாகவே நோக்கப்பட்டிருந்தது.

1983ம் ஆண்டின் ஆடிக்கலவரத்தினால் இல்ங்கையின் உல்லாசப் பயணத்துறை பெரும்பாதிப்பையடைந்திருந்தது. தென்னிலங்கையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பல ஹோட்டல்கள் வெறிச்சோடலாயின. அத்துடன் உல்லாசப் பயணத்துறை சார்ந்த பல முதலீடுகளும் வாபஸ் பெறப்பட்டிருந்தன.

இருந்தபோதிலும் கடந்த ஓரிரு வருடங்களில் இலங்கையின் உல்லாசப் பயணத்துறை ஓரளவு மூச்சுவிட ஆரம்பித்துள்ள நிலையே தற்போது காணப்படுகின்றது.

இலங்கையின் உள்நாட்டு யுத்தம் வடக்கு-கிழக்கிலேயே இடம்பெறுகின்றது என்ற அரசாங்கத்தின் தீவிர பிரசாரம், மற்றும் தென்னிலங்கையில் ஜே.வி.பி.தீவிரவாதம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டமை போன்றவற்றையடுத்தே இலங்கைக்கு உல்லாசப் பயணிகளின் வருகையில் முன்னேற்றம் தோன்றியிருக்கக் காணப்படுகின்றது.

'கன்கார்ட்' என்ற உலகின் அதிவேக சுப்பர் சோனிக் ஜெட் விமானம் (Concord Supersonic Jet) பிரான்ஸ் நாட்டின் கோடீஸ்வரர்கள் பலரை ஏற்றிக்கொண்டு கடந்த மாதம் கொழும்பு வந்திருந்தது.

கன்கார்ட்டில் வந்த பிரெஞ்சு கோடீஸ்வரர்கள் உலக சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டு தம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சில நாடுகளுக்கே சென்றிருந்தனர். அவர்களால் தெரிவு செய்யப்பட்ட நாடுகளில் ஒன்றாக இலங்கையும் விளங்கியிருந்தது.

இவ்வாறு இலங்கை உல்லாசப் பயணிகளின் கவனத்தை மீளப்பெற ஆரம்பித்துள்ள இத்தருணத்திலேயே கொழும்பில் ஹோட்டல்களில் குண்டுகள் வெடித்துள்ளன.

## அலசுவது – இராஜதந்திரி

கடந்த மாதம் இங்கிலாந்தின் தலைநகரான லண்டன் நகரமும் மோட்டார் ஷெல் தாக்குதல்களால் (Motar shell) பெரும் கலவரமடைந்திருந்தது.

லண்டனின் ஹீத்ரோ(Heathrow) விமான நிலைய ஓடுபாதைகளில் இந்த மோட்டார் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருந்தன.

அச்சமயம் பிரிட்டிஷ் மகாராணியின் விமானம், மற்றும் இங்கிலாந்துக்கு விஜயம் செய்திருந்த இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் ஆகியோரின் விமானம் என்பன இந்த ஹீத்ரோ விமான நிலையத் தாக்குதல்களினால் அச்சுறுத்தல்களுக்குள்ளாகியிருந்தன.

வட அயர்லாந்தில் சுயாட்சிப் போராட்டத்தை நடத்திவரும் ஐரிஷ் கெரில்லாக்களே இந்த ராக்கெட் ஷெல் தாக்குதல்களை ஹீத்ரோ விமான நிலைய ஓடுபாதைப் பகுதியில் நடத்தியிருந்தனர்.

# ஜனாதிபதி செயலகத்தை அடுத்திருக்கும் 'மரியட்'; இராணுவத் தலைமையகத்தை அண்டியிருக்கும் 'தாஜ் சமுத்ரா'!

இத்தாக்குதல்களினால் ஹீத்ரோ விமான் நிலைய நடவடிக்கைகள் பலத்த அச்சுறுத்தல்களுக்குள்ளாகியிருந்தன. பொலிசாருடன் இராணுவத்தினரும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டு 'ஹீத்ரோ'வின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

> “'ஹீத்ரோ ஷெல் தாக்குதல்' பிரிட்டிஷ்–ஐ.ஆர்.ஏ. சமரசமுயற்சிகளை துரிதப்படுத்தத் தூண்டுவதாக இருக்கின்றது.”

பிரிட்டிஷ் பொலிஸ் நிபுணர்கள் மோப்பம் பிடிக்கும் நாய்களுடன் விமான நிலையச் சுற்றாடலை சல்லடைபோட்டுத் தேடுதல் நடத்தியிருந்தனர்.

இத்தேடுதலின்போது ஹீத்ரோ விமான நிலையத்தை அண்டிய கார்த்தரிப்பிடம், புற்தரைப்பகுதி, மற்றும் மரங்களடர்ந்த ஓர் ஒதுக்குப்புறம் ஆகியவற்றிலிருந்தே விமான நிலைய ஓடுபாதைகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

தேடுதல் நடத்திய பொலிஸ்-இராணுவ புலனாய்வுப் பிரிவினர் மோட்டார் ஷெல்கள் ஏவப்பட்ட கருவிகளையும் மேற்குறிப்பிட்ட இடங்களிலிருந்து' கண்டெடுத்திருந்தனர்.

ஹீத்ரோ விமான நிலையச் சூழலில் கார்த்தரிப்பிடம் ஒன்றிலிருந்து ஏவப்பட்ட மோட்டார் ஷெல், காரொன்றின் பின்புற இருக்கைப்பகுதியில் வைத்தே விமான நிலை ஓடுபாதையை நோக்கிப் பிரயோகிக்கப் பட்டிருந்தது.

மூன்று தடவைகள், பன்னிரெண்டு மோட்டார் ஷெல்கள் லண்டன் ஹீத்ரோ விமான நிலைய ஓடுபாதைப் பிரதேசத்தை நோக்கி ஐரிஷ் கெரில்லாக்களினால் பிரயோகிக்கப்பட்டிருந்தன.

ஆனால் இப்பன்னிரெண்டு மோட்டார் ஷெல்களில் ஒன்றாவது எவ்விதத்திலும் விமான நிலைய ஓடுபாதையையோ, விமான நிலையக் கட்டிடத்தையோ அல்லது விமான நிலையத்தில் ஏறி-இறங்கிய விமானங்களையோ தாக்கிச் சேதப்படுத்தவில்லை.

லண்டனில் மிகுந்த பரபரப்பை உண்டுபண்ணி சர்வதேச விமானச் சேவையிலும் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியிருந்த இந்த ஹீத்ரோ ஷெல் தாக்குதல்கள் குறித்து பிரிட்டனின் பாதுகாப்புத்துறை நிபுணர்கள் பல்வேறு விமர்சனங்களையும் வெளியிட்டிருந்தனர்.

பிரிட்டனின் 'த டைம்ஸ்' (THE TIMES) பத்திரிகையில் வெளியாகியிருந்த ஹீத்ரோ சம்பவம் குறித்த விமர்சனமொன்றில், “ஐரிஷ் (IRA) கெரில்லாக்களின் முக்கிய நோக்கம் ஹீத்ரோவில் உயிர் உடமைச் சேதங்களை உண்டு பண்ணுவதாக இருக்கக் காணப்படவில்லை. உலகின் கவனத்தை தம்பக்கம் திருப்புவதும், தாம் தொடர்ந்து விழிப்புடனும் பலத்துடனும் இருப்பதை பிரிட்டிஷ் அரசுக்கு உணர்த்துவதுமே ஐரிஷ் கெரில்லாக்கள் மேற்கொண்ட இத்தாக்குதலின் முக்கிய நோக்கமாக இருக்கலாம்” என்று பாதுகாப்புத்துறை நிபுணர் ஒருவர் குறிப்பிட்டிருந்தார்.

கொழும்பின் ஹோட்டல் குண்டுத் தாக்குதல்களும் இந்த ஐரிஷ் தாக்குதல் பாணியைத் தழுவியதாகவே இருக்கக் காணப்படுகின்றது.

ஹோட்டல்களில் வைக்கப்பட்ட குண்டுகள் பாரிய உயிர்-உடமைச் சேதங்களை ஏற்படுத்தவில்லை. ஆயினும் பாதுகாப்புத் துறையினருக்கு பலத்த அச்சுறுத்தலையும், எச்சரிக்கையையும் விடுப்பதாகவே அத்தாக்குதல்கள் அமைந்திருந்தன.

கல்கிசையில் வெடிகுண்டைக் காவிச் சென்ற வேளை அக்குண்டு தவறுதலாக வெடித்ததில் உயிரிழந்ததாகக் கூறப்படும் அந்தனி அல்போன்ஸோ அருள்தாஸ் என்ற நபர் குறித்தும், அவருடன் கூடச்சென்ற மகேந்திரன் மதிவண்ணன் என்ற நபர் மூலமான தகவல்களைக் கொண்டும், கொழும்பு ஹோட்டல் குண்டுவெடிப்புகளின் சூத்திரதாரிகள் தமிழீழ விடுதலைப் புலிகளே என்று பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆனால் தமிழீழ விடுதலைப்புலிகள் தமக்கும், இக்குண்டுவெடிப்புகளுக்கும் எதுவித சம்பந்தமுமில்லையென்றே யாழ்ப்பாணத்தில் வைத்து அறிவித்துள்ளனர்.

புலிகள் இக்குண்டுத் தாக்குதல்களுக்குத் தாம் பொறுப்பில்லையென்று கூறலாம். ஆனால் இதையொத்த அல்லது இதைவிட மோசமான தாக்குதல்களை நடத்தக்கூடிய வல்லமை அவர்களிடம் உண்டு என்பதற்கு அவர்களது இராணுவ ரீதியிலான வளர்ச்சி நல்ல சான்றாக இருக்கின்றது.

லண்டன் ஹீத்ரோ விமான நிலைய மோட்டார் ஷெல் தாக்குதல்களையடுத்து, ஐரிஷ் குடியரசு இராணுவத்தின் (IRA) அரசியல் பிரிவுத்தலைவர் ஜெரி அடம்ஸ் (Gerry Adams) கருத்து வெளியிடுகையில், “பிரிட்டிஷ் அரசுக்கும், ஐரிஷ் குடியரசு இராணுவத்துக்குமிடையிலான சமரச முயற்சிகளை 'ஹீத்ரோ சம்பவம்' எந்த வகையிலும் பாழாக்கிவிடாது. மாறாக பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சமரச முயற்சிகளை மேலும் துரிதப்படுத்தி விடுவதாகவே 'ஹீத்ரோ விவகாரம்' அமைந்திருக்கும்” என்று குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையைப் பொறுத்தவரை பாதுகாப்புத்துறையினர், ஹோட்டல்குண்டு வெடிப்புகளின் சூத்திரதாரிகள் தமிழீழ விடுதலைப்புலிகளே என்று கூறுகின்றனர். ஆனால் புலிகள் தமக்கும் இக்குண்டு வெடிப்புகளுக்கும் எதுவித சம்பந்தமுமில்லை என்று தெரிவித்துள்ளனர்.

ஆனால் கொழும்பில் பாதுகாப்புத்துறை வட்டாரத்தினர் குறிப்பிடுவதுபோல தமிழீழ விடுதலைப்புலிகளே கொழும்பு ஹோட்டல் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டிருப்பார்களேயானால், அவர்கள் 'ஐரிஷ் பாணி'யிலேயே நடந்து கொண்டுள்ளனர் என்றே கருதவேண்டியுள்ளது.

ஏனெனில் உயிர்-உடமைகளுக்குப் பெரும் சேதத்தை உண்டுபண்ணும் நோக்கத்தைப் புலிகள் கொண்டிருந்தால், சக்திமிக்க குண்டுகளை சனசந்தடிமிக்க இடங்களில் அவர்கள் வெடிக்க வைத்திருக்க முடியும்.

ஆனால் கொழும்பு ஹோட்டல்களில் வைக்கப்பட்ட குண்டுகள் எந்தவிதத்திலும் பாரிய சேதங்களை ஏற்படுத்தவில்லை. பாதுகாப்புத்துறையினர் குறிப்பிடுவதுபோல புலிகள் தான் இக்குண்டு வெடிப்புக்களை நடத்தியிருந்தால், அவர்கள் இரண்டு விதமான செய்திகளை இக்குண்டுகளின் மூலம் விடுத்துள்ளார்கள் என்றே கருத வேண்டியுள்ளது.

ஒன்று தமது பலத்தை நிரூபிப்பது; மற்றயது இராணுவத் தீர்வில் அரசு அக்கறையும், தீவிரமும் காட்டுவது குறித்து எச்சரிப்பது.

சபாநாயகர் எம்.எச்.மொஹமட் இம்மாத முற்பகுதியில் யாழ்ப்பாணம் சென்று புலிகளுடன் பேச்சு வார்த்தைகளை நடத்த முன்வந்திருந்தார்.

புலிகள் சபாநாயகரின் ஹெலிகாப்டர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மைதானத்தில் தரை இறங்கும் வகையில் விரிவான ஏற்பாடுகளையும் செய்திருந்தனர்.

ஆனால் சபாநாயகரின் யாழ்ப்பாண விஜயம் தடைப்பட்டமை, புலிகளுக்குமட்டுமல்ல நாட்டில் அரசியல் தீர்வில் நம்பிக்கை கொண்ட அனைவருக்குமே ஏமாற்றத்தையளிப்பதாக அமைந்திருந்தது.

இந்நிலையில் கொழும்பு ஹோட்டல்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகளில் புலிகள் சம்பந்தப்பட்டிருக்கலாம். அல்லது சம்பந்தப்படாதிருக்கலாம்.

ஆயினும் பாதுகாப்புத்துறையினர் கொழும்பு ஹோட்டல் குண்டுவெடிப்புகளுக்கு புலிகளே பொறுப்பாளிகள் என்று உறுதிபடத் தெரிவித்திருப்பதை அவதானிக்கும்போது, 'ஐரிஷ்பாணி'யில் இடம்பெற்றுள்ள அக்குண்டு வெடிப்புகள் சமரச முயற்சிகளின் அவசியத்தை மறைமுகமாக வலியுறுத்துவதாக இருக்கின்றதென்றே அர்த்தங்கொள்ள வேண்டியுள்ளது. ●

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# "பெண்ணே பெண்ணை புரிந்து கொள்வதில்லை இல்லற பந்தம் மலர்களால் ஆக்கப்படவேண்டும்"



தமிழ்நாட்டு காவல் துறையில் டி.ஐ.ஜி. தரத்திரல் உள்ளவர் திலகவதி. காக்கிச்சட்டைக்குள் உள்ள இலக்கிய இதயம். சமூகக் கொடுமைகளை சாடும் எழுத்தாற்றல். பெண் என்ற வகையில் தனிப்பட்ட, பொதுப்பட்ட ரீதியில் எல்லாம் கசப்பான அனுபவங்களை சந்தித்தும் சளைக்காமல் தனித்து நின்று போராடி இன்று கம்பீரமாய் உயர்ந்து நிற்கிறார்.
தனது கதை ஒன்றுக்காக திலகவதி எழுதிய முன்னுரையில் இருந்து சில முக்கிய பகுதிகள் இங்கே தரப்படுகின்றன.



ஆண்டுதோறும் பள்ளியிலும் கல்லூரியிலும் மாநிலத்தில் முதலாவதாக தேறி பாராட்டுக்களும், பரிசுகளும் பெறும் பெண்கள் பின்னாட்களில் எங்கே போய் மறைந்தார்கள்?

மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகளில் பரிசுகளை பெற்றுக்குவித்த பெண்மணி ஒருத்தி தனக்குள் இருக்கும் அத்திறமையை தானே மறந்து அல்லது மறுத்து அடுப்படியில் அடங்கிப்போகும் துர்ப்பாக்கியம் இங்கு எதனால் நிற்கிறது?

கல்யாணம் நம் பெண்களின் உள்ளார்ந்த திறமைகளை, மேதமைகளை, நிபுணத்துவத்தை போசித்து வளர்த்து அவளை மேலும் சிறப்புற ஓங்க வைக்கும் பணியை ஏன் செய்வதில்லை?

இது எவ்வளவு பெரிய சோகம்!

> "சட்டங்களும் சம்பிரதாயங்களும் ஏற்பட்டது வாழ்க்கையை வளப்படுத்தவா? வரண்டு போகச் செய்யவா?"

சல்வார் கமீஸ் அணிய ஆசைப்படுகிற, அதையே அணிந்து பழக்கப்பட்ட பெண்ணை திருமணம் சேலை கட்டிக்கொள்ள நிர்ப்பந்தப்படுத்துவது கூட கொடுமைதான் இல்லையா?

பெண்ணை சிதைக்கவோ திருமணம்? இல்லை அவளை செதுக்கவே அல்லவா?

காய் பழமாவது மாதிரி, மொட்டு மலராவது மாதிரி, திருமணம் மானிடரை ஒரு கட்டத்திலிருந்து இன்னொரு கட்ட வளர்ச்சிக்கு நகர்த்திச் செல்லும் சாதனமாக அல்லவா இருக்கவேண்டும்.

திருமணம் ஒரு பெண்ணுக்கு மேலும் மணம் ஊட்டுவதாக இல்லாமல் போவ தன்றியும், அவளை தேய்த்துச் சிதறிப்போக வைப்பது ஒரு பாவமே அல்லவா?

திருமணம், தன்னளவில் ஒரு பெண்ணின் போர்க்குணத்தை வற்றி வரளச் செய்து விடமுடியாது. என்றாலும் அவளுக்கு நேர்ந்த கசப்பான அனுபவங்கள் அவளை மாற்றி அமைத்துவிடுகின்றன.

நம் சமூகத்தில் நிலவும் பரிதாபகரமான கருதுகோள்களில் ஒன்று ஆண்-பெண் உறவாகும்.

ஆண் என்பதாலேயே பெண்ணை அந்தஸ்த்து முதலான தகுதிகளை காட்டி கவர்ந்துவிட முடியும் என்ற நோய் மனப்பான்மை நம் சமூகத்தில் எப்படியோ ஏற்பட்டுவிட்டது.

ஏற்கவும், மறுக்கவுமான உரிமை காதலின் அடிப்படை ஜீவாதாரங்களில் ஒன்று. அந்த உரிமையை பெண்கள் சரியான நேரத்தில் பிரயோகிக்க கற்றுக்கொண்டார்கள் எனில், வாழ்வின் பெரும்பாலான பிரச்சனைகளை அவர்கள் சுலபமாக நீந்திக் கரை சேரலாம்.

பெண்ணை பிறர் புரிந்து கொள்ள மறுக்கிறார்கள் என்பது ஒரு புறம், மறுபுறமோ பெண்ணே பெண்ணைப் புரிந்து கொள்ளாமல் மூத்த சகோதரியை இளையவள் புரிந்து கொள்ளாமல் இருப்பதும் பெண்களுக்கு எவ்வளவு இழுக்கு?

ஆணும், பெண்ணும் சேர்ந்து வாழும் வாழ்க்கை, ஏதோ, ஒரு அல்லது பல காரணம் பற்றி இருவரும் பிரிதல் அல்லது விவாகரத்து பெறுதல் என்ற முடிவுக்கு வருவார்களேயானால் அது இருபக்க ஊனமுமின்றி, மிக எளிதாக நிறைவேறுவதே நாகரீகமாகும். அதை விடுத்து ஒரு மூன்றாம் மனிதனின் முடிவை ஆண்டுக்கணக்காக எதிர்பார்த்து, ஒருவரை ஒருவர் இம்சித்துக் கொண்டு, ஒருவருக்கொருவர் இம்சையாகி, இளமையை, உடல் மற்றும் மனத் தேவையை, நலனை, சுகத்தை வாழ்வின் மிக மிக அரிய, இனிய காலகட்டத்தை இழப்பது எவ்வளவு பெரிய மனித சோகம்?

சட்டங்களும், சம்பிரதாயங்களும் ஏற்பட்டது மனிதனை வாழச் செய்வதற்காகவா; அல்லது வரண்டு போகச் செய்வதற்காகவா?

இல்லற பந்தம் மலர்களால் ஆனதா அல்லது இரும்பு விலங்கினால் ஆனதா? அவனுக்கும், அவளுக்கும் ஒத்துப்போக வில்லை என்றால் அதை ஒத்துக்கொள்வது தானே நாகரிகமான சட்டம்?

கிராமத்தில் மன வளர்ச்சி இல்லாத ஒருவனுக்கு ஒருத்தி வாழ்க்கைப்பட நேர்கிறது. மணமான நாள் துவங்கி அவளை அவன் அறிந்தவன் இல்லை. அறியும் வன்மையும் அவனுக்கு இல்லை. அவளைப் பெண்டாள அவனுடைய தந்தையே முயலுகிறான். இத்தகைய ஒழுங்கீனத்தை வெறுத்த அவள் தாய் வீட்டில் தஞ்சம் புகுகிறாள்.

காலம் நகர்கிறது. அங்கு அவள் ஒருவனைச் சந்திக்கிறாள். அவனுடன் சிநேகம் கொள்கிறாள். தன்னை அவள் புறக்கணித்ததற்காக அவள்மீது கோபம் கொண்ட மாமனார் அவளுக்கு அவப்பெயர் ஏற்படுத்தி, அவள்மீது குற்றம் சுமத்தி கோட்டுக்கு இழுக்கிறார். கோட்டில் அந்தப் பெண் தனக்கும், தன் காதலனுக்கும் உள்ள உறவின் நியாயத்தை புலப்படுத்துகிறாள் என்பது நான் எழுதியகதை.

வளரும் பிள்ளைக்கு ஏற்ப நாம் சட்டை தைக்க வேண்டுமே தவிர, புதுச் சட்டை வாங்குகிற வரைக்கும் பிள்ளையை வளராமல் நிறுத்திக்கொள்ளச் சொல்வது முட்டாள்தனம்."

## அழகுக் குறிப்பு

# அழகான கைகள் - ஆரோக்கியமான கால்கள்! முகத்தைப் பார்த்துக்கொண்டால் மட்டும் போதுமா?

## சில குறிப்புகள் - சில பயிற்சிகள்

நமது உடலைத் தாங்குவது- நடமாட வைப்பது - அன்றாட இயக்கத்துக்கு நமக்கு முற்று முழுதாக உதவுவது நமது கால்களே. இதனால் கால்கள் என்றும் ஆரோக்கியமாக இருப்பது இன்றியமையாதது.

பலர் தங்கள் முகங்களை மட்டும் அழகாக வைத்துக்கொண்டால்போதும் என்று கருதுகிறார்கள். வகை வகையான சோப்புக் களைத் தேய்த்து களிம்புகளைப்பூசி, பவுடர்களையும் கண்மை முதலான அலங்காரப் பூச்சுக்களைப் பூசிக்கொண்டால் சகலமும் சீராகிவிடும் என்ற கருத்தே பல பெண்களிடம் இருப்பதைக் காண்கிறோம்.

உண்மையான அழகு உடலின் அங்கங்கள் ஒவ்வொன்றையும் ஆரோக்கியமாகப் பேணிப் பாதுகாப்பதில்தான் தங்கியிருக்கிறது. முக்கியமாக நமக்கு பெரும் ஆதார-அத்திவாரமாகவிருக்கும் கால்களில் கவனம் செலுத்த வேண்டும். அதேபோல் கைகளிலும் போதுமான அக்கறை செலுத்தவேண்டும்.

கால்களில் பாதணிகள் இல்லாமல் வெளியில் நடமாடுவது தவிர்க்கப்படவேண்டும். வீட்டினுட்புறம் சுத்தமாக இருக்கும் என்பதால் அங்கெல்லாம் பாதணிகள் போட்டுத்தான் உலாவவேண்டும் என்பதில்லை. வீட்டினுள் பாத அணிகள் போட்டுத்தான் நடமாட வேண்டியிருந்தால், வெளியில் பயன் படுத்தப்படும் பாத அணிகளையோ கழிப்பிடங்களுக்குப் பயன்படுத்துவதையோ வீட்டுக்குள் போட்டு உலாவுதல் கூடாது.

கால்களை காலையிலும் மாலையிலும் நன்றாகக் கழுவி, துப்பரவான துணியினால் துடைத்துக்கொள்ள வேண்டும். முக்கியமாக விரல்களுக்கு இடைப் பகுதியில் ஈரலிப்பு இல்லாமல் துப்பரவாகத் துடைப்பது மிக மிக அவசியம்.

பாதம் முழுவதையும் மூடக்கூடிய சப்பாத்துக்களை அணிபவர்கள் அடிக்கடி அந்தச் சப்பாத்தினை கழற்றி கால்களில் காற்றுப்படும் படி பார்த்துக்கொள்ள வேண்டும். உறைபோடுபவர்கள் ஒருநாள் போடும் உறையை அடுத்த நாளும் அப்படியே போடுவது கூடாது. ஒவ்வொரு நாளும் சவர்க்காரம் போட்டுக்கழுவி நல்ல வெய்யிலில் உலர்த்தி எடுக்க வேண்டும்.

பாதங்களைக் கழுவும்போது வெதுவெதுப் பான நீரில் கழுவுவதே உகந்தது. சிறிதளவு உப்பையும் வெந்நீரில் கரைத்துக் கொள்ளலாம்.

ஒரு பெண்ணின் அங்கங்கள் ஒவ்வொன்றும் தனித்தனி அழகு காட்டுபவை. முகம்-கண், மூக்கு, அதரங்கள் ஆகியவையே முதலில் நோக்கப்படுகின்றன. அடுத்து அவள் சிரிப்பின்போது அவளுடைய பல்வரிசையின்



> "உண்மையான அழகு உடலின் ஒவ்வொரு அங்கங்களும் பேணிப் பாதுகாக்கப்படுவதில்தான் இருக்கிறது."

வனப்புக் கணிக்கப்படும். இதனை அடுத்தே அவளின் சிகை அலங்காரம் கவனத்தை ஈர்க்கும்.

ஒரு பெண்ணின் உத்தேச வயதைக் கணிக்க முற்படுபவர்கள் எப்போதும் அவளுடைய புறங்கையினை நோட்டமிடு வார்கள். அவளுடைய வயதை புறங்கையில் காணப்படும் நரம்புப் புடைப்புகள் காட்டிக் கொடுத்துவிடும். கையை நன்கு பேணாதவர்கள் கையின் அழகினை இழந்து விடுவார்கள்.

கைகளை சவர்க்காரம் போட்டு அடிக்கடி கழுவுவதால் மட்டும் கைகளின் அழகையோ ஆரோக்கியத்தையோ பேணிக் கொள்ளலாம் என்று கருதலாகாது. அடிக்கடி கை, மணிக்கட்டு, விரல்கள் ஆகியவற்றுக்கு சிறு சிறு பயிற்சிகளும் கொடுக்க வேண்டும்.

கைகளை-(முழங்கை முதல் விரல்கள் வரை) காலையிலும் இரவு படுக்கைக்குச் செல்லுமுன்னரும் வெந்நீரில் கழுவுதல் வேண்டும். இந்த வெந்நீருடன் ஒரு மேசைக்கரண்டி மா உப்பு கலந்து கொள்ள லாம். மணிக்கட்டிலிருந்து விரல்கள்வரை உப்பு நீரில்-இரு நிமிடங்கள்வரை அமிழ்த்தி வைத்து பின்னர் சாதாரண வெந்நீரில் கழுவி ஈரத்தை சுத்தமான துணியினால் ஒற்றி எடுத்துவிட வேண்டும்.

இரவில் படுக்கைக்குச் செல்லுமுன்னர் அல்லது காலையில் (கழுவுவதற்கு முன்னதாக) கைக்கு பயிற்சி கொடுக்கப்படுதல் நல்லது. கைகள் இரண்டையும் முன்புறமாக நீட்டி இறுக்கமான முஷ்டியாக்குங்கள். பின்னர் விரல்களை அகலமாக விரியுங்கள். இவ்வாறு 5 தடவைகள் செய்யுங்கள்.

இருபுறமும் கைகளை அகலமாக விரித்து பின்னர் முழங்கைகள் தோள்களின் அதே மட்டத்தில் இருக்கத்தக்கதாக இரு முன்கைகளையும் முன்புறமாக-கும்பிடும் நிலையில் - இரு கை விரல்களையும் ஒன்றுடன் ஒன்றாகப் பொருத்துங்கள். விரல்கள் பொருந்திய நிலையில் விரல்களை விசிறியைப் போல் விரித்து விரித்து ஒடுக்கி ஒன்று சேருங்கள். இவ்வாறு ஆரம்பத்தில் 10 தடவைகள் செய்யலாம்.

கைகளை மீண்டும் முன்புறமாக ஒன்றுடன் ஒன்று படாமல் நீட்டி-விரல்களை முஷ்டியாக்கிக்கொண்டு மணிக்கட்டிலிருந்து வலது புறமாகப் 10 தடவைகளும் இடது புறமாக 10 தடவைகளும் சுழலும்படி செய்து வாருங்கள்.

இந்தப் பயிற்சிகள் முடிவடைந்ததும் கைகளை சில நிமிடங்கள் சோர விட்டு பின்னர் மேலே குறிப்பிட்டதுபோல் கழுவிக்கொள்ளலாம். இப்பயிற்சியினால் உங்கள் கைகள் புத்துணர்ச்சி பெறும். கவர்ச்சியும் அழகும் சுடர்விட்டு பூரண பொலிவும் பெறும்.

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது-சுகந்தினி

### பிரட் பஜ்ஜி

**தேவையானவை-**

பாண்துண்டுகள்-8
கோதுமை மாவு-1/2 கோப்பை
மிளகாய்ப்பொடி- தேவையான அளவு
உப்பு-தேவையான அளவு
கரம்மசாலாப்பொடி-½ தே.கரண்டி

**செய்முறை:**

1. ரொட்டித் துண்டுகளை நான்கு பாகங்களாக வெட்டிக் கொள்ளவும்.
2. கோதுமை மாவில் மிளகாய்ப் பொடி, கரம் மசாலாப் பொடி, உப்பு சேர்த்துத் தண்ணீர் கலந்து பஜ்ஜி மாவு போல் தயாரிக்கவும்.
3. பாண் துண்டுகளை மாவில் தோய்த்து எண்ணெய்யில் பொரித்து எடுக்கவும். தக்காளி சோஸ்சுடன் சூடாகப் பரிமாறவும்.

பின்குறிப்பு: கோதுமை மாவுக்கு பதிலாக முட்டையை உபயோகித்தும் தயாரிக்கலாம்.

கூப்பன் பரிசுத் திட்ட இல-9

தினமுரசு-அருள் ஜுவல்லர்ஸ் இணைந்து வழங்கும் தங்க நகைப் பரிசுத் திட்டம்

தங்க நகைப் பரிசுத் திட்டத்தில் பங்குபற்றி வெற்றியீட்டும் அதிஷ்டசாலிகளில் முதல் அதிஷ்டசாலிக்கு தங்க நகை காத்திருக்கிறது.

ஏனைய பத்து அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.

1. மகளிர் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
2. இல 1 முதல் 20 வரையான பரிசுத்திட்ட கூப்பன்களைச் சேகரித்து வையுங்கள்.
3. சேகரித்து வைத்துள்ள கூப்பன்களைப் பின்னர் நாம் குறிப்பிடும் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்கலாம்.

## வீட்டுக் குறிப்பு



### அவசர தேவைக்கு

ஒரு முட்டையை எடுத்து உடைத்து, ஒரு கிண்ணத்தில் ஊற்றிக்கொள்ளவும். நன்றாக நுரை வரும்வரை முட்டையை அடித்துக்கொள்ளவும். அதில் அரை டம்ளர் பால் மற்றும் சுவைக்கு ஏற்றவாறு சீனி சேர்த்து கலக்கிக் கொள்ளவும். பாண் துண்டை இதில் தோய்த்து, தோசைக் கல்லில் போட்டு ரோஸ்ட் செய்யவும். சூடாக சாப்பிட்டுப் பாருங்கள். சுவையாக இருக்கும். ஜாம், வெண்ணை எல்லாம் தேடிக் கொண்டிருக்க வேண்டாம்.



இந்தப் புகைப்படத்தை வெளியிட்ட றிப்ளிதான் உலக சாதனைப் புத்தகமான கின்னஸின் முன்னோடி. பெயர்-றிப்ளி.

## நம்ப முடியாது ஆனால் நடந்துதான் இருக்கிறது!

## மூன்று காலோடு வாழ்ந்த மனிதன்

மனித பிறவியிலும் எத்தனை அதிசயங்கள். சிலவற்றை நம்பவே முடியாது. அத்தனை ஆச்சரியமாக இருக்கும்.

சிசிலி நாட்டில் பிறந்தவர் ஃபிரான்செஸ்கோ லென்டினி. மூன்று கால்களோடு பிறந்தார்.

எல்லோரும் விசித்திரமாகப் பார்த்தார்கள். 1930ம் ஆண்டுகளில் இவரது புகைப்படத்தை முதலில் வெளியிட்டவர் றிப்ளி. உலகின் பிரபல அதிசய பட தொகுப்பாளர்.

படம் வெளியானதோடு ஃபிரான்செஸ்கோவின் புகழும் பரவியது. "பஃபலோ பில்ஸ் வைல்ட் வெஸ்ட்" என்னும் காட்சியகத்தில் பெருந்தொகையான சம்பளம் கொடுத்து காட்சியாளராக நியமித்தார்கள்.

நடக்கும் போது இரண்டுகால்களை மட்டுமே பயன்படுத்துவார். மூன்றாவது காலை மடக்கி வைத்திருக்கலாம். இருக்கும்போது மட்டும் மூன்றாவது காலை நிலத்தில் ஊன்றிக் கொள்ளுவார். குந்தியிருக்க மூன்றாவது கால் மிக வசதி. ஆசனம் அவசியப் படாது.முக்காலி என்பதுபோல் இவரை முக்காலர் என்று அழைக்கலாம் அல்லவோ?

## இப்படியும் மனிதர்கள்

# கொடுத்ததெல்லாம் கொடுத்தான்!

# கொரில்லா குரங்காக வந்து கொடுத்தான்!!




வலது கை கொடுப்பதை இடது கை அறியக்கூடாது" என்பார்கள்.

ஆனால் வாங்கிக்கொள்பவருக்கு அந்தக் கைக்கு உரியவர் யார் என்று தெரிந்துவிடும் அல்லவா?

அள்ளித் தருபவர் யார் என்று பெறுபவர் அறியக்கூடாது என்றால் என்ன செய்யவேண்டும்?

படத்தில் பாருங்கள். கொரில்லா மனிதக் குரங்குபோல் கம்பீரமாக நடந்து வருவது யார் தெரியுமோ? ஒரு வள்ளல்- கொடை வள்ளல்.

வறியவர்களுக்கும் வாழ்க்கையில் நொந்து போனவர்களுக்கும் மாதக் கடைசி தினங்களில் வலியச் சென்று வாரி வழங்குகிறார்.

ஒருமுறை இப்படித்தான்; வாடகை கார் ஒன்றை ஏற்பாடு செய்துகொண்டு திரையரங்கம் ஒன்றுக்கு போயிருக்கிறார்.

கியூவில் நின்று கொண்டிருந்தவர்களுக்கு இவரைக் கண்டதும் ஆச்சரியம். யாரோ வேடிக்கை காட்ட குரங்கு உடையோடு வருகிறார் என்று பார்த்தால், இவரோ 50 டொலர் நோட்டுகளை எடுத்து கியூவரிசையில் நின்றவர்களிடம் நீட்டியிருக்கிறார்.

அவர்கள் முதலில் நம்பவில்லை. போலி நோட்டுக்களோ என்று இரு புறமும் திருப்பித் திருப்பி பார்த்திருக்கிறார்கள்.

ஒரிஜினல் நோட்டுக்கள்தான் என்று தெரிந்ததும் "ஐயோ தலைவா! நடமாடும் கொடை மன்றமே!" என்று பாராட்டியிருப்பார்கள். ஆனால் அவர் காரில் ஏறி மறைந்துவிட்டார்.

கூரையைப் பிய்த்து நஷ்டப்படுத்தாமல் கொரில்லா உடையோடு நேரில் வந்து கொடுக்கும் அந்த வள்ளல் யார் என்று வாடகை வண்டிக் காரர் விசாரித்து அறிந்துவிட்டார்.

அவர் பிரபல தொழிலதிபராம். பெயர் ஜோன் டோ.

# தகவல் பெட்டி

## ஓரம்போ-ஓரம்போ!

## பாரமுள்ள வண்டி வருது!!

யாழ்ப்பாணத்தில் சைக்கிள்தான் இன்று கைகொடுக்கும் கண் கண்ட வாகனம். பெற்றோல் விலை பேருந்துக் கட்டணம் அதிகம். சைக்கிளே சகல சுமைகளையும் தாங்குகிறது. வாழைக் குலைகள்தான் முன்னர் சைக்கிள்களில் கட்டிக் கொண்டு செல்லப் படும். இப்போது வாழ்க்கைக்கு தேவை யான அனைத்து பொருட்களையும் சைக் கிளே சுமக்கிறது. போரில் மிதிபடும் வாழ்வை மிதி சைக்கிள் நிமிர்த்த முயல்கிறது.




இங்கே உள்ள படம் வெளிநாடொன் றில் சைக்கிள் மூலம் பத்திரிகை விநியோகம் செய்பவர்கள் வீதியில் செல்லும் காட்சியாகும். வெளிநாட்டிலும் நம் மைப் போலவே கஷ்டப்படுகிறவர்கள் இருக்கிறார்கள் என்பது நம்மவர்களுக்கு ஒரு சிறு ஆறுதலாய் இருக்குமல்லவா? அதற் காகவே இந்தப் படம்.

இன்னொரு செய்தி. இலங்கையில் சைக்கிள் ஓட்டுவோர் சங்கம் ஒன்று இருக்கிறது. அதன் கிளைகள் யாழ்ப் பாணத்தில் இருப்ப தாகத் தெரியவில்லை. நியாயமாகப் பார்த்தால் அந்தச் சங்கத்தின் தலைமையகம் கூட யாழ்ப்பாணத்தில்தான் இருக்க வேண்டும்.

# வயிற்றிலே வளரும் தலை இல்லாத உடல்!

# பிழைப்பு நடத்த அதுவே உதவி!!



தமிழ்நாட்டில் வேலூர் பகுதியில் உள்ள விநாயகத்திற்கு இப்போது 29 வயது.

பிறக்கும்போதே ஊனத்தோடு பிறப்பது கொடுமைதான்.

விநாயகம் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவர். அரைகுறை உடல் ஒன்று அவரது வயிற்றுப் பகுதியில் ஒட்டியபடி இருக்கிறது.

இரு பெரிய கால்களும், இரு சிறிய கைகளும் அந்த தலையற்ற உடலுக்கு இருக்கின்றன.

சத்திரசிகிச்சை செய்தால் உயிருக்கு ஆபத்து வரும் என்று மருத்துவர்கள் எச்சரித்தனர். மேலும் பண வசதியும் இல்லை.

இப்போது மேலதிக உடலின் புண்ணியத்தில் விநாயகத்தின் வாழ்க்கை ஓடுகிறது.

விநாயகத்தின் சொந்த ஊர் வேலூர்தான்.

அங்கிருந்தால் பிழைப்புக்கு வழிதேட முடியாது என்று கேரள மாநிலத்திற்குச் சென்றுள்ளார்.

தற்போது கேரள மாநிலத்தில் உள்ள தளிப்பறம்பு பஸ் நிலையத்தில் தனது வயிற்றில் உள்ள மேலதிக உடம்பைக் காட்டி பிழைப்பு நடத்தி வருகிறார்.

தன்னுடைய உடலில் வளரும் மற்றிரு கைகளையும் தன் கைகளால் அசைத்து சில்லறை நாணயங்களை வாங்கிக் கொள்ளுகிறார்.

விநாயகத்திற்கு திருமணமாகிவிட்டது. இரு குழந்தைகளும், மனைவியும் வேலூரில் இருப்பதாக கூறுகிறார். அவர்களது பெயர் விபரங்களை வெளியிட மறுக்கிறார்.

தினசரி வசூலில் ஒரு பகுதியை 'மணி ஓடர்' மூலம் வீட்டுக்கு அனுப்பி வைத்து விடுவதாகக் கூறுகிறார்.

மேலதிக உடலின் எடை அதிகமாக இருப்பதால் படுத்துத் தூங்குவதுதான் சிரமம்.

பணம் கொடுத்தால் மட்டுமே புகைப்படம் எடுக்க போஸ் கொடுப்பது என்பதில் அசைக்க முடியாத உறுதி விநாயகத்திற்கு.

பணம் வாங்கிக் கொண்டு அவர் கொடுத்த 'போஸ்'தான் இங்கே உள்ளது.

## பாதணிக்கும் கிடைக்கும் விருது



விருது வாங்க விழா மேடையில் ஏறும்போது சமயங்களில் காலணிகளைத் தூரவைத்துவிட்டுச் செல்லுகிறோம்.

"பாரடா இத்தனை தூரம் காலுக்கு துணையாக வந்தோமே, கௌரவம் பெறும்போது மட்டும் நம்மை நைசாக கழற்றிவிட்டுப் போகிறார்களே என்று காலணிகள் கவலைப்படக்கூடும்.

சமீபத்தில் சீனாவில் நடந்த தேசியக் காலணிகள் விழா அந்தக் கவலையைப் போக்கிவிட்டது. படத்திலுள்ள காலணிதான் விழாவில் வென்று விருது வாங்கியது. நீளம் 1.55 மீட்டர். இதனை செய்துமுடிக்க ஒரு வாரம் ஆனதாம்

www.padippakam.com

நன்றி - [illegible]

### விளம்பரம் இல்லாத உதவிகள்—ரஜினி பற்றி பிரியா

[illegible]



# விசிட்

சரத்குமாருக்கு நீண்ட நாள் ஆசை ஒன்று இருக்கிறது.

இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் வேடத்தில் நடிக்க வேண்டும்.

தனது ஆசையை நிறைவேற்ற வேறு தயாரிப்பாளர்கள் முன்வராவிட்டால் சொந்தமாகவே ஒரு படம் தயாரித்து சுபாஷ் சந்திரபோஸ் வேடத்தில் நடித்துவிடும் எண்ணமும் இருக்கிறது.


தற்போது பல நூலகங்களுக்குச் சென்று சுபாஷ் சந்திரபோஸ் சம்பந்தப்பட்ட சரித்திர விபரங்களைத் திரட்டி வருகிறார். நூலகங்களில் பூரண ஒத்துழைப்பு தருகிறார்கள் இல்லை என்றாலும் முயற்சியை விடுவதாக இல்லை என்கிறார் சரத். 'மகா பிரபு' படத்தில் கள்ள மார்க்கெட்டில் டிக்கட் விற்பவராக நடித்துக் கொண்டிருக்கிறார்.

## சரித்திர ஆராய்ச்சியில் சரத்

### சவால்

குஷ்பூ, நக்மா, அசுவரி வரிசையில் பம்பாயில் இருந்து தமிழுக்கு வருகிறார் ரவீனா. 'சாது' படத்தில் வாசு இயக்கத்தில் அர்ஜுனின் ஜோடி. உயரம் 5 அடி 6 அங்குலம். எடை 60 கிலோ. குஷ்பூவுக்கு மற்றொரு சவால்.





கோடை வெயிலில் குளிர்காய்கிறது-பன்னீரில் நனைந்த பன்னீர் ரோஜா!

### வந்து குவியும் காதல் கடிதங்கள்

இன்றைய இளம் நடிகர்களில் அதிகமான காதல் கடிதங்கள் வருவது பிரசாந்துக்கு.

தினசரி காதல் கடிதங்கள் வருகின்றன. உடைத்து கை வலிக்கிறது என்கிறார் பிரசாந்த். மறைந்த நடிகை திவ்ய பாரதியுடன் நடித்துள்ள 'இளம் நெஞ்சே வா' தனது நிலையை மேலும் உயர்த்தும் என்று பிரசாந்த் நம்புகிறார்.

### காமேஸ்வரனாக கமல்

மைக்கேல் மதன காமராஜன் படத்தில் கமலுக்கு நான்கு வேஷங்கள். அந்தப் படத்தில் வரும் மலையாள காமேஸ்வரனை மட்டும் மையமாக வைத்து விரைவில் கமல் நடிக்கவுள்ளார். கதை தயாராகி வருகிறது.



## லட்சுமியின் ஆசைகள்...

பாரதீய ஜனதாக் கட்சியில் சேர்ந்துகொண்ட நடிகை லட்சுமி ஆரம்பத்தில் தீவிரம் காட்டினார். பின்னர் சத்தத்தையே காணவில்லை.

தற்போது மீண்டும் அரசியலில் ஆர்வம் காட்டுகிறார்.

பாரதீய ஜனதா கட்சிதான் அடுத்த தேர்தலில் இந்தியாவில் ஆட்சியைப் பிடிக்கும். தமிழ் நாட்டில் கோவில்கள் அதிகம் இருப்பதால் பாரதீய ஜனதாவை பலம் வாய்ந்த கட்சியாக்கி விடலாம் என்று ஆசைப்படுகிறார். பாரதீய ஜனதா கட்சியின் தமிழகத் தலைவியாக லட்சுமிக்கு ஆசை என்கிறார்கள் மற்றக் கட்சிக்காரர்கள்.

பெண்கள் முன்னேற்றத்திற்கு பாடுபடுவதே தனது இலட்சியம் என்கிறார் லட்சுமி. நோக்கம் நல்லதுதான். அவர் சேர்ந்துள்ள கட்சிதான் விவகாரமான வில்லங்கமான கட்சி.

### குஸ்பூவிடம் 55

குஷ்பூ வெளிநாடுகளுக்குச் சென்றால் விரும்பிவாங்கும் பொருட்களில் முக்கியமானது கைக்கடிகாரம். மொத்தமாக 55 கைக்கடிகாரங்கள் விதம் விதமான வடிவங்களில் வைத்திருக்கிறார். படப்பிடிப்புக்களுக்கு வரும்போது தினம் ஒரு கைக்கடிகாரத்துடன் வரும் இரகசியம் அதுதான்.

### அண்ணாவின் கதை படமாகிறது

பேரறிஞர் அண்ணாவின் பல கதைகள் ஏற்கனவே படமாகியுள்ளன.

அண்ணா எழுதிய வேலைக்காரி கதை தமிழ் சினிமா வரலாற்றில் திருப்பமாக அமைந்த படமானது. இப்போது அண்ணாவின் கதை ஒன்று 'பணத்துக்குப் பின் பாசம்' என்று பெயரில் படமாகிறது. இயக்கி இசையமைக்கப் போகிறவர் கங்கை அமரன்.

### "எப்படிப் பிடிக்குமோ அப்படி நடிக்க ரெடி"

"சினிமா பார்க்க வரும் இரசிகர்கள் பொழுது போக்கிற்காகத்தான் சினிமா பார்க்க வருகிறார்கள். அவர்களுக்கு எப்படி நடித்தால் சந்தோசமாக இருக்குமோ அப்படி நடிக்க நான் தயார்." இப்படிச் சொல்லியிருப்பவர் அரண்மனைக்கிளி புகழ் அகானாதான்.

அகானா பெரிதும் எதிர்பார்க்கும் படம் 'சீவலப்பேரி பாண்டி'.

## காதோடு சொல்லுகிறோம்


* கோகுல நாயகியான பிரிய நடிகைக்கு மார்க்கெட் உயருவது மாதிரித் தெரியவில்லையாம். அதனால் வரன்தேடும் படலம் இரகசியமாய் நடக்கிறதாம். மார்க்கெட் உயரா விட்டால் நடிகைகள் நாடுவது மணவறைதான்.
* நீலக்கண் நடிகை நடித்த சில படங்கள் பப்படங்கள் ஆனதால் இராசியில்லாத நடிகை என்று கோடம்பாக்கம் வட்டாரத்தில் பேச்சு அடிபடுகிறது. மூட் அவுட் ஆகியிருக்கிறார் நடிகை.
* 'கௌ' நடிகை பம்பாய் தொழிலதிபர் ஒருவரோடு இராசியாகி இருக்கிறாராம். பம்பாயில் வெற்றிக்கொடி நாட்டப்போவதாக கூறிக்கொண்டு பத்திரிகைகளுக்கு அமர்க்களமான தோற்றங்களில் போஸ் கொடுத்தும் வாய்ப்பு வரவில்லை. வெறுத்துப் போனவருக்கு தொழிலதிபர் அபயக்கரம் நீட்டியிருக்கிறார்.
* இராவண நாயகி நடிப்பை மட்டும் நம்பியிருக்காமல் ஆடைகள் ஏற்றுமதி தொழிலும் செய்துவருகிறார். நல்ல வியாபாரமாம். படங்களில் ஆடைகளை குறைத்துக்கொண்டாலும், வெளிநாடுகளுக்கு புதுவிதமான ஆடைகளை அனுப்பி வைக்கிறார்.
* மான் நடிகை இப்போதெல்லாம் தான் நடித்த கவர்ச்சியான காட்சிகளின் புகைப்படங்களை பிரபல பட நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கிறாராம். உடல் கட்டைப் பார்த்தவுடன் ஒப்பந்தம் செய்ய ஓடி வருவார்கள் என்று ஒரு நம்பிக்கை. ஆனால் யாரும் எட்டிக்கூடப் பார்க்காததுதான் குறை.
* இரண்டெழுத்து இயக்குநர் பம்பாய் நடிகையை இறக்குமதி செய்திருக்கிறார். தாராளமாக ஒத்துழைக்கக்கூடியவர் என்பதால் தமது சான்ஸ் எல்லாம் பறிபோய்விடுமோ என்று கோடம்பாக்க நடிகைகள் வட்டாரம் கவலைப்படுகிறதாம்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



நெஞ்சு பொறுக்கு திலையே-இந்த
நிலை கெட்ட மனிதரை நினைந்துவிட்டால்,
அஞ்சி யஞ்சிச் சாவார்-இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே;
வஞ்சனைப் பேய்கள் என்பார்-இந்த
மரத்தில் என்பார்; அந்தக் குளத்தில் என்பார்;
துஞ்சுது முகட்டில் என்பார்-மிகத்
துயர்படுவார்; எண்ணிப் பயப்படுவார்.

-சுப்பிரமணிய பாரதியார்-



## மனதில் பொறிக்க

எவன் பிறரது நற்செயல்களைக் கண்டு மகிழ்ச்சி கொள்வதில்லையோ அவனால் எந்த நற்காரியத்தையும் செய்ய முடியாது.
-மார்க்ஸ் அன்ரனி-

கங்கை நீர் சிறந்தது. அதனிலும் சிறந்தது அபிஷேக நீர். அதனிலும் உயர்ந்தது ஏழைகட்காக உழைக்கும் உத்தமனுடைய முகத்தில் துளிர்க்கும் வியர்வை நீர்.
-திருமுருக கிருபானந்த வாரியார்-

மற்றவர்கள் உனக்கு என்ன செய்யக் கூடாது என்று நினைக்கிறாயோ அதை நீயும் மற்றவர்களுக்குச் செய்யாதே.
-கன்பூசியஸ்-

நமக்கு வேண்டியது மனிதரைப் படைக்கின்ற ஒரு மதம்; நமக்கு வேண்டியது எங்கும் மனிதரை உருவாக்குகிற கல்வி; நமக்குத் தேவை மனிதரை உருவாக்குகிற கோட்பாடு.
-சுவாமி விவேகானந்தர்-

தொகுப்பு-கந்தப்பெருமாள் நிமலதாசன்
ஆண்டு-10, மாங்காடு சரஸ்வதி வித்தியாலயம்,
செட்டிபாளையம்.

### பாப்பா முரசு சிறுகதை

# கொழுக்கட்டை சாமியாரின் தோல்வி

ஓர் ஊரிலே ஒரு சாமியார் இருந்தார். அவருடைய தாடி நரைத்திருப்பதால் அவரை அனைவருமே வெள்ளை முடிச்சாமியார் என்றே அழைத்தனர். ஊர் மக்கள் அனைவரும் அவருக்குக் கொழுக்கட்டை செய்து கொண்டு கொடுப்பார்கள். அவர் அதைத் தவிர வேறு எதையும் சாப்பிடுவதில்லை. ஆதலால் அவருக்குக் கொழுக்கட்டை சாமியார் என்கிற மற்றொரு பெயரும் இருந்தது. அச்சாமியாருக்குப் பொற்காசுகளைத் தவிர வேறு எதையும் காணிக்கையாகச் செலுத்தக்கூடாது என்கிற நிபந்தனை இருந்ததால் அவரிடம் நிறைய பொற்காசுகள் சேர்ந்தன.

ஒருநாள் கொழுக்கட்டைச் சாமியார் ஊர் ஜனங்கள் அனைவரையும் தம்முடைய ஆச்சிரமத்திற்கு வரச் சொன்னார். சாமியார் ஏதாவது புதிய செய்தியை அறிவிக்க அவ்வாறு அனைவரையும் அழைப்பது வழக்கம். ஏதோ புதிய நற்செய்தியைச் சொல்லப்போகிறார் என்கிற ஆவலுடன் அனைவரும் ஆச்சிரமத்தை அடைந்தனர்.

"ஓம் சச்சிதானந்தம். நான் சொல்லப் போவதைக் கவனமாகக் கேளுங்கள். எனக்கு வயது அதிகமாகிக்கொண்டே போகிறது. இதுவரை எவரையும் சீடனாக ஏற்றுக் கொள்ளாமலேயே இருந்துவிட்டேன். எனது மறைவுக்குப் பிறகு இந்த ஆச்சிரமத்தைக் கட்டிக்காக்க உங்களுள் ஒருவரைச் சீடனாக ஏற்றுக்கொள்ள நினைக்கிறேன். அதற்குப் பொருத்தமானவர் யார் என்பதை நீங்கள் தான் முடிவு செய்ய வேண்டும். அதற்காகவே உங்களை அழைத்தேன்," என்றார்.

கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது.

"நான் தயார்" என்றவாறே பல கைகள் உயர்ந்தன.

சாமியார் தொடர்ந்து சொன்னார்.

"அவசரப்படாதீர்கள். என் வாரிசாக நியமனம் செய்யப்படப் போகிறவருக்கு ஒரு போட்டி வைக்கப் போகிறேன். அதில் யார் ஜெயிக்கிறார்களோ அவரையே வாரிசாக நியமனம் செய்யப் போகிறேன்," என்றார்.

"என்ன போட்டி? சீக்கிரம் அறிவியுங்கள்," என்று பல குரல்கள் அவசரப்பட்டன.

"அமைதியாக இருங்கள், சொல்கிறேன். என்னுடைய பணப்பெட்டியில் உள்ள பொற் காசுகளை இங்கே குவிக்கப் போகிறேன். யார் அதைக் கையில் தொடாமலேயே எண்ணிச் சொல்கிறாரோ? அவரே என்னுடைய சீடராவார்," என்றார்.

கூட்டத்தில் கசமுசவென சனங்கள் பேசிக்கொண்டனர்.

"கையில் தொடாமல் பொற்காசுகளை எப்படி எண்ண முடியும் ஸ்வாமி?" என்று ஒரு பெரியவர் எழுந்து கேட்டார்.

"முடியும். அதைச் சாதிப்பவனே என் சீடனாவான். என்று முதலே அறிவித் திருந்தேன். இப்போதும் அதையே தான் கூறுகிறேன்."

கூடியிருந்தவர்கள் ஒவ்வொருவராக சாமியாரின் நிபந்தனைக்குப் பயந்து கலைந்து போகலானார்கள். ஆனால், ஒரே ஒருவன் மட்டும் போகாமல் பொற்குவியலையே பார்த்துக் கொண்டிருந்தான்.



சாமியார் அவனை நோக்கி, "ஏனப்பா நீ மட்டும் போகாமல் இருக்கிறாய்? பொற் காசுகளை எண்ணப்போகிறாயா?" என்றார்.

"சுவாமி தாங்கள் அனுமதித்தால் இப்பொழுதே எண்ண ஆரம்பிக்கிறேன்," என்றான்.

"தாராளமாக எண்ண ஆரம்பிக்கலாம். நன்றாக ஞாபகமிருக்கட்டும் பொற்காசுகளைக் கையால் தொடக்கூடாது."

"உத்தரவு சுவாமி," என்றவாறே, "ஒன்று, இரண்டு, மூன்று..." என வாயால் எண்ண ஆரம்பித்தான்.

அரை மணி நேரமாயிற்று., ஒருமணி நேரமாயிற்று அவன் எண்ணிக்கொண்டே போனான்.

"ஒன்பதாயிரத்து எட்டு, ஒன்பதாயிரத்து ஒன்பது...."

மூன்று மணி நேரமாயிற்று. சூரிய அஸ்தமனமாகி இரவும் வந்தது. அவன் தொடர்ந்து எண்ணிக்கொண்டே இருந்தான்.

சாமியாரின் பொறுமை எல்லையைக் கடந்தது.

"நிறுத்தப்பா.... நீ எண்ணிக்கொண்டே போகிறாயே, எப்போது தான் நிறுத்துவாய்?" கேட்டார்.

"பொற்காசுகள் தீர்ந்ததும் எண்ணுவதை நிறுத்தி விடுவேன் சுவாமி."

"இன்னும் எத்தனை எண்ண வேண்டும் தெரியுமா?"

"தெரியும். மொத்தப் பொற்காசுகளின் எண்ணிக்கையில் இருந்து இதுவரை எவ்வளவு எண்ணியிருக்கிறேனோ அதைக் கழித்துவிட்டால் மீதி எவ்வளவு இருக்கிறதோ அவ்வளவு."

"மொத்தம் எவ்வளவு இருக்கிறது என்று உனக்கு எப்படித் தெரியும்?" கொஞ்சம் கடுமையாகவே கேட்டார் சாமியார்.

"தெரியும் சுவாமி! மீதி எவ்வளவு இருக்கிறதோ அதை இது வரை எண்ணிய பொற்காசுகளுடன் சேர்த்துக் கூட்டினால் தெரிந்து விடும்."

"என்ன என்னைக் குழப்புகிறாய்!"

"நான் குழப்பவில்லை சுவாமி, தாங்கள் தான் குழம்பிப் போயிருக்கிறீர்கள். நான் எண்ணும் போது இடையே பேச்சுக்கொடுத்து நான் எண்ணியதை மறக்கும்படி செய்து விட்டீர்கள். பரவாயில்லை. நான் மறுபடியும் முதலில் இருந்து எண்ணுகிறேன்," என்ற அவன் மறுபடியும் முதலில் இருந்து, "ஒன்று, இரண்டு, மூன்று" என எண்ண ஆரம்பித்தான்.

சாமியாருக்கு எரிச்சல் வந்தது. என்றாலும் அதை அடக்கிக் கொண்டு புன்னகைத்தார்.

"தம்பி! எனக்குச் சீடனாக வருபவன் ஒரு பொறுமைசாலியாகவும், அதே சமயம் மதியுகம் படைத்தவனாகவும் இருக்க வேண்டும் என விரும்பித்தான் இப்படி ஒரு சோதனைப் போட்டியை ஏற்பாடு செய்தேன். பொறுமையிலும், மதியுகத்திலும் நீ என்னை மிஞ்சி விட்டாய். அதனால் நீயே என்னுடைய சீடனாவாய். இன்று முதல் நீ அப்பதவியை அடைவாய்," என்றார்.

"நன்றி சுவாமி" என்றவன் குருவின் பாதங்களைத் தொட்டுக் கும்பிட்டுவிட்டு அன்றையிலிருந்து சீடனாகப் பதவியேற்றான்.

## அறிவோம் மனதில் பதிவோம்

உலகின் மக்கள் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. ஒரு நாளைக்கு சராசரி 2 இலட்சத்து 60 ஆயிரம் குழந்தைகள் உலகில் பிறக்கின்றனர். ஒரு நிமிடத்திற்கு 180 குழந்தைகள் பிறக்கின்றன.



வேட்டை நாய் இனத்தைச் சேர்ந்தவை கிரே ஹவுண்ட் வகை நாய்கள். வேகமாக ஓடும். இவற்றுக்கான ஓட்டப் பந்தயம் 1919ம் ஆண்டில் அமெரிக்காவில் முதன் முதலில் நடத்தப்பட்டது.





ஒல்லாந்து 'ஹொலண்ட்' நாட்டில் ஆம்ஸ்டர்டாம் நகரில் 1928ம் ஆண்டு நடந்த ஒலிம்பிக் போட்டியில் தான் முதன் முதலாக பெண்களுக்கான தடகளப் போட்டிகள் நடத்தப்பட்டன.




டென்மார்க்கில் 1961ம் ஆண்டு ஜூன் மாதம் 25, 26 திகதிகளில் ஒரேபன்றி 34 குட்டிகளைப் போட்டது. ஒரே பிரசவத்தில் அதிகம் குட்டிகளை ஈன்ற பன்றி இதுதான்.

உலகில் 102 ஆண்களுக்கு 1000 பெண்கள் என்ற கணக்கில் மக்கள் தொகை இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. குறைந்த எண்ணிக்கையில் ஆண்களைக் கொண்ட நாடு முன்னர் இணைந்திருந்த ரஷ்யா. 1000 ஆண்களுக்கு 1112 பெண்கள் என்ற கணக்கில் மக்கள் தொகை இருந்தது.



## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 30.04.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 37
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்
கிருலப்பனை,
கொழும்பு-05.

## வண்ணத்துப் பூச்சி

-செழியன் பேரின்பநாயகம்



1. வண்ணத்துப் பூச்சியே-வண்ணத்துப்பூச்சியே
வருவாயா என்னருகே.
வண்ணத்துப் பூச்சியே-வண்ணத்துப் பூச்சியே
தருவாயா உன் சிறகை-எனக்கு
பகிர்வாயா உன் அழகை.

2. வண்ண நிறம் சொட்டும்
வண்ணத்துப் பூச்சியே
வந்திடு என்னருகே.
-சொந்தமாய்
இருந்திடு என்னருகே.

3. வட்டமிட்டுச் செல்லும்
வண்ணத்துப் பூச்சியே-நீ
வானத்தில் பறப்பாயோ.
-இல்லை
கானத்தில் சிறப்பாயோ.

4. தேன் உண்ணும் வேளையில்
தேடி அலைந்து நீ
தேன் மலர் கண்டாயோ
-ஆமென்றால்
தேன் சொட்டு தருவாயோ
-எங்களுக்கு
தேன் கிண்ணம் தருவாயோ.

5. பூவிலே நீ முட்டி
பூவாகி தேன் உண்ணும்
புதுமையை என் சொல்வேன்
-உன்
புகழ்தன்னை என்னென்பேன்.

6. எண்ண அலைகளை
விண்முட்டச் சொல்லியும்
உன் திறன் அறிவேனோ-நான்
உயரந்தான் பறப்பேனோ.

7. பிள்ளைகள் நாங்கள்.
பிடித்துன்னை மகிழ்ந்திட
மெல்ல நீ வருவாயோ-இல்லையென்றால்
பூ தேடிப் பறப்பாயோ.

-வண்ணத்து....பூச்சியே....

## விடுகதைகளும் விடைகளும்

1. பகலில் தூங்குவான். இரவில் விழித்திருப்பான். அவன் யார்?
2. ஒன்று இல்லாமல் உயிரினம் உயிர்வாழ முடியாது. அது என்ன?
3. சித்திரையில் சிறுபிள்ளை. வைகாசியில் வளர்பிள்ளை. ஆனியில் அழகுப் பிள்ளை. ஆடியில் விழும்பிள்ளை அது என்ன?
4. கடலிலே மலரும்பூ. பெண்கள் கூந்தலில் வைக்கா பூ. சமயலுக்கு தேவைப்படும் பூ. அது என்ன பூ?
5. பொக்கை வாய் திறந்தால் முத்து கொட்டுமாம் அது என்ன?

**விடைகள்**

[illegible]

ஜெஸ்மிலா ஜீனு இக்பால்
கொட்டாஞ்சேனை முஸ்லிம் வித்தியாலயம்-கொழும்பு.

1. சுளகு நிறைய சோளம்பூ. விடிந்து பார்தால் ஒன்றுமில்லை. அது என்ன?
2. முட்டை நிறைய முத்துக்கள். அது என்ன?
3. ஆக்கும் கறிக்கும் ஆகும் பூ. அனைவரும் உணவாய் கொள்ளும் பூ. தலையிலே சூடிக்கொள்ளாப் பூ. தரணியில் என்ன பூவாகும்?

[illegible]

ஏ.டபிள்யூ.எப். நஸீஹா, எம்.எப். நஸ்ரின்
மனாருல் உலூம் மகாவித்தியாலயம்-கம்பிரிகஸ்வெவ.

## வர்ணம் தீட்டும் போட்டி இல. 34

**பரிசுக்குரியவர்**
செல்வன்.பு.ஸ்ரீகாந்
மண்டூர் மகா வித்திரலயம்
மண்டூர்.

**பாராட்டுக்குரியவர்கள்**

கீத்தா தவபால்
இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்
வவுனியா.

செல்வி. சிவபாலன் அகிலா
ஸ்ரீஇராமகிருஷ்ண வித்தியாலயம்
மண்டூர்.

க. றெக்ஷன் ஜெயக்காந்
நாமகள் வித்தியாலயம்
கல்குடா.

செல்வி.ராதிகா சிவகுமார்
சண்முக வித்தியாலயம்
காரைதீவு-03.

செல்வன்.வி.ஜெயரூபன்
விவேகானந்தா தமிழ் வித்தியாலயம்
கல்முனை.

பி.எம்.எம். மாஜீத்
நடுத்தீவு-மூதூர்.

அருமைத்துரை பிரகாஷ்
புனித சவேரியார் மகாவித்தியாலயம்
திருகோணமலை.

எஸ்.ஷரீபா ஜன்னா
ஆமினா மகா வித்தியாலயம்
மாத்தளை.

ஸ்போர்ட்ஸ்

# "கடுகு சிறிது-காரம் பெரிது"

**-பிரட்மன்-**

"எனது பொறுமையைச் சோதிக்க யாராவது முற்பட்டால்- சவாலை சந்திக்க தயாராகவே இருக்கிறேன்."

உலகில் இன்று பிரபல விளையாட்டு வீரர்கள் வரிசையில் சச்சின் டெண்டுல்கர் முக்கிய இடம் பெறுகிறார்.

ஐந்து வருடங்களுக்கு முன்னர் தமது 16வது வயதில் இந்திய கிரிக்கெட் அணியில் டெண்டுல்கர் இடம்பிடித்தார். இன்று தமது 20 வயதில் ஒரு கைதேர்ந்த வீரருக்குரிய முதிர்ச்சியுடன் இந்திய அணியின் உப தலைவராக டெண்டுல்கர் விளங்குகின்றார்.

இந்தியாவில் மட்டுமல்ல, இந்திய அணி பிறநாடுகளில் விளையாடும்போதுகூட டெண்டுல்கரின் ஆட்டத்தைப் பார்வையிட இரசிகர்கள் முண்டியடித்து நிற்கின்றனர்.

அண்மையில் இந்திய அணி நியூஸிலாந்தில் கிரிக்கெட் சுற்றுப் பயணமொன்றை மேற்கொண்டிருந்தது. அப்போது டெண்டுல்கரின் ஆட்டத்தைப் பார்வையிட நியூஸிலாந்து நாட்டவரே மைதானங்களை மொய்த்திருந்ததுடன் டெண்டுல்கரின் துடுப்படியை மெய்மறந்து இரசித்தனர். தாம் ஆடிய மைதானங்களின் அனைத்துப் புறங்களிலும், பந்தை லாவகமாகவும், கச்சிதமாகவும் அடித்து தமது துடுப்படிக்கென நியூஸிலாந்தில் டெண்டுல்கர் முத்திரை பதித்துக்கொண்டார்.

கிரிக்கெட்டில் சர்வதேச ரீதியாக இடம் பிடித்து ஐந்து ஆண்டுகளை டெண்டுல்கர் பூர்த்தி செய்துள்ளார். இந்த ஐந்து ஆண்டு காலத்தில் ஏழு டெஸ்ட் 'செஞ்சரி'களை அவர் பெற்றுள்ளார். அத்துடன் மட்டுப் படுத்தப்பட்ட ஆட்டங்களிலும் பெருமளவு ஓட்டங்களை எடுத்துள்ளார்.

உலகின் தலை சிறந்த பந்துவீச்சாளர்களுக்கெல்லாம் முகங்கொடுத்துள்ளார். உயர்ந்த தரத்திலான மைதானங்களி லெல்லாம் விளையாடியுள்ளார். இந்திய கிரிக்கெட் விமர்சகர்கள் டெண்டுல்கரை ஒரு 'அபூர்வப் பையன்' என்றே வர்ணித்து வருகின்றனர்.

அண்மையில் இந்தியாவின் பிரபல விளையாட்டுச் செய்திச் சஞ்சிகையான 'ஸ்போட் ஸ்டார்' (Sport star) டெண்டுல்கரின் இன்றைய நிலை-அவரது எதிர்பார்ப்புகள் குறித்து போட்டியொன்றை நடத்தியிருந்தது.

சச்சின் டெண்டுல்கர் ஸ்போர்ட்ஸ்டார் சஞ்சிகைக்கு கூறிய சில முக்கியமான விஷயங்கள் இதோ:

"நான்கு வருடங்களுக்கு முன்னர் நான் பாகிஸ்தானுடன் எனது முதலாவது டெஸ்ட் பந்தயத்தை ஆடினேன். அப்போது சலக பந்துகளையும் விரட்டி அடிக்கவேண்டுமென்றிருந்தது. ஆனால் இப்போது நிதானமாக விளையாடுகிறேன். துடுப்படியில் என்னிடம் முதிர்ச்சி ஏற்பட்டுள்ளதை நான் உணருகிறேன். ஆயினும் எனது பொறுமையைச் சோதிக்க யாரும் முற்பட்டால் சவாலை ஏற்கத் தயாராகவே இருக்கிறேன்.



## 'அபூர்வப் பையன்' டெண்டுல்கர்

"கடந்த ஒரு வருட காலமாக இந்திய அணியின் உப காப்டனாக இருக்கிறேன். ஆனால் காப்டன் பதவியை அஸாருதீனிடம் இருந்து பறித்தெடுக்கும் அவசரம் என்னிடம் இல்லை. அப்பதவி என்னை நாடி வரும்போது அதனை நான் ஏற்றுக்கொள்வேன்.

"ஒரு நல்ல காப்டன் தனது அணியிடமிருந்து நல்ல பங்களிப்பைப் பெறவேண்டும். எத்தகைய சூழ்நிலையிலும் அணியை துணிவுடன் வழிநடத்த வேண்டும். சக ஆட்டக்காரர்கள் அணித்தலைமையை ஏற்றுக்கொள்ளுமளவுக்கு தலைமைத்துவப் பண்பை காப்டன் கொண்டிருக்க வேண்டும்.

"அணியில் வயதில் குறைந்த ஆட்டக்காரராக இருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். என்னோடு சிரேஷ்ட ஆட்டக்காரர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் என்னை நேசிக்கிறார்கள். எனவே கபில்தேவ் போன்ற வயதில் முதிர்ந்த ஆட்டக்காரர் உட்பட அனைவரையும் நான் மிகவும் நேசிக்கிறேன்.

"கிரிக்கெட்டில் தனிநபர் ஆட்டத்தைவிட, அணியின் ஒன்றுபட்ட ஆட்டமே முக்கியமானதாகும். எவருடனும் நான் போட்டி, பொறாமை கொள்வதில்லை. இந்திய அணி வெற்றியைப் பெறவேண்டும், அதற்காக ஒவ்வொரு ஆட்டக்காரரும் உழைக்கவேண்டும். இதுவே நான் எதிர்பார்க்கும் பந்தயமாகும்." என்கிறார் டெண்டுல்கர்.



# தேன் கிண்ணம்

### வா, அல்லது வராமற்போ

என்னைத்
தனிக்கவிட்டுத்
தவிக்க வைத்தவனே,
தாலிகட்டி
வேலி போட்டவனே,
இன்னும் என்னை
எத்தனை நாளைக்குத்தான்
விழிச் சமுத்திரத்தில்
நிற்கவைப்பாய்.........?

□□

நாளை நாளை என
பல நாளைகள்
நேற்றுகளாயின.
இன்றும் நீ,
வராமல் போனால்
என்றுமே
வராமற்போ.

□□

ஒரு சுகாந்த
அனுபவத்தை
என் உணர்வுகளுக்குள்
ஊசடித்து விட்டு
உலகியம் தேடப்
போனவனே....

□□

பழைய சாதத்தை
அன்பில் குழைத்துத்
தருகிறேன் வா....
எட்டடிக் குடிசையின்
எல்லா மூலைகளையும்
இன்பமாக்கித் தருகிறேன்
வா.....

□□

இன்னும் என்னையே
உனக்குத் தயார்பண்ணி
எண்ணிலடங்காச் சுகம்
தருகிறேன் வா....
ஆசைகள் கோடிவைத்து
ஆடம்பரங்கள் தேடி
அலைந்தது போதும்
வா......

□□

அசந்த பொழுதுகளில்
தலை கோதி
அன்பு தருகிறேன்
வா...

□□

இத்தனைக்குப் பின்னும்
நீ வராமல் போனால்.....
மடியும் உணர்வுகளுடன்
என் இளமை தொலைத்து
சுருங்கிப்போன
வாலிபத்தைக் காண
என்றுமே வராமற்போ.

-ஐ.எஸ்.எம். நிபாஸ்-





### இன்றின் நியதி

"அம்மா" என்ற
அழுகுரலோடு
துப்பாக்கி இசையில்
ஒரு பாட்டுப்
பதிவாகிப் போகும்-இத்
தேசத்தின்
தேசிய கீதமாய்-இல்லை
தினசரி கீதமாய்.

இதயங்களும்
இறுகிப் போகும்
பாறைகளின்
பதத்துக்கு

உண்மைகள்
ஒதுங்கிக் கொள்ளும்
சம்பவங்கள்
சம்பாத்தியமாய்ப் போகும்
இன்னொரு தேசத்தின்
விமர்சனத்துக்காக,

விலை வாசியாய்
மனிதம் மட்டும் இங்கு
மலிந்து போகும்.

காரணங்கள்-மீண்டும்
கை குலுக்கிக் கொள்ளும்,
இன்னொரு
குருதியாற்றின்
திசை திருப்புத்திட்டத்துக்கு

திட்டத்தின்
(அ)லட்சியமாக
அமைச்சரின் நாமத்தில்
ஆயிரம் வீடும் ஊரும்-ஓர்
மூலையில்
அமைவாகிக் கொள்ளும்.

மற்றுமோர் மூலையில்
முகாரிகள் பாடும்
முகாம்கள் செறிவாகி
பட்டினி விரிசல்
ஆபிரிக்க நாட்டு
எலும்புக் கூடுகளை
இங்கும் பிரசவிக்கும்.

நிவேப்பிரியன்
பொத்துவில்-03.

### இன்று இதுதான்....

யுத்த பூமிக்கு
நித்தம்
இரத்ததானம்
செய்யும்
இளமைக்குள்
இனிமை காணும்
வாலிபங்கள்.

ஜனநாயக தேசத்தில்
நிம்மதியாய்
சமாதி அடைந்துவிட்ட
சமாதானம்.

துப்பாக்கிக் குண்டுக்குள்
விடுதலை காண(த்)
துடிக்கும்
மானுடம்.

ஆயுதங்களை(க்)
கொண்டு
அழிவுப் பாதையை
செப்பனிடும்
அராஜகம்.

அநாதை அகதி
என்ற
அந்தஸ்துடன்
இருளை நோக்கி
உயிர்களின்
இறுதி யாத்திரை.

காலக் கண்ணாடியில்
எமது தேசத்தின்
நாட்டு நடப்புகள்
இன்று இதுதான்....!

திருமதி கிறேஸ் தங்கராஜா
வந்தாறுமூலை.



### காதலின் முடிவு?

தட்டச்சு வேகம் போல்
ஆரம்பித்த நமது காதல்
ஹயர் ஸ்பீடில் வந்து நின்றது
தட்டச்சில் நான்போட்ட
பக்கங்கள் வேறு
அதில் அச்சிட்ட நம்
எழுத்துக்கள் ஒன்று
தேர்வுக்கு ஆயத்தமாகும்
மாணவர்கள் போன்று
திருமண வயதுக்கும்
வந்துவிட்டோம் நாமின்று

சாதி என்ன சமயம் என்ன
சீர் என்ன கேள்விகள்
சிக்கல்கள் தான் என்று
சின்னமான நம் காதல்
ஏற்கவில்லை காதலை
எழுந்தது புயல் ஒன்று

இரு தலை கொள்ளிபோல்
இருவர் மனம் போனதடா
இளமையில் இழந்தோம்
வசந்தமான இனிமையை
இன்றே தான் சொல்கிறோம்
மானிட காதல் மாயம் தானடா.

தெ.லோஜனா-கொழும்பு-15.

### அவள் அமாவாசையாய்.

நிர்வாணமாய் நீலவானம்
அந்த இரவில்
ஒளி வீசிய சந்திரனாய்
அவள் நினைவு.

□□

என் மூளைத் திசுக்கள்
அவளின் நினைவுகள்
தேங்கியதால்
சிதிலமாகிப் போய்க் கிடந்தன.

□□

அவள்
ஈரநினைவுகளை உடுத்தி
பாதி உறக்கமாய்
படுத்துத் தொலைத்த
எத்தனையோ....?
ராத்திரிகள்!

□□

இன்னும்
கரிசனையாய்
அவள் மௌன அர்த்தத்தை
அலசி அலசி
ஆராய்ச்சி செய்து
மனதில் விருட்சமாய்
வளர்ந்து நிற்கும் வெறுப்புகள்!

□□

இன்று
நீலவானம் நிர்வாணமாகவில்லை
அவளின் முடிவைப் போல்
எல்லாம் அமாவாசை பூத்து
ஆக்கிரமித்திருந்தது.

பாண்டியூர்-அ.குமணன்.



### சின்னக் கவிதைகள்

### எண்ணக் கிறுக்கல்கள்

அக்கினியை
தனக்குள்
அடிமையாக்கும்
வலிமை மிக்க
சாகசக்காரி
'தண்ணீர்'

••

மனித வாழ்க்கை
இன்பத்திற்காக
அணுவணுவாக
தேய்ந்து
சாகும் தியாகி
'செருப்பு'

••

மனிதனாகப்
பிறந்து
மனிதனாக
வளர்ந்து
மும்மூன்று
நிறம் காட்டி
மாறுவது
'பச்சோந்தி'

••

காதல்
நாடகத்தின்
ஒரு
இன்ப ஒத்திகை
'முத்தம்'

••

வஜுர்தீன்.எம்.ரைஷ்.
கிண்ணியா.

### தேர்தல்கள்

பகிரங்க சட்டமறுப்புக்கள், பயமுறுத்தல்கள்,
படுகொலைகள்;
அடக்குமுறைகள், ஆட்கடத்தல்கள்;
கள்ள ஓட்டுக்கள், கண்துடைப்புக்கள்
தேர்தல்கள்......
மனித விழுமியங்களின் மரணத்தில்
புதிதான ஜனநாயகத்தின் ஜனனம்.

-இளம்பூரணன்-இரத்மலானை.



# இந்த வாரம் உங்கள் பலன்

**(24.04.94 முதல் 30.04.94 வரை)**

சோதிட மாமணி 'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மேடம் | - சூரியன், புதன் (25.04.94ல்-கேது) |
| இடபம் | - வெள்ளி, கேது |
| துலாம் | - வியாழன் (25.04.94ல்- இராகு) |
| விருட்சிகம் | - இராகு |
| கும்பம் | - சனி |
| மீனம் | - செவ்வாய் |

இவ்வாரம் கன்னி, துலாம், விருட்சிகம், இராசிகளில் சந்திரன் சஞ்சரிப்பார்.

### மீனம்:

(புரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- செய்தொழில் விருத்தி, முன்னேற்றம். | பி.ப 3 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, மனத் தைரியம். | காலை 7 மணி |
| செவ்வாய்- வீண் பிரயாசம், செலவு மிகுதி. | பி.ப 1 மணி |
| புதன்- பணத்தடை, காரியானுகூலம். | காலை 10 மணி |
| வியாழன்- பெரியோர் நட்பு, முன்னேற்றம். | பி.ப 2 மணி |
| வெள்ளி- தெய்வ நம்பிக்கை, முயற்சி பலிதம். | காலை 8 மணி |
| சனி- பூமியால் இலாபம், முதலீட்டு மேன்மை. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 7

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பயமிகுதி, குடும்பக் கலகம் | காலை 6 மணி |
| திங்கள்- அந்நியர் நட்பு, செய்தொழில் விருத்தி. | பகல் 12 மணி |
| செவ்வாய்-இனசனக் கொண்டாட்டம், செலவு மிகுதி. | பி.ப 3 மணி |
| புதன்- காரிய சித்தி, பொருள் வரவு. | பி.ப 2 மணி |
| வியாழன்- எடுத்த காரியம் வெற்றி, முயற்சி மேன்மை. | பி.ப 3 மணி |
| வெள்ளி- தனலாபம், தெய்வ நம்பிக்கை. | பி.ப 1 மணி |
| சனி- மனச் சஞ்சலம், காரியக் கேடு. | பி.ப 4 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 3

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- துயர் நீங்கும், புதிய முயற்சி. | பி.ப 1 மணி |
| திங்கள்- வீண் அலைச்சல், செய் தொழில் நட்டம். | காலை 7 மணி |
| செவ்வாய்-உறவினர் பகை, மனக்கவலை. | பி.ப 2 மணி |
| புதன்- தூரஇடப் பயணம், பணவிரயம். | காலை 8 மணி |
| வியாழன்- பெரியோர் நட்பு, முன்னேற்றம். | காலை 9 மணி |
| வெள்ளி- காரிய சித்தி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| சனி- கௌரவம், முயற்சி மேன்மை. | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 9

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- செய்தொழில் விருத்தி, முன்னேற்றம். | காலை 7 மணி |
| திங்கள்- உறவினர் உதவி, பணவிரயம். | பி.ப 1 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, பயணம். | காலை 9 மணி |
| புதன்- கருமங்களில் வெற்றி, செலவு மிகுதி. | காலை 10 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், பிறரால் உதவி. | பகல் 12 மணி |
| சனி- அந்நியர் நட்பு, கௌரவம். | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், புரட்டாதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- அந்நியர் நட்பு, காரிய சித்தி. | பி.ப 2 மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, முயற்சி மேன்மை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- உறவினர் உதவி, கௌரவம். | பி.ப 3 மணி |
| புதன்- மனமகிழ்ச்சி, பிரயாண கஷ்டம். | காலை 7 மணி |
| வியாழன்- வீண் மனஸ்தாபம், கவலை அதிகம். | பி.ப 2 மணி |
| வெள்ளி- பொருள் வரவு, மனச் சந்தோஷம். | காலை 7 மணி |
| சனி- கௌரவக் குறைவு, முயற்சித்தடை. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 8

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தேகசுகம் பாதிப்பு, முயற்சி மேன்மை. | பி.ப 3 மணி |
| திங்கள- மனமகிழ்ச்சி, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| செவ்வாய்- பொருள் வரவு, காரியானுகூலம். | காலை 9 மணி |
| புதன்- பயணங்களில் வெற்றி, முன்னேற்றம். | பகல் 11 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, தொழில் மேன்மை. | பி.ப 1 மணி |
| வெள்ளி- வீண் மனஸ்தாபம், தெய்வ நம்பிக்கை. | காலை 8 மணி |
| சனி- செய்தொழில் உயர்ச்சி, கௌரவம். | பி.ப 3 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 3

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டது முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- காணிபூமி மாற்றம், மனக்கவலை. | பி.ப 1 மணி |
| திங்கள்- காரியானுகூலம், உயர்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- பொருள் நட்டம், மனப் பயம். | பி.ப 2 மணி |
| புதன்- பயனற்ற செயல், மறைமுக எதிர்ப்பு. | காலை 7 மணி |
| வியாழன்- தனலாபம், செய்தொழில் விருத்தி. | காலை 9 மணி |
| வெள்ளி- ஊதாரித்தனம், மனச் சஞ்சலம். | பி.ப 2 மணி |
| சனி- வீண் பிரயாசம், காரியத்தடை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம் -6

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- காரியானுகூலம், செய்தொழில் விருத்தி. | பி.ப 1 மணி |
| திங்கள்- மறைமுக எதிர்ப்பு, காரியத்தடை. | பி.ப 2 மணி |
| செவ்வாய்- கருமங்களில் வெற்றி, பணவிரயம். | காலை 9 மணி |
| புதன்- பயனற்ற செயல், இனசன எதிர்ப்பு. | காலை 7 மணி |
| வியாழன்- பெரியோர் நட்பு, பொருள் வரவு. | காலை 9 மணி |
| வெள்ளி- அந்நியர் உதவி, பணவரவு. | பகல் 12 மணி |
| சனி- உயர்ந்த எண்ணம், மனமகிழ்ச்சி. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பணவரவு, காரிய சித்தி. | காலை 7 மணி |
| திங்கள்- அந்நியர் நட்பு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- உறவினர் பகை, காரியக் கேடு. | காலை 9 மணி |
| புதன்- பெரியோர் உதவி, பணவரவு. | பி.ப 1 மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், முயற்சி மேன்மை. | பி.ப 2 மணி |
| வெள்ளி- செலவு மிகுதி, பணத்தடை. | காலை 7 மணி |
| சனி- பொருள் வரவு, கௌரவம். | பி.ப 3 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம் -4

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் சகாயம், கௌரவம். | பி.ப 2 மணி |
| திங்கள்- காரிய சித்தி, உறவினர் பகை. | காலை 10 மணி |
| செவ்வாய்- தெய்வ நம்பிக்கை, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| புதன்- காரிய நட்டம், பொருள் விரயம். | பகல் 12 மணி |
| வியாழன்- நண்பர்கள் உதவி, தேகசுகம் பாதிப்பு. | காலை 8 மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப 1 மணி |
| சனி- தனலாபம், காரியானுகூலம். | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-9

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தெய்வ நம்பிக்கை, முயற்சி மேன்மை. | பகல் 12 மணி |
| திங்கள்- காரியானுகூலம், மகிழ்ச்சி. | பி.ப 2 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, அரச சன்மானம். | காலை 7 மணி |
| புதன்- புதிய முயற்சி, பணவரவு. | காலை 8 மணி |
| வியாழன்- தூர இடப் பயணம், நம்பிக்கை. | பி.ப 3 மணி |
| வெள்ளி- உறவினர் உதவி, முன்னேற்றம். | பகல் 12 மணி |
| சனி- கருமங்களில் வெற்றி, பொருள் வரவு. | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 7

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மனமகிழ்ச்சி, உயர்ந்த நிலை. | காலை 10 மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, முயற்சி மேன்மை. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- தேகசுகக் குறைவு, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| புதன்- கடன் பயம், துயர் அதிகம். | காலை 8 மணி |
| வியாழன்- பயனற்ற செயல், முயற்சி குறைவு. | பி.ப 4 மணி |
| வெள்ளி- காரியசித்தி, பொருள் வரவு. | பகல் 11 மணி |
| சனி- வீண் அலைச்சல், காரியக் கேடு. | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 1


www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# மருத்துவ ✝ விந்தைகள்

## சாகும் தறுவாயில் கருவில் குழந்தை!

## நவீன முறையில் ஒரு சிகிச்சை!!



தாயின் வயிற்றில் 6 மாதங்கள் கருவிலிருந்த குழந்தை கர்ப்பப்பையிலுள்ள நீர்மங்களில் அமிழ்ந்து இறந்துவிடக்கூடிய அபாயத்திலிருந்தது.

அக்குழந்தை இறக்குமானால் தாயும் இறந்துவிடக்கூடிய அபாயமுமிருந்தது.

நவீன முறையான 'ஸ்கேனிங்' மூலம் அதை அறிந்த மருத்துவர்கள் தாயையும் சேயையும் காப்பாற்ற உடன் சத்திர சிகிச்சையினை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத் திலிருந்தனர். மிக நுணுக்கமான சத்திரசிகிச்சையினைச் செய்து இரு உயிர்களையும் காப்பாற்றிவிட்டனர்.

குழந்தையும் பிறந்து பெற்றாரின் மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கிவிட்டது.

ஸ்கொத்லாந்து கிளாஸ்சோ நகரைச் சேர்ந்த ஷரோன் மக்கி என்ற 24 வயது பெண் கருவுற்று 6 மாதமானதும் அவருடைய வயிற்றிலுள்ள குழந்தை ஊர்வதில் பல புதிய சிக்கல்களை அவதானித்தாள்.

மருத்துவ பரிசோதனையின்போது குழந்தையின் நுரையீரலில் அளவுக்கு அதிகமான நீர்த்தன்மை இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. உடனடியாக அந்த நீரினை வெளியேற்றாவிட்டால் குழந்தையின் உயிர் பிரியும் - உடனடியாக தாயும் உயிரிழக்க நேரிடும்.

கிளாஸ்கோ நகரிலுள்ள குயீன் மதர் மருத்துவமனையில் சத்திரசிகிச்சை நடைபெற்றது. தாய்க்கு மட்டுமல்லாமல் குழந்தைக்கும் மயக்கம் தரும் மருந்து ஊசி மூலம் ஏற்றப்பட்டது.

கருவிலிருக்கும் குழந்தை ஒரே நிலையிலிருப்பதில்லை. ஆறாவது மாதமானமையினால் கர்ப்பப்பையின் பல இடங்களுக்கும் ஊர்ந்து திரிந்து கொண்டிருக்கும். அப்புறமும் இப்புறமும் அசைந்து கொண்டிருக்கும். அதனை ஒரே இடத்தில் ஆடாமல் அசையாமல் வைத்திருக்கவேண்டிய நிர்ப்பந்தம் இருந்தமையினால் அதற்கும் மயக்கம் தரும் மருந்து கொடுக்கப்பட்டது.

சத்திரசிகிச்சையும் அதி நவீன முறையில் நடத்தப்பட்டுள்ளது. தாயின் வயிற்றில் ஒரு சிறு துவாரத்தினை ஏற்படுத்தி அதனூடாக சின்னஞ்சிறிய வீடியோ லென்ஸ் மற்றும் ஒளி உமிழ் குமிழ் ஆகியவை செலுத்தப் பட்டன. இவற்றின் பயனாக வெளியே உள்ள திரையில் உள்ளுறுப்புகள் தெளிவாகத் தெரிந்தன. திரையில் தெரிந்த பிம்பத்தினைப் பார்த்த வண்ணமே, அதே துவாரத்தினூடாக சிறு ஆயுதங்களை உள் அனுப்பி குழந்தையின் நுரையீரலிலிருந்த மேலதிக நீர் உறிஞ்சி எடுக்கப்பட்டது.

பல மணி நேரம் நீடித்த இந்த சத்திர சிகிச்சை வெற்றி அளித்தது. கடந்த டிசம்பரில் பிறந்த ஜேட் என்ற குழந்தை நலமாக உள்ளது. பிறப்பதற்கு முன்னதாக நடைபெற்ற சத்திர சிகிச்சையின்போது குழந்தையின் உடலினுள் செருகப்பட்ட பிளாஸ்ரிக் குழாய் ஒன்றினை நீக்குவதற்கான மற்றுமொரு சத்திர சிகிச்சைக்கு குழந்தை உட்படுத்தப்படவிருப்பதாக டாக்டர் அலன் கமரோன் கூறினார்.



## தொலைக்காட்சியும்—தொல்லை தரும் நோய்களும்!

## தினசரி தொலைக்காட்சி பார்ப்பவரா நீங்கள்....?

### இதைப் படியுங்கள் முதலில்

தொலைக்காட்சிப் பெட்டிகள் இன்று பட்டி தொட்டிகளிளெல்லாம் பரவி விட்டன. இதனால் தொடர்ந்து பல புதுவித நோய்களும் பரவத் தொடங்கியுள்ளன என்றால் நம்பமாட்டீர்கள்.


தொலைக்காட்சி எந்தத் தொற்று நோயினையும் பரப்புவதாகக் கருதிவிட வேண்டாம். தொலைக்காட்சியினைப் பார்ப்பவர்களே தாங்களாக நோய்களைத் தேடிக் கொள்ளுகின்றனர்.

பார்வையாளர்களைக் கவர்வதற்காக போட்டி போட்டுக்கொண்டு தொலைக் காட்சியாளர்கள் சிறப்பான நிகழ்ச்சிகளைத் தேடித்தேடி ஒளிபரப்புகின்றனர்.

ஒரு நிலையத்தில் ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சி பிடிக்கவில்லையென்றால் உடனடியாக மற்றுமொரு நிலைய நிகழ்ச்சியினை, இருக்கையில் இருந்த வண்ணமே 'ரிமோட் கொண்ரோல்' மூலம் மாற்றி விடலாம். எழுந்து நடந்து தொலைக்காட்சிப் பெட்டிக்கருகே செல்ல வேண்டிய சிரமம் எதுவும் இல்லாமல் நிலையத்தை மாற்றிவிடலாம்.

இத்தகைய வசதிகளெல்லாம் கூடிவிட்டமையினால் நாள் முழுவதுமே தொலைக் காட்சித் திரையுடன் ஒட்டப்பட்ட நிலையில் பலர் உள்ளனர்.

ஒரே நிலையில் இருந்த வண்ணம் ஒரே திரையைத் தொடர்ந்து பார்த்துக்கொண்டிருப்பதினால் கண்பார்வை பெரிதும் பாதிப்படைகிறது. அத்துடன் காட்சிகளுடன் ஒன்றிப்போய் மன உணர்வுகளையும் திடீர் திடீரென மாற்றிக்கொள்ள வேண்டியிருப்பதால் உளவியல் ரீதியிலான தாக்கமும் பாதிப்பும் ஏற்படுவது கண்கூடு.



இன்று மருத்துவமனைகளை நாடும் பெரும்பாலானோருக்கு கழுத்துவலி, இடுப்புவலி, முதுகு வலி என்று பலவித வலிகள் தோன்றியிருப்பதை அவதானிக்கலாம். இப்புதிய வலிகளுக்குக் காரணம் தொலைக்காட்சியே என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்போர் சரியான நிலையில் இருந்து காட்சிகளைப் பார்க்காமல், தங்கள் உடலுக்கு உபாதைகளை ஏற்படுத்தும் விதத்திலேயே இருப்பதனால் தான் இந்த 'வலிகள்' தோன்றுகின்றனவாம்.

தொலைக்காட்சிப் பெட்டியிலிருந்து கணிசமான தூரத்திலிருந்த வண்ணமே காட்சிகளைப் பார்க்க வேண்டும். கழுத்தை நெளித்தோ இடுப்பை வளைத்தோ, நிமிர்ந்து இருக்க முடியாத - சௌகர்யம் குறைந்த இருக்கைகளிலோ அமர்வது தவிர்க்கப்பட வேண்டும். முதுகை வளைக்காமல் நிமிர்ந்து இருக்கத்தக்க இருக்கை அவசியம்.

படுக்கையிலிருந்த வண்ணமோ சாய்வு நாற்காலியில் சாய்ந்த வண்ணமோ கிடந்து காட்சிகளைப் பார்க்கலாகாது. தொலைக் காட்சிப் பெட்டி பார்வையாளரின் கண்மட்டத்துக்கு நேராகவே வைக்கப்படல் வேண்டும்.

தொடர்ந்து காட்சிகளைப் பார்ப்பவர்களும் அரைமணி நேரத்துக்கு ஒரு தடவையாவது இருக்கையிலிருந்து எழுந்து சுமார் 5 நிமிடமாவது நடமாடிவிட்டு மீண்டும் அமர்ந்து கொள்ளலாம்.

இருக்கை சீராக இல்லாவிட்டால் முள்ளந்தண்டிலுள்ள சில்லுகள் பிசகக் கூடும். மூட்டுவலி, வாதம் போன்ற நோய்களும் ஏற்பட இடமுண்டு.

**உண்மைக் கதை**

**பாலகர் செய்த படுகொலை**

## கொல்லத் துடித்தது சிறுவனின் மனசு!

### ஐடியா கொடுத்தது வீடியோப் படம்

அவர்கள் இருவருக்கும் பத்து வயதுதான். பால் மணம் மாறாத வயது.

இங்கிலாந்தின் லிவபூள் நகரைச் சேர்ந்தவர்கள்.

திடீரென்று ஒருநாள்-கடந்த வருட ஆரம்பத்தில் இரு சிறுவர்களையும் பொலிஸ் தேடிவந்து விலங்கு மாட்டியது.

பச்சிளம் சிறுவர்கள் கரங்களில் விலங்கா? ஏன்? எதற்கு?

அயலவர்கள் கரிசனையோடு விசாரித்தனர்.

உங்களுக்கு இரக்கமே கிடையாதா என்பது மாதிரி பொலிசாரை முறைத்துப் பார்த்தனர்.



கொலையான உடலை இங்கேதான் போட்டனர்.

"முறைப்பது இருக்கட்டும். இந்த இரண்டு பேரும் என்ன காரியம் செய்தார்கள் என்று தெரியுமோ?"

பொலிஸ் கேட்டது. அயலவர்கள் முறைப்போடு அலட்சியமாய் கேட்டனர்,

"என்ன செய்தார்கள்? சிறுபிள்ளைகள் தானே கல்லை எடுத்து யார் மீதாவது விளையாட்டாக எறிந்திருக்கலாம். அதுக்குப் போய் விலங்கு மாட்டி....சே... இது அக்கிரமம்."

பொலிஸ் சிரித்தது.

"இவர்களா சிறு பிள்ளைகள்? எமகாதகர்கள். இரண்டே வயதான சின்னச் சிறுவன் ஜேம்ஸ் பல்கரை அடித்து கொன்றுவிட்டனர். அதுமட்டுமா..?"

அயலவர்கள் முறைப்பை விட்டு அதிர்ச்சியில் உறைந்து நிற்க, பொலிஸ் தொடர்ந்து சொன்னது...

"அது மட்டுமா, அந்த சிறுவனை ரயில் தண்டவாளத்தில் கொண்டுபோய் போட்டும் இருக்கின்றனர்."

அயலவர்களுக்கு மறு பேச்சுப் பேச நாவே எழவில்லை.

மறுநாள் இங்கிலாந்து பத்திரிகைகளில் இரு சிறுவர்களின் படங்களும் வெளியாகின.

பொபி- ஜொன் என்னும் இரு சிறுவர்களும் உலகமே வியக்கும் கொலைகாரர்களாகினர்.

இரு சிறுவர்களும் குற்றத்தை ஒப்புக் கொள்ள, 18 வயதுவரை சீர்திருத்தப் பள்ளியில் இருக்க உத்தரவிட்டது நீதிமன்றம்.

தீர்ப்பு வழங்கப்பட்டபோதும் அதிகாரிகள் வழக்குப் ஃபைலை வைத்துவிட்டு அப்பாடா... என்று இருக்கவில்லை.

'சிறுவர்கள்-பச்சிளம் அரும்புகள்- கொலை செய்துவிட்டு, பின்னர் உடலை கொண்டுபோய் தண்டவாளத்திலும் போடும் அளவுக்கு வக்கிர மனம் கொண்டோராக மாறியது எப்படி? தூண்டியது என்ன? ஆராய்ந்தனர்.

அண்மையில் விடை கண்டுபிடித்து விட்டனர்.

அவர்கள் கண்டறிந்த விடை நம்நாட்டுப் பெற்றோருக்கும் புத்தி சொல்கிறது.

அடி,வெட்டு, குத்து, சூடு, இரத்தம், பாலியல் வதை போன்ற காட்சிகள் வரும் படங்களை வீடியோவில் குழந்தைகள் சகிதம் பார்ப்போர் இங்கும் உண்டு.

அவர்களும் இதைப் படிக்க வேண்டும்.

பொபியும், ஜொன்னும் கொலைவெறி கொள்ளக் காரணமாக இருந்தது ஒரு திகில் படம்.

அதன் பெயர் (சைல்ட்ஸ் பிளே - 3) 'சிறுவர் விளையாட்டு - 3.'

அந்தப் படத்தில் சக்கி என்றொரு



படுகொலை செய்த பாலகர்கள் பொபி தொம்சன், ஜோன் வேநெபிள்ஸ்

பொம்மை வரும். அதற்கு திடீரென்று உயிர் வந்துவிடுகிறது. உடனே இராணுவ பயிற்சி பள்ளி ஒன்றுக்குள் புகுந்து சதக்.சதக். பல கொலைகள்.

இறுதியில் அந்தப் பொம்மையின் முகத்தில் நீல நிற திராவகத்தை ஊற்றி கற்களால் குத்தி அழித்துவிடுகின்றனர்.

ஜொன் தனது தந்தையோடு அந்தப் படத்தை வீடியோவில் பார்த்துக் கொண்டிருந்தான்.

பார்க்கும்போதே அந்தப் பொம்மையை அழித்தது போல் தானும் ஒருமுறை செய்து பார்த்தால் என்ன என்று யோசித்திருக்கிறான்.

பொபியோடு சேர்ந்து திட்டம் போட்டான்.

இருவரும் கடைத்தெருவுக்கு சென்றனர். தனது தாயோடு வந்திருந்த 2வயது ஜேம்ஸ் கண்ணில் பட்டான். தாயார் கடை ஒன்றில் பொருட்கள் வாங்கிக் கொண்டிருந்தார். சிறுவன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். மெல்ல அருகே போய் அவனை நைசாகத் தூக்கி வந்துவிட்டனர்.

ஜேம்ஸை நேராக ஒரு வயல்வெளிக்கு கொண்டு போனார்கள். பொபி தயாராய் வைத்திருந்த நீல நிற திரவத்தை குழந்தை ஜேம்ஸ் மீதும் அவன் முகம் மீதும் ஊற்றினான்.

ஜேம்ஸ் திமிறிக் கொண்டு ஓட முயல, ஜொன் ஒரு கம்பால் அவனது தலையில் ஓங்கி ஒரே அடி. குழந்தை ஜேம்ஸ் துடித்து துடித்து உயிர் அடங்கிப் போனான்.

இறந்தது தெரியாமல் கற்களாலும், கம்பாலும் தாக்கிவிட்டு உடலை தூக்கிக் கொண்டு போய் அருகில் உள்ள தண்டவாளத் தில் போட்டு விட்டனர்.

ரயிலில் சிக்கி ஜேம்ஸின் உடல் சிதைந்து போய் விட்டது. எப்படியோ பொலிஸ் துப்பு துலக்கி வலையை சரியாக விரித்து சிறுவர்களை அமுக்கி விட்டது.

'சைல்ட்ஸ் பிளே 3-' வயது வந்தவர்களுக்கு உரிய படம்.

அந்த படத்தை தயாரித்தவர் டேவிட் கிறிஷ்ச். அவருக்கும் 13-14 வயதில் இரு பிள்ளைகள் இருக்கிறார்கள்.

"அவர்களை அந்தப் படத்தை பார்க்கவே நான் அனுமதிக்கவில்லை." என்கிறார் கிறிஷ்ச்.

"வயது வந்தவர்களுக்கு என்று தயாரிக்கப்படும் படங்களை சிறுவர்கள் பார்க்க அனுமதிக்கக்கூடாது. பயங்கரமான சூழ்நிலைகளை சித்தரிக்கும் படங்களைப் பார்க்கும் குழந்தைகள் தாமும் அப்படியான செயல்களை செய்து பார்க்க தூண்டப்படுகின்றனர்."

என்று நியூயோர்க்கைச் சேர்ந்த உளவியல் நிபுணர் டாக்டர் றொபேட் கோல்ட் கூறுகிறார்.

அவரது கூற்றில் உண்மை உண்டு என்பதை சிறுவர்கள் செய்த படுகொலை பளிச்சென்று சொல்லிவிடுகிறது.



சினிமாவில் வந்த பொம்மை இதுதான். மேல் மூலையில் கொல்லப்பட்ட ஜேம்ஸ் பல்கர்.

## பறவைகள் சிரிக்கின்றன!

அவுஸ்திரேலியாவில் காணப்படும் குக்குபெர்ரா என்ற பறவை இனம், எல்லாப் பறவைகளிடமிருந்தும் வேறுபட்டு இருக்கிறது. காரணம், அந்தப் பறவைகள் மனிதர்களைப் போல் சிரிப்பதுதான். இது கத்துவதை மறைவிலிருந்து கவனித்தால் நிச்சயம் மனிதர்கள் யாரோ சிரிக்கிறார்கள் என்றுதான் ஏமாறவேண்டும்.

தாய்ப்பறவை தன் குஞ்சுகளைத் தன்னைச் சுற்றிலும் உட்கார வைத்துக்கொண்டு, தான் சிரித்துக் காட்டி அவைகளுக்குக் கற்றுக்கொடுக்குமாம். ஒரு பறவைக் குடும்பத்திற்கும், மற்றொரு பறவைக் குடும்பத்திற்கும் உள்ள சிரிப்பு வேறுபடுகிறது என்று இப்பொழுது கண்டுபிடித்துள்ளனர்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# கொலை விழும் நேரம்

"இன்று நாளை என்று உலகம்
மாறி வந்தாலும் - உடல்
இளமை மாறி முதுமை கொண்டு
முடிவு வந்தாலும்....
வாழும் காலம் வாழும் வரைக்கும்
மனது ஒன்றுபடும் - தினம்
மயங்கி மயங்கி வளரும் காதல்
உலகை வென்று விடும்!"

-கவியரசு-

எந்த முனையில் இருந்து அவிழ்க்கத் தொடங்குவது என்று புரியவில்லை.

சிக்கல் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. மனோகரும் கொல்லப்பட்டு விட்டான்.

நேற்று 'குட் நைட்' சொன்னவன் இன்று காலை பிணமாக, கடற்கரை ஓரமாய் எறியப்பட்டுக் கிடக்கிறான்.

டி.ஐ.ஜி.டென்சிலுக்கு தலை வலியாக இருந்தது. ஒரு மாத்திரை போட்டால் நன்றாக இருக்கும் என்று நினைத்துக்கொண்டார்.

மனோகரின் உடலை வாங்கிக்கொண்ட ஆம்புலன்ஸ் கடற்கரையில் இருந்து தெருவில் ஏறி, சைரன் ஒலித்தபடி விரைந்து கொண்டிருந்தது.

வேடிக்கை பார்த்த கூட்டம் கலைந்து கொண்டிருக்க, இன்ஸ்பெக்டர் சிறீதரன் முகத்தில் களையிழந்து, காரியவாசத்தை காணவில்லை என்று டி.ஐ.ஜி.யிடம் எப்படிச் சொல்வது? என்று பதட்டமாகி, கட்டை விரல் நகத்தை பல்லுக்கு கொடுத்து கடித்துக் கொண்டிருக்க,

ஜீப்பை நோக்கி நடந்துகொண்டிருந்த டி.ஐ.ஜி, ஏன் இன்னமும் சிறீதரன் இங்கே நிற்கிறார் என்று நினைத்து, இந்த வழக்கின் புதிர் முடிச்சை அவிழ்க்க காரியவாசம் சொல்லும் தகவல் உதவலாம் என்ற நினைப்பில் சற்று நிம்மதியாகி,

"சிறீ, காரியவாசத்தை எனது ஜீப்பிற்கு அழைத்து வாருங்கள். போகும்போதே நான் விசாரித்துக்கொள்ள வசதியாக இருக்கும்."

சிறீதரன் டி.ஐ.ஜிக்கு அருகில் தளர்ந்த நடையோடு வந்து, வெட்கத்தில் குனிந்து நிலம்பார்க்கும் பெண்போல, தலை குனிந்து நின்றார்.

"என்ன சிறீதரன்? ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்? ஓ....சொறி மிஸ்டர் சீறீதரன். அப்போது இருந்த டென்சனில் கொஞ்சம் கோபப்பட்டு விட்டேன். ஐயாம் சொறி."

தோளில் தட்டிக்கொடுக்க, சிறீதரன் அந்த கடற்காற்றின் மத்தியிலும் உடம்பெல்லாம் வியர்த்துப்போனார். வியர்வையில் யூனிபோம் நனைந்து கொண்டிருக்க, வார்த்தைகள் வெளிவரத் தடுமாறி,

"சேர்...கா...கா...காரியவாசம்...."

"காரியவாசம்?"

"காரியவாசம்...காரியவாசத்தை..."

டி.ஐ.ஜி. பதட்டமாகி

"காரியவாசத்தை...சொல்லுங்கள் சிறீ?"

"காணவில்லை சேர்!"

"என்ன? வட் டு யூ மீன்?"

"சொறி சேர்..நான்..வந்து..."

"என்னய்யா, வந்தும், போயும்! ஒரு வேலை.. ஒரே ஒரு வேலை ஒழுங்காக முடிக்க தென்பில்லை. யாரய்யா உங்களையெல்லாம் இன்ஸ்பெக்டர் வேலைக்கு வரச்சொல்லி கையைப் பிடித்து இழுத்தது..."

கடற்கரையில் கூட்டம் சுத்தமாக கலைந்து போயிருந்தது.

யாரோ ஒரு பெண் கடற்காற்றை சுவாசித்தபடி ஓடிவந்துகொண்டிருப்பது தெரிந்தது.

தினமும் காலையில் மெல்ல ஓடி உடல் வளமாக்குவாள்போல் தெரிந்தாள்.

ஓடி வந்தவள் பொலிஸ் நிற்பது தெரிந்து முகத்தில் கலவரம் காட்டி, ஓட்டம் நிறுத்தினாள். ரக் சூட் அணிந்திருந்தாள். ஓடி வந்ததில் மார்புகள் எழுந்து தணிந்துகொண்டிருக்க, டி.ஐ.ஜியை பார்த்துவிட்டு, முகத்தில் மலர்ச்சி காட்டினாள். உதட்டில் புன்னகை ஏந்தியபடி டி.ஐ.ஜியை நோக்கிவர,

யார் இவள்? தெரிந்ததுபோல் புன்னகைக்கிறாள். வரட்டும். விடை தெரியும் என்று டி.ஐ.ஜி.டென்சில் நினைத்துக்கொண்டிருக்க, அருகில் வந்து வெகு இயல்பாக கை நீட்டி,

"குட் மோனிங் டி.ஐ.ஜி.டென்சில்! ஐயாம் சூர்யா!"

இடையிலே என்னால் ஏற்பட்ட தடங்கலுக்கு வருந்துகிறேன்."

விடைபெற்று ஒரு மான்குட்டி போல மீண்டும் துள்ளி ஓடிக்கொண்டிருக்க, டி.ஐ.ஜி. தன் கரங்களை தட்டி ஓசை எழுப்பினார்.

நின்று திரும்பிப்பார்த்தாள். டி.ஐ.ஜி அவளை நோக்கி நடந்துபோக, தன்னிடம் வருவது தெரிந்து சூர்யாவும் அவரை நோக்கி வர, டி.ஐ.ஜி கேட்டார்,

"மிஸ் சூர்யா உங்களுக்கு ரோஜாப்பூ என்றால் பிரியமோ?"

சூர்யாவின் முகம் மாறியது.

"ஏன் கேட்கிறீர்கள்?"

"உங்கள் ரக்சூட் பொக்கற்றில் ஒரு ரோஜாப்பூவை பத்திரமாக வைத்திருக்கிறீர்கள். அதுதான் கேட்டேன்."

சொல்லியபடியே அவள் முகத்தை ஊடுருவிப்பார்த்தார்.

சூர்யா உள்ளே அதிர்ந்ததுபோல் தெரிந்தது. குனிந்து ரக் சூட்டின் பொக்கற்றைப் பார்த்தாள். உள்ளே இருக்கிறேன் என்று சொல்வது போல ரோஜாப்பூ வெளியே தலை நீட்டிக்கொண்டிருந்தது. வெளியே எடுத்தாள். டி.ஐ.ஜி. அதையே பார்த்தார்.

நிரோசாவின் அறையில் அவள் பிணம் அருகே கிடந்த ரோஜாப்பூ மனத்திரையில் தெரிந்தது.

இப்போது சூர்யாவின் கையில் உள்ள ரோஜாப்பூவும் அதே நிறத்தில்தான் இருந்தது.

"பயிற்சி முடித்து வீடு திரும்பியதும் குட்மோனிங் சொல்லி அம்மாவிடம் ஒரு ரோஜாப்பூ கொடுப்பது வழக்கம் டி.ஐ.ஜி. இந்த ரோஜா இதழ்கள் அம்மாவின் பாசம் மாதிரி. இதில் இருக்கிறது பாருங்கள் முள். அது அம்மாவின் கண்டிப்பு மாதிரி!"

"அருமையான விளக்கம்!"

அவள் கரத்தை தன் கரத்திற்குள் வாங்கி குலுக்கியபடியே, எங்கோ கேட்ட பெயராக இருக்கிறதே என்று யோசிக்க,

"என்னை உங்களுக்கு தெரிந்திருக்குமே டி.ஐ.ஜி. எங்கள் கராத்தே சங்கம் நடத்திய வருடாந்த விழாவில் உங்கள் கையால் எனக்கொரு பரிசும் தந்தீர்கள். என்ன ஞாபகம் வருகிறதா?"

உடனே நினைவில் வர,

"ஓ..ஐ..சீ.. ஐ..சீ..மறந்தே விட்டேன். ஐயாம் சொறி. ஐயாம் சொறி. என்ன, காலையில் தினமும் விடாத பயிற்சியோ?"

"யா!" புன்னகைத்தாள்.

கடற்காற்று ஒரு புறம் முகத்தில் பட்டுச்செல்ல, மறுபுறம் சூர்யாவின் புன்னகையும் காலை நேரத்திற்கு இதமாக இருந்தது. சூழலின் இறுக்கத்தை, படபடப்பை நெகிழ்த்தி இயல்பாக்கியது.

இடது கரத்தால் தன் முடியை கோதிவிட்டபடி

"என்ன ஏதாவது பிரச்சனையா டி.ஐ.ஜி? காலையிலேயே கடற்காற்றை சுவாசிக்க வந்திருக்கிறீர்கள்!"

"எங்கள் தொழில் அப்படி மிஸ்..."

தயங்க,

"இப்போதும் மிஸ்தான்.."

சொல்லி, விழிகளை மூடித் திறந்து உதடுகளில் புன்னகை விரித்தாள்.

"காலையிலே ஒரு கொலை மிஸ் சூர்யா. இப்போதுதான் உடலை அகற்றினோம்."

ஆச்சரியமான குரலில்,

"கொலையா? இங்கேயா? அய்யய்யோ... இனி பயிற்சிக்கு வரும்போது பாதுகாப்புக்கு ஒரு துப்பாக்கி வைத்திருக்க வேண்டி வருமோ? உங்களிடம்தான் அனுமதி கேட்டு விண்ணப்பிக்கப் போகிறேன் டி.ஐ.ஜி!"

டென்சில் அன்று காலையில் முதற்தடவையாக பதட்டம் மறைந்து சிரித்தார்.

"உங்களுக்கு ஏன் துப்பாக்கி? அதுதான் கத்தி வைத்திருக்கிறீர்களே?"

"கத்தியா? நானா?"

"யெஸ்! கராத்தேயில் கத்தியின் வேலையை கைகள் செய்யுமல்லவா மிஸ் சூர்யா?"

"ஓ..கோட்!"

கலகலவென்று சிரித்து, இன்ஸ்பெக்டர் சிறீதரனை பார்த்து,

"என்ன டி.ஐ.ஜி. உங்கள் இன்ஸ்பெக்டர் சிரிக்கவே மாட்டாரா? பூனை எலியைப் பார்ப்பது போல பார்க்கிறார். எனக்கும் பயமாக இருக்கிறது."

"என்ன பயம்?"

"எங்கே என் கரங்களில் விலங்குமாட்டி, நீ தான் தாயே கொலை செய்தது என்று உள்ளே தள்ளிவிடுவாரோ என்று."

தோள்களை உயர்த்தி தாழ்த்தி மீண்டும் கலகலவாகி,

"ஓ.கே..டி.ஐ.ஜி! மீண்டும் சந்திக்கலாம்.

டி.ஐ.ஜி.டென்சில் வேண்டுமென்றே ஒரு சிரிப்பை வருவித்துக் காட்டினார்.

"ரைட் மிஸ் சூர்யா! நாங்கள் விரைவில் சந்திக்கலாம்."

அவள் முகத்தில் ஏற்பட்ட மாற்றம் ஒரு நொடியில் புரிந்துகொண்டு, புரியாததுபோல சிரிக்க, சூர்யாவும் வலுக்கட்டாயமாக ஒப்புக்கு சிரிக்க முயல்வது போல் இருந்தது.

"ஸீ.யு...பாய்!"

திரும்பி ஓடினாள். முன்னர் போன்ற உற்சாகமான துள்ளல் அதில் இல்லாமல் போனது போல் உணர்ந்தார் டி.ஐ.ஜி.டென்சில்.



□□

"பெண்களால் தனித்து நின்று சாதிக்க முடியும் என்று சொல்கிறீர்களா மிஸ் சூர்யா?"

சூர்யாவின் வீட்டில், அவளது பிரத்தியேகமான அறையில், மிதமான ஏ.சியின் குளிரில், வெட்ட வெளியில் தனியாளாய் நின்று எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த ஒரே ஒரு பெயிண்டிங் ஓவியம் தவிர வேறு எதுவும் இல்லாமல் பளீரென்ற வெண்மையாய் இருந்த சுவர்களை விழிகளால் தடவியபடியே பிரியா பசுபதி அந்தக் கேள்வியை வீசினாள்.

அவள் எதிரே மேசையின் மறு புறத்தில் சுழல் நாற்காலியில் அமர்ந்திருந்து, மேசையின் மேல் இருந்த வெள்ளைத்தாளில் பென்சிலால் கோடுகள் போட்டுக்கொண்டிருந்த சூர்யா நிமிர்ந்து பார்த்து சிரித்தாள்.

"ஏன் முடியாதென்கிறீர்கள் பிரியா?"

"முடியாது என்று நான் சொல்லவில்லையே!"

"சொல்லவில்லை. ஆனால் உங்கள் கேள்வியில் முடியுமா? என்ற தயக்கம் தெரிகிறது. இந்த தயக்கம்தான் சாதிப்பதற்கு மிகப் பெரிய தடை. தொடங்க முன்னரே தயக்கம் கேள்வியாய் எழுந்து துளைக்கத் தொடங்க, நாம் துவண்டு விடுகிறோம்."

"ஆண்கள் எல்லோருமே சுயநலவாதிகள் என்கிறீர்களா?"

"இல்லை. சுயநலம் எங்குதான் இல்லை. அது ஆணுக்கும் இருக்கிறது. பெண்ணுக்கும் இருக்கிறது. பெண் விடுதலை என்று நான் பேசுகிறேன் என்றால் இதிலும் சுயநலம் இருக்கிறது. நான் ஒரு பெண். என் உயர்வு. என் விழிப்பு. என் வாழ்வு எந்த விலங்குக்கும் மாட்டுப்படாமல், நிர்ப்பந்தம் இல்லாமல் இருத்தல் என் விருப்பம், அந்த விருப்பம் உனக்கும் இருக்கலாம். நீயும் நானும் இன்னும் இதுபோல் விருப்பம் உள்ளவர்களும் அந்த நோக்கத்தின் பொருட்டு இணையும் போது அமைப்பாகிவிடுகிறோம்."

சூர்யா கிளாசில் இருந்து தண்ணீர் குடித்துக்கொண்டாள். ஆள்காட்டிவிரலால் மேல் உதட்டை வருடிவிட்டபடி தொடர்ந்து பேசினாள்.

"விழிக்காமல் இருக்கும் பெண்ணை தட்டி எழுப்புகிறோம். அது பொதுநலமாகிவிடுகிறது. அந்த பொதுநலத்தில் எங்கள் சுயநலமும் பாலில் இருக்கும் சுவைபோல கலந்துதான் இருக்கிறது."

பிரியா நுனி உதட்டால் உறிஞ்சிக் கொண்டிருந்த ரீக் கோப்பையை மேசையில் வைத்தபடி, இடையிலே புகுந்து,

"எக்ஸ்கியூஸ்மீ! சுயநலம் ஒழிக என்பது விரயமான கூச்சல்தானா?"

"யெஸ். நூறுவீதம் யெஸ்! அப்படிக் கூச்சல் போடுகிறவர்கள்தான் போக்கிரிகளை எல்லாம் தியாகிகள் என்று தூக்கி நிறுத்தி விடுகிறார்கள். சுயநலம் என்பது துப்பாக்கிக்குள் இருக்கும் தோட்டா மாதிரி. அடுத்தவர் நலனை அழித்துவிட முனையும் சுயநலம்தான் ஆபத்தானது. அது பைத்தியக்காரனின் கையில் இருக்கும் துப்பாக்கி மாதிரியானது."

புரியாததுபோல் சூர்யாவைப் பார்த்தாள் பிரியா பசுபதி.

"நானும் வாழவேண்டும். நீயும் வாழ வேண்டும். இருவரும் வாழ தடையானவற்றை இணைந்து எதிர்க்க வேண்டும். இணையக் கூடியவர்களைத் திரட்ட வேண்டும். அங்கே நான்தான் முதலில். என் நலம் மட்டுமே முக்கியம் என்ற எண்ணம் வரக்கூடாது. பொதுநலத்தில் ஒரு பகுதியாக சுயநலமும் கலந்துவிடவேண்டும். அது ஆபத்தில்லாதது. ஆனால் ஆரோக்கியமானது."

பிரியா குறுக்கிட்டுக் கேட்டாள்.

"அப்படியானால் நட்புக்காக தன்னை இழத்தல், அன்புக்காக தன்னை வருத்தி உதவுதல் என்பதெல்லாம் பொய்யா? நான் நேசிக்கும் ஒருவனுக்கு ஆபத்து என்றால் எனக்குள் உயிர் துடிப்பது என்பதும் போலியா? என் தாய்க்கு நெஞ்சு வலி வந்தால் என் நெஞ்சு கிடந்து தவிக்கிறதே அது நடிப்பா?"

பிரியாவுக்கு குழப்பமாக இருந்தது. சூர்யாவோடு பேசிக்கொண்டிருப்பதில் மனித உணர்ச்சிகள் மீதே சந்தேகம் ஏற்பட்டுவிடுமோ என்று பயந்தாள்.

பிரியாவின் குழப்பம் புரிந்து சூர்யா தனக்குள் சிரித்துக்கொண்டாள். வீண் வாதம்தான் நேரத்தை விரயமாக்கும்.

நான் இப்படித்தான் செய்வேன். என் கருத்து மட்டுமே சரியானது. என்றாலும் உன்னோடு விவாதிக்கிறேன். உன் கருத்து என்ன என்று ஆழம்பார்க்கிறேன். தவிர நான் விட்டுக்கொடுக்க மாட்டேன் என்று வாதம் புரியும் எதிராளியோடு மோதுவது விரயம். பேசுவது அலட்டல். பிரியா அப்படியல்ல. அறிந்து கொள்ள முயல்கிறாள். புதியவற்றை அறியும் போது அதிர்ந்துபோய், பொம்மைக் கடைக்குள் நிற்கும் குழந்தைபோல ஆச்சரியமாகிறாள். சூர்யாவுக்கு சந்தோசமாக இருந்தது.

"இல்லை பொய்யல்ல. போலியல்ல. நடிப்பல்ல. ஆனால் அதிலும் சுயநலம் ஒளிந்திருக்கிறது. உனக்கு அன்பு தேவைப் படுகிறது. அன்பு செய்ய, அக்கறைகாட்ட ஒரு துணை தேடும் மனது அன்பு மழையாய் வந்து இறங்க இதம் காணுகிறது. அம்மாவின் மடியில் தலை புதைத்து சோகம் பகிர்ந்து அழ வேண்டும்போல் இருக்குமே. அழும் போது அம்மா தலை தடவி ஆறுதல் சொல்ல மனது இலவம் பஞ்சாய் லேசாகுமே அதற்காக மனம் ஏங்குதல் சுயநலம்தானே. அதனால் அன்புள்ள இடம் நோக்கி மனது போய் விடுகிறது. அன்பு காட்டிய இடத்தில் ஆபத்து வரும்போது நம்மை அழித்துக்கொண்டும் அந்த இடத்தை காக்கும் பக்குவம் வருகிறது. அது பொதுநலம்தான். ஆனால் அதன் தோற்றம் சுயநலத்தில் இருந்துதானே ஆரம்பிக்கிறது."

சூர்யாவின் மேசையில் இருந்த தொலைபேசி உயிர்பெற்று அழைக்க, எடுத்து சில நிமிடம் மறுமுனையோடு பேசிவிட்டு வைத்தாள். பிரியா மீதியிருந்த ரீயை உறிஞ்சிக்கொண்டு கோப்பையை காலி பண்ணினாள்.

"இன்னும் ஒரு ரீ சொல்லவா பிரியா?"

"நோ.தாங்ஸ்! இதிலே ஆபத்தான சுயநலம் எப்படி வருகிறது."

"நீ காதலிக்கிறாயா பிரியா?"

எதிர்பாராத கேள்வியில் தடுமாறி வெட்கப்பட்டு முகம் சிவந்தாள் பிரியா.



"வெட்கப்படுகிறாய். சோ....ஆம்! நீ காதலிக்கிறாய்! நீயோ அவனோ நாளை எதிர்பாராத சூழல் நிர்ப்பந்தத்தில் கல்யாணம் வரை போக முடியாவிட்டால், உங்களில் ஒருவர் நிலைமையைப் புரிந்துகொள்ள வேண்டும். விட்டேனா பார்! நீ வாழ விடுவேனா பார்! என்று புரிதல் இன்றி போர் தொடுப்பது ஆபத்தான சுயநலம்!"

மீண்டும் தொலைபேசி அழைக்க, எடுத்து காதில் வைத்து, மறுமுனையின் குரல் வாங்கியவள் முகம் மாறினாள்.

"என்ன? சித்ரா தூக்கு மாட்டிக் கொண்டு செத்துப் போனாளா? என்ன சொல்கிறாய் ஜெனி?"

சூர்யா கேட்டுக்கொண்டிருக்க பிரியாவுக்கு விபரீதம் புரிந்தது.

மறுமுனையில் இருந்து ஜெனி சூர்யாவிடம் சொன்னாள்.

"சூர்யா பொலிஸ் உன்னைப் பற்றி விசாரிக்கிறது."

"எ...என்னைப் பற்றியா? எதற்கு?"

"உன் டயறி ஒன்று சித்ராவின் அறையில் கிடைத்திருக்கிறது."

சூர்யா திகைத்துப்போய் மேசை மீது விழிகளைச் செலுத்தினாள்.

டயறி அங்கே இல்லை. பிரியாமீது விழிகள் நிலைக்க...

"இந்த டயறி அழகாக இருக்கிறதே சூர்யா...எங்கே வாங்கினீர்கள்?"

பிரியா பசுபதி இன்று மாலையில் நடந்த கூட்டத்தில் சூர்யாவை கமராவால் கிளிக் செய்தபோது அறிமுகமாகி, பின் சூர்யாவின் அருகில் மேடையில் இருந்தபோது கேட்டது நினைவில் வந்தது.


பிரியாவையே பார்த்தபடி ரிசீவரை சாத்திவைத்தபடி எழுந்தாள் சூர்யா!

(தொடர்ந்து வரும்)

10

எழுதுவது ரசிகன்

## பேனா நண்பர் அரங்கம்



**பெயர்:** சி. லியோ ஜோசவ்
**வயது:** 21
**முகவரி:** சென் கூம்ஸ்,
தலவாக்கலை.
**பொழுதுபோக்கு:** நண்பர் தொடர்பு, பத்திரிகை வாசித்தல், கலை நிகழ்ச்சிகள் பார்த்தல்.




**பெயர்:** ஏ.எல். சாஜகான்
**வயது:** 17
**முகவரி:** 67,
அல்-அமீன் வீதி,
புதிய காத்தான்குடி-06.
**பொழுதுபோக்கு:** பேனா நண்பர் தொடர்பு, ஆக்கங்கள் எழுதுதல்.



பெயர்: எம்.எஸ்.எம். ஜமால்தீன்
**முகவரி:** Tyseer Company
R.A.F. 91/91
P.O.BOX:2630
Doha-Qatar.
**பொழுதுபோக்கு:** கரம் விளையாடுதல், நாவல் படித்தல்.




**பெயர்:** என். தியாகேந்திரன்
**வயது:** 20
**முகவரி:** Zentral Str 162
8003 Zurich
Switzerland.
**பொழுதுபோக்கு:** கரப்பந்து, உதைபந்து விளையாடுதல், புத்தகம் வாசித்தல், இசைக்கருவி வாசித்தல்.



பெயர்: ஆன்மேரி அல்போன்ஸ்
**முகவரி:** 1154, பாலாயூற்று,
திருகோணமலை.
**பொழுதுபோக்கு:** புத்தகம் வாசித்தல், ரீ.வி. பார்த்தல்.

**பெயர்:** எம். ஜவாத்
**முகவரி:** கல்பிட்டி றோட்,
பாலாவி, புத்தளம்.
**பொழுதுபோக்கு:** பத்திரிகை வாசித்தல், நண்பர் தொடர்பு, கரப்பந்து விளையாடுதல்.



**பெயர்:** சித்தி பரீதா
**முகவரி:** மே/பா.எம். பாரூக்
262, போல்ஸ் வீதி,
புத்தளம்.
**பொழுதுபோக்கு:** தையல், வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல், ரீ.வி. பார்த்தல்.

**பெயர்:** சண்முகநாதன் லோகேஸ்வரன்
**வயது:** 19
**முகவரி:** இல. 152, பிரதான வீதி,
லுணுகல.
**பொழுதுபோக்கு:** பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை

# முதல் ரசிகை

என். உதயகுமார்

"இவளுடைய பெயர் பவித்ரா. உங்களுடைய தீவிர ரசிகை உங்களைப் பார்க்கவேண்டுமென்று...."

சுதாகருக்கு மீண்டும் அந்த வார்த்தைகள் ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தன. அவன் எவ்வளவு தான் மறக்க முயன்றும் அந்த வார்த்தைகளே அவனை முழுவதுமாய் ஆக்கிரமித்துக்கொண்டு, அவன் மனதை வேதனைப்படுத்திக் கொண்டிருந்தன. எத்தனை சிறுகதைகள் எழுதியிருப்பான், எத்தனை கவிதைகள் வடித்திருப்பான், இறுதியில் ஆக்கங்களில் வரும் முடிவுகள் போலவே அவனது வாழ்க்கையிலும் ஏற்படும் என்று அவன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லையே.



"சுதாகர், உன் கதையில் வந்த சந்துருவின் காதலைப் போலவே தான் என்னுடைய காதலும் நடந்துவிட்டது. எப்படி உன்னால் அப்படியே கற்பனை பண்ண முடிந்தது? 'காயங்கள்' என்ற சிறுகதையை படித்து முடித்தபோது என்னையறியாமலேயே என் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடத் தொடங்கிவிட்டது. அது கதையல்ல.... நிஜம். எப்படி நீ பழகிப்பார்த்தது போல் பெண்களின் மனதை அப்படியே படம்பிடித்த மாதிரி எழுதியிருக்கிறாய்.......?"

"காதலிக்கு ஒரு கடிதம்' என்ற கவிதையைப் படித்தேன். எந்த ஒரு காதலனும் தன் காதலியைப் பற்றி சொல்ல நினைப்பதைத் தான் நீ ஒரு கவிஞனின் உருவில் இருந்து சொல்லியிருக்கிறாய்... பிரமாதம்...."

இப்படிப் பலராலும் விமர்சிக்கப்பட்ட இன்று அவை அவன் தனக்காகவே எழுதியவை போலாகும் என்று நினைக்கும்படி ஆகிவிட்டதே....

சுதாகருடைய ஆக்கங்களை அதிகம் விமர்சிப்பது அவனது நண்பர்கள்தான். இப்படியிருக்கையில் தான் அவனது முதல் இரசிகையாய் அறிமுகமானவள் தான் பவித்ரா. சுதாகரது நண்பன் சந்திரனின் பிறந்ததின வைபவத்தில் தான் சுதாகர் அவளை முதன் முதலில் சந்தித்தான். சந்திரனின் தங்கை பவித்ராவை அவனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தான்.

"இவளுடைய பெயர் பவித்ரா, உங்களுடைய தீவிர இரசிகை. உங்கள் கதைகளை தவறாது படிப்பவள். உங்களைப் பார்க்க வேண்டுமென்று என்னை நச்சரித்தபடியே இருந்தாள், இன்று தான் அதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது..."

சுதாகருக்கு மிகவும் சங்கடமாயிருந்தது. அவன் இயற்கையிலேயே கொஞ்சம் கூச்சச் சுபாவமுடையவன். எந்தப் பெண்ணிடமும் நேருக்கு நேர் நின்று பேசியிருக்க மாட்டான். இப்படி திடீரென்று ஒரு பெண் அவனது இரசிகை என்று கூறியபோது ஆரம்பத்தில் அவனுக்கு என்ன பேசுவதென்று ஒன்றும் புரியவில்லை. ஆனால் பவித்ராவோ, இத்தனை நாள் என்ன பேசவேண்டுமென்று மனதில் மனப்பாடம் செய்து வைத்திருந்தவள் போல் படபடவென்று அவனது கதைகள் ஒவ்வொன்றையும் பற்றி விமர்சித்துக் கொண்டு போனாள்.

இவள் உண்மையிலேயே எனது ஆக்கங்கள் எல்லாவற்றையும் படித்திருக்கிறாள். அவை இவள் மனதை பாதித்திருக்கின்றன. அதுதான் இவளால் இப்படிப் பேச முடிகின்றது....

சுதாகருக்கு நினைக்கின்றபோது பெருமையாய்த்தானிருந்தது. இத்தனை நாள் எத்தனையோ பாராட்டுதல்கள் கிடைத்தும் குதூகலப்படாத அவன் மனம், முதன் முதலில் ஒரு பெண் பாராட்டுகின்ற போது, அதுவும் அவள் பார்ப்பதற்கு பளிச்சென்று, யாரோ ஒரு ஹிந்தி சினிமா நடிகையை ஞாபகப்படுத்துவதுபோல அழகாயிருக்கும் ஒரு பெண்ணின் பாராட்டு கிடைத்தபோது மனம் துள்ளிக் குதித்தது. பவித்ராவின் பாராட்டுப் பேச்சுக்கள் ஒவ்வொன்றும் அவனது காதில் தேனாய் விழுந்து கொண்டிருந்தது....

"நீங்கள் என்னை அதிகம் புகழுகிறீர்கள் என்று நினைக்கிறேன்... என்னைவிட எவ்வளவோ அனுபவம் வாய்ந்த பெரிய பெரிய எழுத்தாளர்கள் இருக்கும்போது நான் சர்வசாதாரணம்...." சுதாகர் அடக்கமாகக் கூறினான். ஆனால் அவள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

"நீங்கள் சொல்வது உண்மையாக இருக்கலாம், ஆனால் உங்களுடைய படைப்புகளிலும் உயிர்த்துடிப்பு இருக்கத்தான் செய்கிறது, உங்களிடமும் திறமை இருக்கிறது, நிச்சயம் ஒருநாள் நீங்கள் நாடுபோற்றும் எழுத்தாளனாய் வரத்தான் போகிறீர்கள்.."

"தாங்ஸ், உங்களுடைய பாராட்டு என்றும் நான் மறக்கமாட்டன்..."

இப்படித்தான் முதன் முதலாக பவித்ராவுடன் சுதாகரின் சந்திப்பு அமைந்தது. அந்தச் சந்திப்பிற்குப் பிறகு, சுதாகரின் ஆக்கம் எந்தப் பத்திரிகையில் வந்தாலும் அல்லது வானொலியில் கவிதை வாசிக்கப் பட்டாலும் அவற்றை முதலில் விமர்சிப்பது பவித்ராவாகத்தான் இருந்தாள்.

சுதாகருக்கு பவித்ராவின் நட்பு மிகவும் பிடித்துப்போயிற்று. அவள் அவனது எழுத்துத் துறையை ஊக்கப்படுத்துவது அவனுக்கு இன்னும் பிடித்துப்போயிற்று. அவளால் விமர்சிக்கப்பட வேண்டுமென்பதற்காகவே முன்பைவிட அதிக ஆர்வத்துடன் நிறைய எழுத ஆரம்பித்தான்.

ஒரு இரசிகையாய் மட்டுமே பவித்ராவை நினைத்திருந்த அவன் மனம், காலப்போக்கில், அவளைப் போலவே தன்மீது அபிமானம் கொண்டவள் தனக்கு மனைவியாய் அமைந்தால் எவ்வளவு நல்லது என்று எண்ணியது. அது பவித்ராவாகவே இருந்துவிட்டால்...? ஆனால் அவளிடம் இதை எப்படிக் கூறுவதென்று சுதாகருக்கு தெரியவில்லை. தனது இந்த எண்ணத்தையே அடுத்த கதையின் 'கரு'வாக எடுத்துக்கொண்டு தனது காதலை அதன்மூலம் பவித்ராவுக்கு தெரியப்படுத்தினான்.

இம்முறை அவளிடமிருந்து வரும் விமர்சனத்துக்காக ஆவலோடு காத்திருந்தான். ஆனால் மூன்று நாட்கள் ஆகியும் பவித்ராவிடமிருந்து எந்த பதிலுமே வராதது சுதாகருக்கு ஏமாற்றத்தையும் கவலையையும் கொடுத்தது. நான்காம் நாள் அவனே அவளது காரியாலயத்திற்குச் சென்றபோது

"நீங்கள் இப்படிப்பட்டவராய் இருப்பீர்கள் என்று நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை." அவளது முதல் வார்த்தைகளே அம்புகளாய் அவன் மனதை துளைத்தன.

"நான் உங்கள் மீது வைத்திருந்த மதிப்பு மரியாதைக்கு, நீங்கள் காட்டும் விசுவாசம் இது தானா சுதாகர்?"

சுதாகருக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை.

"இப்படித் தப்பான எண்ணம் உங்கள் மனதில் இருக்குமென்று தெரிந்திருந்தால், நான் உங்களோடு பழகியிருக்கவே மாட்டன்..."

சுதாகருக்கு வார்த்தைகளால் அடிமேல் அடியாய் விழுந்துகொண்டிருந்தது.

"அது வந்து பவித்ரா...நீங்கள் என் கதைகளென்றால் உங்களுக்கு உயிர் என்று சொன்னபடியால்..."

"உங்களுடைய கதை பிடிக்குமென்று சொல்லியிருக்கிறேன், ஆனால் உங்களைப் பிடிக்குமென்று ஒருநாளாவது சொல்லியிருக்கிறேனா? இல்லையே.."

சுதாகருக்கு இதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை.

"ஒரு பெண் ஒரு ஆணுடன் கலகலப்பாக பழகினால் அது காதலாகத்தான் இருக்க வேண்டுமா சுதாகர்? நீங்களே இப்படி நினைப்பீர்கள் என்று... அதுவும் இப்படி பத்திரிகை மூலமாக ஊரே பார்க்கும்படி... எப்படி உங்களால் இப்படிச் செய்ய மனம் வந்தது?"

"ஐ ஆம் ஸாரி பவித்ரா. நான்..."

"எனக்கு, வீட்டில் கல்யாணம் பேசி முடித்துவிட்டார்கள், தயவு செய்து அதைக் குழப்பிவிடாதீர்கள் சுதாகர்..."

சுதாகருக்கு இனியும் அங்கு நிற்பதில் அர்த்தமில்லை என்று தோன்றியது. மீண்டும் அவளிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு அங்கிருந்து வந்தான். ஆனால் அதன் பிறகு சுதாகரால் எந்தக் காரியத்திலுமே மனதை நிலைநிறுத்திக் கொள்ள முடியவில்லை. அவனால் எழுதக்கூட முடியாமல் போய்விட்டது. ஒரு வாரமாய் வேலைக்குக் கூட போகாமலிருந்த அவனை, நண்பர்கள் கட்டாயப்படுத்தி வேலைக்கு போக வைத்தார்கள்.

அன்று பஸ்ஸில் சரியான நெருக்கடி. சுதாகரின் மனதில் இருக்கும் பாரத்தோடு கையில் அம்மா கட்டிக்கொடுத்த மதிய உணவுப் பார்சல்.

சுதாகரை முன்னும் பின்னுமாய் நெருக்கியபோது அவன் உணர்ச்சியற்றவனாய் நிற்கையில் அவனை யாரோ தட்டினார்கள்.

திரும்பிப் பார்த்த போது இளம் பெண் ஒருத்தி, அவன் படும் நெருக்கடியை அவதானித்த படியாலோ என்னவோ, சுதாகரது கையிலிருந்து உணவுப் பார்சலை வாங்கி வைத்துக்கொண்டாள்.

சுதாகருக்கு பளிச்சென்று மின்னலடித்தது போல் மனதில் ஏதோ தாக்கியது. அவனுடைய முகம் திடீரென்று பிரகாசமடைந்தது.

"இல்லை நான் கவலைப்படக்கூடாது. ஒரு பெண்ணுக்காக என் வாழ்க்கையை வீணடித்துவிடக்கூடாது.....

இறைவன் ஒரு கதவை மூடினாலும், இன்னொரு கதவைத் திறந்து வழியைக் காட்டத்தான் செய்வார்.....

'இப்போது இந்தப் பெண்ணிற்கு என்னில் இரக்கம் ஏற்பட்டதுபோல் நாளை என்னை விரும்பும் அழகியொருத்தியும் வரத்தான் போகிறாள்.....

'பவித்ரா என்றும் எனக்கு ஒரு நல்ல இரசிகையாகவே இருக்கட்டும், அவள் கூறியதுபோல் ஒரு நல்ல எழுத்தாளனாக நான் வளரவேண்டும்...

'அவள் ஒருத்திக்காக என் திறமையை அழித்துவிடக்கூடாது...

'இதோ இப்போதே என் இலட்சியத்தில் வெற்றியடைய தயாராக வேண்டும்...' தனக்கு இந்த திடீர் ஞானோதயத்தை ஏற்படுத்திக்கொடுத்த அந்தப் பெண்ணிற்கு நன்றி கூறிக்கொண்டு பஸ்ஸிலிருந்து இறங்கி வெற்றிப் பாதையை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.....

# கனவு காணும் வாழ்க்கை

வாழ்க்கையில் கதியற்றவனுக்கும் வாழ்க்கை இனிப்பது கற்பனையால்! வாழவேண்டும் என்ற நம்பிக்கை தினம்-தினம் கற்பனை ஆசைகளை தூண்டிவிட்ட வண்ணம் இருக்கிறது. அதில் கிடைத்த ஏமாற்றம் இப்படி எல்லாம் சிறகடித்துப் பறக்கிறது........

'ஏயார் போட்' டிலிருந்து வந்த அந்த பஸ்ஸினுள் ஏறினேன். பஸ் நிரம்பி இருந்தது. என்றாலும் அவருக்குப் பக்கத்தில் ஒருவரும் இருக்கவில்லை. அவர் 'டீசென்டா'க உடுத்தி 'டை'யும் கட்டி இருந்தார். பக்கத்தில் அழகான பேக் ஒன்று இருந்தது. தலையில் விழுந்து இருந்த வழுக்கை, உச்சி திரும்பி மாலையாகிவிட்ட அவரது வயதைக் காட்டிற்று. கண்ணாடி மட்டும் அணியவில்லை.

அவர் முகத்தில் வெருட்சியும், பயமும் அடங்கிய ஒரு பரபரப்பு தெரிந்தது. இதுதானோ என்னவோ அவர் பக்கத்தில் யாரும் அமரவில்லைப் போலும். அவர் யாராயிருந்தாலும் எனக்கென்ன? நானும் பஸ்ஸில் காசு கொடுத்துப் பயணம் செல்பவன் தானே? முன்னேறி அவர் பக்கத்தில் சென்று அமர்ந்தேன். அப்போது அவர் முகத்தில் ஒரு மலர்ச்சி. 'ஹலோ' என்று கூற நானும் ஒரு 'ஹலோ' போட்டு வைத்தேன்.

எனது கற்பனை இன்னும் சற்று விரிந்தது.

'எங்கே கொழும்புக்கா போகிறீர்கள்?' என்ற அவர் கொச்சைத் தமிழில் சிங்களவரா முஸ்லீமா என்று என்னால் அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை. நமக்கேன் ஆராய்ச்சி? நம்முடன் கதைக்கக்கூடியளவுக்கு அவருக்குத் தமிழ் தெரியும்.

"யா..." என்று எனக்குக் கொஞ்சம் இங்கிலீஷ் தெரியும் என்று காட்டினேன்.

"எனக்கு ஒரு உதவி செய்வீங்களா?" என்று தொடர்ந்தும் தமிழில் பேசினார். எனக்கு ஆங்கிலம் தெரியும் என்பதில் அத்தனை சந்தேகம் போல.

முன்பின் தெரியாத என்னிடம் உதவி கேட்கிறாரே என்று வியந்தவாறு "ஓ.யேஸ்...' முடிந்தால் செய்கிறேன் என்னவென்று சொல்லுங்கள்."

"பயப்பட வேண்டாம்...நான் ஒரு கடத்தல் கூட்டத்திடம் சிக்கி இருக்கிறேன். என்னைப் பல முக்கிய பொருட்களைக் கடத்துவதற்குப் பயன்படுத்துகிறார்கள். நான் அதைவிட்டுப் பிரிய வேண்டும் என்று கேட்டும் என்னைப் பிரிய விடுகிறார்கள்இல்லை. இன்று பெரும் சண்டைக்குப் பின்னர் இதைக் கடத்திக் கொண்டிருக்கிறேன். ஆனால் எனக்கொரு ஊசி போட்டு அனுப்பியிருக்கிறார்கள். எனக்குப் பெலவீனமாக இருக்கிறது. எனக்கு உயிராபத்து வந்துவிட்டது என்று எனது மனப் பட்சி அலறிக்கொண்டிருக்கிறது. நான் இதை ஒப்படைத்ததும் இறக்காலம் அல்லது ஓரிரு மணித்தியாலத்தில் இறக்கலாம் என்று நினைக்கிறேன். ஆகவே இதை யாரிடமாவது ஒப்படைத்துவிட்டு இறக்கலாம் என்று நினைக்கிறேன்..."

ஆவல் மேலிட "இதில் என்ன இருக்கிறது?" என்று கேட்டேன்.

"ஒரு கிலோ தங்க பிஸ்கட்டுகளும் ஒரு இலட்சம் டொலர் நோட்டுக்களும், சில உடுப்புக்களும் இருக்கின்றன. இதை நீ எடுத்து இறங்கி மாறிவிடு. இதோ எனது வீட்டு முகவரி. முடிந்தால் எனது மனைவி மக்களுக்கு உதவி செய்..." என்று ஒரு அட்டையை நீட்டினார்.

அட்டையை வாங்கி விலாசத்தைப் பார்க்க விளங்கவில்லை. ஆம் கண்கள் ஆனந்தக் கண்ணீரில் நிறைந்து இருந்தது. மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தேன். என்னால் அதன் பெறுமானத்தை மொத்தமாக கணக்கிட்டுப் பார்க்க முடியவில்லை.

"எனது நிலமை சந்தேகத்துக்குரியதாக இருக்கிறது. அவர்களுக்கும் அந்தச் சந்தேகம் வரக்கூடும். அவர்கள் என்னைப் பின் தொடர்ந்து வந்து பாதுகாப்பு எல்லையில் என்னுடன் இணைந்து கொள்ளக்கூடும். ஆகவே நீ இடையில் இறங்கி மறைந்துவிடு. உடனே எனது வீட்டுக்குச் செல்லாதே அவர்கள் பின் தொடர்ந்து அவதானிக்கலாம்... உனது பாதுகாப்பு நிச்சயம் என்றதும், எனது மனைவி மக்கள் அவர்களிடம் இருந்து தப்பி இருந்தால்...சென்று பார். உதவி செய்....

எனது மனப் பட்சி அலாரம் மணி அடித்தது பேக்கினுள் குண்டுகள் ஏதும்...

"இதைத் திறந்து காட்ட..."

"ஓயேஸ்...மற்றவர்களுக்குத் தெரியாமல் உனது கையில் இருக்கும் பொருளை வைப்பதுபோல் பார்....."

திறந்து கையை விட்டுத் துளாவிப் பார்த்தேன். ஆகாயத்தில் பறப்பது போன்று இருந்தது.

'கையைவிட்டு துளாவிப் பார்த்தான்: ஆகாயத்தில் பறப்பதுபோல் இருந்தது.'

களனிப் பால செக் பொயின்ட் கடந்ததும் தொட்டலங்கவில் இறங்கி உடனே வேறு பஸ்ஸில் வேறு 'றூட்'டில் சென்றுவிட வேண்டும்.



இவற்றையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக காசாக்கி, வீடு, கார், கல்யாணம், மனைவிக்கு நகை, அம்மா தங்கைகளுக்கு வேண்டியமட்டும் நகை, குடி, கூத்து, கும்மாளம் என்று வாழ்க்கையை அமர்க்களமாக இரசிக்க வேண்டும். வானளாவ எழுந்து நிற்கும் 'ஃபைவ் ஸ்ரார்' ஹோட்டல்கள் இனி என் காலடியில்.

## நடக்காத கதையல்ல

காசு கையில் இருந்தால் எத்தனை பேர் பெண் கொடுக்க முன் வருவார்கள். இதில் எவளைத் தெரிந்தெடுப்பது? பெரிய சிக்கல்தான். ஏன் ஃபைவ் ஸ்டார் ஹோட்டலிலே எல்லாரையும் ஒரு போட்டித் தேர்வுக்கு நிறுத்தினாலென்ன? அழகு ராணிக்கு மட்டும்தானா போட்டி நடத்துவது? எனது இதய ராணிக்கும்தான்! இது புதுமையாகவும் இருக்கும். புதுப்புது 'ஸ்விம்மிங் டிரெஸ்ஸி'ல் அவர்கள் எல்லாரையும் பார்க்கலாம். வேணுமெண்டா இன்னுமொருத்தியை 'பேர்சனல் செகரட்டறி'யாகவும் நியமித்துக் கொள்ளலாம். யார் கேட்பது என்னிடம்? இனி நான் வைச்சது தானே சட்டம்.

பாவம் அந்த மனுசன். பஸ்போய் நின்றதும் தூக்கத்தில் இருப்பதுபோல் இறந்து போய்க் கிடப்பான். பஸ் கொண்டக்டர் தட்டி எழுப்பும்போது தான் தெரியவரும். அவனுடைய கூட்டாளிகள் வந்து எதிர்பார்த்து ஏமாந்துபோய், பிடிபட்டு விடுவோம் என்று பயந்து ஓடிப்போய் இருப்பார்கள். நல்ல ஜோக் என்று எனக்குள் சிரித்துக் கொண்டேன்.

"மாத்தையா...மாத்தையா.." என்று பஸ் கொண்டக்டர் தட்டக் கண்விழித்தேன் பஸ் வெறிச்சோடிக் கிடக்க நான் மட்டும் இருப்பதையும் பஸ் கொழும்பு பஸ் நிலையத்தில் நிற்பதையும் பார்த்தேன்.

கலவரமடைந்தவனாக, "பேக்குடன் இருந்த கனவான்...."

"அவர் இறங்கிப் போய்விட்டார்.... ஏன் பேக்...உங்களுடையதா?"

"இல்ல இல்ல.." என்று வெட்கித் தலை குனிந்தவாறு நடந்தேன்.

•••

மன்னித்துக்கொள்ளுங்கள்! ஒவ்வொரு நாளும் சுவீப் டிக்கட் வாங்கி பக்கட்டில் வைக்கும்போது 'நாமும் ஒருநாள் கோடீஸ்வரராக வருவோம்' என்று கனவு காண்பது வழக்கம். நான் மட்டுமா? நாட்டில் எத்தனை பேர் இப்படிக் கனவு காண்கிறார்கள்? சுவீப்பில் தான் ஏமாற்றம் என்றால் இதிலுமா?

சே....எங்கே போய் விட்டான்?
நாலு புறமும் பார்க்கிறேன்...
அவனைக் காணவே இல்லை.
நான் சோர்வுடன் நடக்கலானேன்.
'பிளீஸ்' மன்னிச்சுக்கங்க...!

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை

# ஒரு ரோஜாப்பூ உதிர்கிறது

**வாழையூர் ஸ்ரீவரணி**

**நட்பின் அத்திவாரம் பரஸ்பர புரிந்துணர்வும், நம்பிக்கையும், விட்டுக் கொடுத்தலுமே! இதிலொன்று தகர்ந்தாலும், நிலைப்பது நட்பல்ல!**

ஜெகன் கவலையாயிருந்தான்.

'சௌமியாவா, அப்படிச் சொன்னாள்? நம்பமுடியவில்லையே!' ஏன்? எதற்காக? என்ற கேள்வியே மனசினுள். விடை மட்டும் கிடைக்கவில்லை.

"உங்கள்ல வச்சிருந்த நம்பிக்கையை நாசமாக்கிப் போட்டீங்க ஜெகன்," என்று சொல்லி விட்டுப் போன சௌமியாவை வேதனையுடன் நினைத்துப் பார்த்தான் ஜெகன்.

நகரிலிருந்து அறுபது கிலோமீற்றர் தொலைவிலிருந்த அந்தக் கிராமம்தான் ஜெகனினதும் சௌமியாவினதும் பூர்வீகம். இருவரினது வீடுகளும் அருகருகே. கூடவே, இருவரினது பெற்றோர்களும் குடும்ப நண்பர்கள். இதுவே ஜெகன்-சௌமியா நட்பிற்கு வித்திட்டது. சிறுவயதிலிருந்து இருவரும் அக்கிராமப் பாடசாலையில் ஒன்றாகப் படித்து நகரில் உயர்கல்வி பெற்று, இப்போது பல்கலைக்கழகத்தில். இங்குகூட இருவரும் ஒரே தரத்திலிருந்தார்கள்.

நேற்று பல்கலைக்கழக வாழ்வின் இறுதிநாள். இந்த வாழ்வை அனுபவித்தவர்களுக்கு, இதைப் பிரியும்போது தோன்றும் வேதனையை வார்த்தையில் சொல்ல முடியாது. மீண்டும் இந்த வாழ்வு கிடைக்காதே, என்று தோன்றும்போது மனசுள் வேதனை பிழியும். கூடவே ஒன்றாகப் படித்த ஒவ்வொருவரும், ஒவ்வொரு திசையில் செல்லும்போது மீண்டும் இவர்களைக் காணவேண்டுமென்று மனசு ஏங்கும். அவர்களோடு பழகிய நாட்களெல்லாம் படம்போல் மனசிலோடும். செய்த ஒவ்வொரு சில்மிஷங்களும் நினைவில் வரும். இவ்வேதனைகள் ஜெகனைப் பாதித்தாலும், அவை பாதிக்காதளவிற்கு காரணமாயிருந்த சௌமியாவே புரிபடாத ஒரு வார்த்தையைச் சொல்லி விட்டுப் போனாள். ஜெகன் மீண்டும் பேசப்போனபோது, அவனைத் தவிர்த்தாள், முறைத்தாள். சரி ஊருக்குப் போய் விசாரிப்போமென்று வாளாதிருந்தான் அவன்.

ஜெகனின் மனத்தை அரித்த இன்னொரு விடயம், கல்யாணியின் நடவடிக்கை. கல்யாணி! சௌமியின் தோழி. ஜெகன் இவளையறியாத போது சௌமியே கொண்டு வந்து அறிமுகப்படுத்தினாள்.

"ஜெகன், இது கல்யாணி! நான் சொல்லுவேனே என்ர பெஸ்ட் ஃப்ரெண்ட் என்று..."

"ஓகோ, ஹலோ! ஐயாம் ஜெகன். வயசு இருப்பத்தைந்து, உயரம் ஐந்தடி..." சொல்லிக்கொண்டு போனவனை இடைமறித்தாள் சௌமியா.

"போதும் உங்கட அறுவை. உங்களைப் பற்றி எல்லாம் தெரியும் அவளுக்கு."

"ஓ, எல்லாம் தெரியுமோ?" என்று அசடுவழிந்தவனைப் பார்த்து இருவரும் சிரித்தார்கள்.

கல்யாணி, ஜெகன்- சௌமியின் பின் ஒரு வருடம் தாமதித்து பல்கலைக்கழகத்தில் இணைந்தவள். எப்படியோ கல்யாணி சௌமியின் நட்பைப் பெற்று விட எந்தவொரு முயற்சியுமில்லாது ஜெகனின் நட்பும் கிடைத்தது. கூடவே ஜெகனை நிரம்பவும் பிடித்துவிட்டிருந்தது கல்யாணிக்கு. அவனது திறமை, ஆற்றல், பலரோடும் பழகும்பாங்கு, பார்த்து நிரம்பவும் வியந்து போவாள். வியப்பு காலமாற்றத்தில் விருப்பாகியது. பெண் மனசு நேசிக்கத் தொடங்கியது. விருப்பை வெளியிட பெண்மை தடுத்தது. கூடவே, ஜெகனினதும் சௌமியினதும் உறவு முறையில் சந்தேகம் மனதையரித்தது. தாளாமல் ஒருநாள் சௌமியாவிடம் கேட்டாள்.

"சௌமி, ஜெகன் உனக்கு என்ன உறவு?"

"எதுவுமில்ல கல்யாணி, நல்ல நண்பர்கள் அவ்வளவுதான்!"

"அப்போ, நட்பு காலமாற்றத்தால காதலாகும்தானே?"

"ஸ்டுப்பிட், என்ன பேச்சுப் பேசுறாய்? நானும் ஜெகனும் நினைவு தெரிஞ்ச நாளிலிருந்து பழகி வர்றம். அதால, என்னில அவனுக்கோ அவனில எனக்கோ அப்படியொரு நினைப்பே ஏற்படல. ஏனெண்டா, எங்க ரெண்டு பேருக்குமே சகோதரமில்ல. அதால எங்க உறவில சகோதரத் தன்மை இருக்கும். கூடவே நட்புரிமையும் அதிகமாயிருக்கும். போதுமா!"

அவளது விளக்கம் கேட்ட கல்யானிக்கு நிரம்பவும் நிம்மதியாயிருந்தது. அன்றிலிருந்து ஜெகனில் கல்யாணியின் அணுகுமறையும் மாறுபடத் தொடங்கியது. அதிக அக்கறைகள், அதிக கரிசனை, அதிக உரிமைகள்,.... இவற்றையெல்லாம் ஜெகன் கவனிக்கவே செய்தானென்றாலும், இவ்வணுகுமுறைகளில் வெறுப்பும் கொண்டான். இவ்வதீத அணுகுமுறைக்குக் காரணம் தாமதமாகவே ஜெகனுக்குப் புரிந்தது.

ஒருநாள் ஜெகனைத் தனியே சந்திக்க சந்தர்ப்பம் அமைந்தபோது, அதுவே தருணமென ஜெகனிடம் கேட்டாள் கல்யாணி.

"ஜெகன், நீங்க யாரையாவது காதலிக்கிறீங்களா?"

ஆச்சரியமாய் நிமிர்ந்த ஜெகன் சொன்னான், "இப்ப இல்ல."

"அப்படீன்னா?"

"ஒருத்தியைக் காதலிச்சன் உயிரா. ஆனா, ஏமாத்திட்டா! அந்த தோல்வியால எனக்கேற்பட்ட பாதிப்பு ரொம்ப அதிகம். பெண்கள் என்றாலே தப்பான அபிப்பிராயம். அந்த அபிப்பிராயத்தை மாற்றியதே 'சௌமியா' என்ற அன்பான நட்புத்தான். பெண்கள்லயும் ஆண்கள்லயும் நல்ல வகையுமுண்டு, நல்ல பாம்பும் இருக்கு."

"சரி, நான் என்ன நல்ல வகையா? நல்ல பாம்பா?"

"திடீரென ஏன் இப்படிக் கேக்கிறீங்க?"

"ம்...சும்மாதான், சொல்லுங்களேன்?"

"இதுவரையில நல்லவகைதான். இனியும் அப்படியிருக்கவே ஆசை."

"அப்ப நான் உங்களைக் காதலிச்சா...?" அவளை. அவளுடைய அதீத அணுகுமுறைக்கு காரணம் தெளிவாகப் பிடிபட்டது. என்றாலும் காதலை பட்டவர்த்தனமாக வெளிவிடும் பெண்ணை இன்றுதான் காண்கின்றான். இவள் எந்த வகை? யோசித்தான்.

"என்ன ரொம்ப யோசிக்கிறீங்க?"

"இல்ல கல்யாணி. எற்கனவே ஒரு தடவை அடிபட்டவன் நான், சூடு கண்டவன். அதால காதலிக்கின்ற மனசில்ல எனக்கு. கூடவே, என்னைக் காதலிச்சவள் யாருடனும் வாழட்டும். ஆனா, நான் வாழுகின்ற வாழ்க்கை அவளுக்கொரு தண்டனை. அதால இந்த எண்ணத்தைக் கைவிட்டுவிடு கல்யாணி."

"பரவாயில்ல ஜெகன். நல்லா யோசியுங்க. யோசிச்சு ஒரு முடிவு சொல்லுங்க. நான் காத்திருக்கிறன். அந்த முடிவு நல்ல முடிவாயிருந்தா மகிழ்ச்சியாயிருப்பன்."

சொல்லிவிட்டு அகன்றவளை வேதனையுடன் பார்த்தான் ஜெகன். அவனால் இதை ஜீரணிக்க முடியவில்லை. என்ன பெண் இவள். எவ்வளவு சாதாரணமாக கேட்டு விட்டுப் போய்விட்டாள். ராசாத்தியினிடத்தில் இன்னொருத்தியா? காதலி ராசாத்தியை நினைத்துப் பார்த்தான். அவள் நினைப்பில் பெண்கள் பற்றிய வன்மமே வளர்கிறது. அவள் நினைவைத் தவிர்த்தான். என்றாலும் இன்னொருத்தியைக் காதலிக்கும் மனோ நிலை... ம்ஹூம் கிடையாது.

'கல்யாணியிடம் தெளிவாகச் சொல்லிவிட வேண்டும்' நினைத்துக் கொண்டான். இரண்டு நாள் கழித்து கல்யாணியைச் சந்தித்தபோது அதே முடிவையே சொன்னான்.

"என்னை 'மன்னிச்சிடு கல்யாணி! உன்னன்பை ஏற்றுக்கொள்ளும் மனோ நிலையில் இப்ப நான் இல்ல. நீ எனக்கொரு நல்ல நண்பியா இரு. வேறெந்த உறவும் வேண்டாம். முடிந்தால் என்னைப் புரிஞ்சு கொள்."

முடிவைக் கேட்ட கல்யாணி ரொம்பவும் நொந்துபோனாள். ஏமாற்றப்பட்டு விட்டோமே எனக் கலங்கினாள். ஜெகன் தன்னை நிராகரித்ததற்கு எந்தவொரு காரணமும் இல்லையென எண்ணினாள். மனசுள் வன்மம் வளர்ந்தது. ஜெகனைத் துன்பப்பட வைக்க வேண்டுமென்ற எண்ணம் தலைப்பட்டது. அதைப்பற்றி மனம் சிந்திக்கத் தொடங்கியது. ஆனால்.... முகம்... ஜெகனிடம் ஏமாற்றத்தை ஜீரணித்துக் கொண்டவளாய் நடித்தாள்.

"பரவாயில்லை ஜெகன். நான் கொடுத்து வைச்சது அவ்வளவுதான்" என்று சொல்லி விட்டுப் போனவள்தான். அதன்பின்பு கல்யாணியும் அவனுடன் பேசவில்லை. சௌமியாவும் பேசவில்லை. கல்யாணி, எதிர்பார்ப்பு ஏமாற்றமாகி விட்டதால் பேசவில்லை என்றெண்ணினான். ஆனால் சௌமியா?... ஏன்?, நேசம், அன்பு, பரிவு காட்டிய நட்பான நெஞ்சமொன்று விலகிப் போவதாய் உணர்ந்தான். காரணம் யூகித்து, யூகித்து கல்யாணியாய் இருக்கலாமென்று எண்ணினான்.

இதோ, நேற்றோடு பல்கலைக்கழக வாழ்வும் முடிந்து விட்டது. நான்கு வருடத்தில் உருவான நட்புக்கள் நாலாபக்கமும் சென்றுவிடும். கூடவே வரும் நட்பொன்று சௌமியாவல்லவா?


மறுநாள் ஜெகன் ஊருக்குச் செல்வதால் சௌமியாவையும் அழைக்கச் சென்றான். சௌமியா நண்பிகளுடன் பேசிக்கொண்டிருக்க, அருகே கல்யாணி; கல்யாணியின் பார்வையைத் தவிர்த்து, அழைத்தான்,

"சௌமியா."

திரும்பியவள் முகத்தில் வெறுப்பு மண்டிக் கிடந்தது.

"என்னோட பேச வேண்டாமெண்டல்லவா சொன்னனான். பிறகு எந்த முகத்தோட என்னோட கதைக்கிறீங்க? என் முகத்தில முழிக்கவே உங்களுக்கு அருகதையில்ல." எல்லோர் முன்னிலையிலும் கூறியவள், அவனை விலக்கி நடக்கத் தொடங்கினாள்.

அவனிடம் அவள் நடந்துகொண்ட விதம் அவனை அவமானப்படுத்திற்று. எவ்வளவு படித்திருந்தாலும் சில சமயங்களில் பலர் ஆத்திரத்திற்கு அடிபணிந்து, சூழ்நிலை மறந்து அடிப்படை மரியாதையைக்கூட கைவிட்டு விடுகிறார்கள். அவள் நண்பிகள் இவனைப் பார்க்க, இவன் கல்யாணியைப் பார்த்தான். அவளிதழோரத்தில் கேலிச் சிரிப்பொன்று உதிர, சட்டென தலையை வெட்டியவள் சௌமியாவை பின் தொடர்ந்தாள்.



ஜெகனுக்கு ஏதோ புலப்படுவது போலிருந்தது. கல்யாணியை, 'அட இவள் நல்ல பாம்பு வகை' என நினைத்துக் கொண்டான்.

அன்றெல்லாம் சௌமியின் உதாசிப்பு அவனை நினைக்க வைத்து வேதனைப் படுத்திற்று. "எந்த விடயமானாலும் நேரே கேட்பதுதானே முறை. நாணயத்திற்கே இரண்டு பக்கம். அவள் கணிப்பில் என்னிலும் இன்னொரு பக்கம் உண்டல்லவா? அறியாமல், அவள் அவன்மீது குற்றம் சுமத்தியது மேலும் வேதனைப்படுத்தியது. 'சிறு வயதிலிருந்து பழகியவள் என்னைப் புரிந்து கொண்டது அவ்வளவுதான்' என எண்ண பெருமூச்சொன்று வெளிவந்தது. வேதனையுடன் ஊருக்குப் புறப்பட்டுச் சென்றான்.

அன்று சௌமியும் ஊருக்கு வந்தபோது, பேச மனமில்லாதிருந்தது ஜெகனிற்கு. அவள் அவமானப்படுத்தியது நெஞ்சை நெருப்பாக்கிற்று. சில நாட்கள் கழிய, நகரில் தனியார் நிறுவனமொன்றில் தற்காலிக வேலையொன்று கிடைக்க, ஊரைவிட்டுப் புறப்பட்டான்.

காலங்கள் எதற்கும் காத்திராமல் ஓடியது. சௌமியா-ஜெகன் நட்பில் விரிசல் பெரிதானது. பேச்சுக்கள் இல்லை, ஏன் பார்வைகூட இல்லை, நல்ல நட்பொன்று காரமில்லாது நகர்ந்தது நரக வேதனையாயிருந்தது ஜெகனிற்கு. இருந்தும் பொறுத்தான். உண்மைகள் உறங்கும் இறக்காது. உண்மைக்கும் விழிப்புண்டல்லவா? விழிக்கும் நாள்வரைக்கும் காத்திருந்தான். வந்தது, அந்த நாளும் வந்தது.

விடுமுறையில் ஊருக்கு வந்திருந்தான் ஜெகன். அதிசயமாய் தேடி வந்தாள் சௌமியா. ஜெகன் முன்னின்று வேதனையுடன் பார்த்தாள்.

"என்னை மன்னிச்சிடு ஜெகன்."

பேசிய சௌமியாவை விசித்திரமாய் பார்த்தான் ஜெகன்.

"என்ன காரணம் சௌமி?"

"உன்னைப் பற்றி இவ்வளவு காலமும் மனசுக்குள்ள ஒரு தப்பான எண்ணத்தை வளர்த்ததற்கு!"

"அதை ஊகித்து விட்டேன் சௌமி. ஆனா எந்த ரீதியிலான தப்பான அபிப்பிராயம்? அதை மட்டும் சொல்."

"ஃபைனல் இயர் எக்ஸாம் முடிஞ்சவுடன், கல்யாணி வந்து என்னிடம் ஒரு விஷயம் சொன்னாள்."

"என்ன விஷயம்?"

"ஒருநாள் கல்யாணி உங்களிடம் வந்தபோது, நீங்க தப்பான அணுகுமுறையோட அவளுடன் நடந்து கொண்டதாகவும், முறைகேடா நடக்க முயற்சித்ததாகவும், அழுதழுது சொன்னாள்." அதிர்ந்தான் ஜெகன். "பிறகு?"

"பிறகென்ன? அவளுடைய நீலிக் கண்ணீரில நானும் அதை உண்மையெண்டு நினைச்சு, உங்களைத் தப்பா எடை போட்டுட்டன். அதால வந்த வெறுப்புத்தான், இவ்வளவு நாள் விலகலுக்குக் காரணம்."

"இப்ப மட்டும் உன் தப்பபிப்பிராயம் எப்படி விலகிற்று?"

"எதேச்சையா கல்யாணி வாயாலேயே உண்மையை கேட்க நேர்ந்தது. அவள் சுயரூபமறிந்ததும் குறுகிப்போனேன். பெண்களில் இப்படிச் சிலரும் உண்டென்று நினைக்கும்போது வேதனைதான் மிஞ்சுகிறது. என்னை மன்னிச்சிடு ஜெகன்.

"இல்ல சௌமி, உன் மன்னிப்பில நியாயமில்ல. சின்ன வயசிலிருந்தே எவ்வளவு அன்பா, நட்பா என்னோட பழகிய நீயே, ஒரு பெண் வார்த்தையில் என் நடத்தையையே சந்தேகித்து விட்டாயே சரி பரவாயில்லை! சந்தேகித்தாய், ஆனால் அதை நீ என்னிடம் நேரடியாகவே கேட்டிருக்கலாம். அப்பவே இச்சந்தேகம் விலகியிருக்கும். ஆனா, நீ அதையே மனசுக்குள் நினைச்சு மறுகி, என்னைக் காணும்போதெல்லாம் உனக்கு என்ன தோன்றியிருக்கும்? நினைத்துப்பார். எந்தக் காரணமும் தெரியாமல், இவ்வளவு காலமும் நான் பட்ட வேதனைகளை நினைத்துப் பார். நட்பின் அடிப்படையே நம்பிக்கைதான் சௌமி! நம்பிக்கை நாசமானால் நட்பின் இலக்கணம் விலகிவிடும். உன்னில் நட்பு விலகிற்று. நல்லெண்ணம் அழிஞ்சிற்று. இவ்வளவும் ஏன்? நீயும் எனக்கொரு பெண் சினேகிதிதானே? உன்னிடம் எப்போதாவது நான் தப்பான நோக்கோடு அணுகியிருக்கிறேனா? இதையாவது நினைத்துப் பார்த்திருக்கலாம் நீ. ஆனா நினைக்கவில்லை, ஏனென்றால் நம்பிக்கை யீனம் உன் நட்பை மேவிற்று. நல்ல நட்புக்கு அருகதையற்றவள் நீ!" பெரிதாய் சொல்லி முடித்தவன், அவளை விட்டு விலகி நடக்க ஆரம்பித்தான்.

அவன் பேச்சிலிருந்த உண்மை அவளைச் சுட, மௌனம் காத்தாள். நல்ல நட்பை இழந்த கவலை இப்போது இவளை வாட்டத் தொடங்கிற்று.

(நல்ல நட்பு மேன்மையானது)

---

நிமிடக் கதை

## கோபம் கொள்ள வேண்டாமம்மா

**-கவிப்பிரியா நிஷா-**

**"நீங்க லேட்டா வர என்ன காரணம் என்கிறதை பக்கத்து வீட்டு பார்வதி மாமி மூலம் தெரிஞ்சுக்கிட்டேன்"**

"ஏய் என்னாச்சு உனக்கு? ஏன் முகத்தை 'உம்'முன்னு வைச்சிக்கிட்டு இருக்கே?"

"பின்னே என்னவாம். நீங்க பண்ணுற காரியத்திற்கு சிரிச்சிக்கொண்டா இருக்க முடியும்?"

"வட் டு யூ மீன்...நீ என்ன சொல்றே?"

"இப்போதெல்லாம் உங்க நடவடிக்கை எனக்கு கொஞ்சம்கூட பிடிக்கல. நீங்க முன்ன மாதிரி இல்ல. இப்போ ரொம்பவும் மாறிப் போயிட்டீங்க. தினமும் லேட்டாத்தான் வர்றீங்க.

"அதுசரி இன்னைக்கு ஏன் இவ்வளவு லேட்?"

"........"

"என்ன என்னோட கேள்விக்கு பதிலையே காணோம்? இண்ணைக்காவது சாக்குப் போக்குச் சொல்லாம உண்மையை சொல்லுங்க."

"........"

"உங்க மௌனத்தில இருந்து புரியுது நீங்க எதையோ மறைக்கிறீங்கன்னு."

"நோ நோ அப்படியெல்லாம் ஒண்ணுமில்ல."

"அப்படின்னா நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்ல வேண்டியது தானே?"

"அது வந்து...பஸ் வர தாமதமாகிடுச்சி. அதனாலதான்....."

"சுத்தப் பொய். நீங்க என்கிட்ட பொய் சொல்றீங்க."

"நான் எதற்காக மஞ்சு உன்கிட்ட பொய் சொல்லணும்."

"அதான் எனக்குப் புரியல."

"இங்க பாரு மனசைப் போட்டு சும்மா குழப்பிக்காதே."

"நீங்க ஒழுங்கா இருந்தீங்கன்னா நான் ஏன் மனசைப் போட்டு குழப்பிக்கப் போறேன்? நீங்கதான் இப்போ முன்ன மாதிரி இல்லியே! முன்பெல்லாம் ஆறுமணிக்கு ஆபிஸ் விட்டதும் வீட்டுக்கு வந்திடுவீங்க. ஆனா இப்போ எட்டு ஒன்பது மணிக்கில்ல வீட்டுக்கு வர்றீங்க. இருங்க இருங்க இதுக்கு காரணம் என்ன என்கிறதை கூடிய சீக்கிரம் நானே தெரிஞ்சிக்கிறேன்."

"ஓகே தெரிஞ்சிக்க. அதற்கு முதல்ல சாப்பாட்டை ரெடி பண்ணு. பசி வயிற்றைக் கிள்ளுது."

ரதன் பசிக்கிறது என்றதும் அவள் சகலதையும் மறந்துபோனாள். அவளுக்கு இருக்கும் சொந்த பந்தமெல்லாம் ரதன் மட்டும்தான். அவனை விட்டால் அவளுக்கு வேறு கதி கிடையாது. ரதன் மஞ்சுளாவுக்கு எந்தக் குறையையும் வைக்கவில்லை. என்றாலும் கடந்த சில நாட்களாக அவன் நேரம் கழித்து வீட்டுக்கு வருவது அவளுக்கு பெரும் வேதனையை ஏற்படுத்தியது. அவன் ஏன் நேரம் கழித்து வீடு வருகிறான் என்பதற்கான காரணத்தை அறியாது அவள் தவித்துப் போனாள்.

▫▫


"என்ன மஞ்சு என்கூட கோபமா?"

"....."

"ஓஹ்...இன்னைக்கும் வீடு திரும்ப லேட்டாச்சில்ல. ஸாரிடா இன்னைக்கு கூட பஸ் வர...."

"தாமதமாகிடுச்சின்னு பழைய பல்லவியைப் பாடப் போறீங்க அப்படித்தானே?"

"...."



"இனிமேலையும் என்கிட்ட ரீல் விட முடியாது. ஏன்னா உண்மையை நான் தெரிஞ்சிக்கிட்டேன்."

"என்ன உளர்றே?"

"நான் ஒண்ணும் உளறல. நீங்க வீட்டுக்கு லேட்டா வரக் காரணம் என்ன என்கிறதை பக்கத்து வீட்டு பார்வதி மாமி மூலம் தெரிஞ்சிக்கிட்டேன்."

"அவங்க என்ன சொன்னாங்க?"

"நேற்று நீங்க யாரோ ஒரு பொண்ணுகூட பஸ்ஸில பயணம் செய்து கொண்டிருந்தீங்களாம்."

"ப்பூ...இவ்வளவுதானா?"

"இல்ல இன்னும் சொன்னாங்க. அந்தப் பொண்ணுகூட அவ வீடுவரையும் நீங்க போயிருக்கீங்க."

"மஞ்சு கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய். தீர விசாரித்தறிவதே மெய். தயவு செய்து இதை நீ புரிஞ்சிக்க. யார் யாரோ என்னென்னமோ சொன்னாங்க என்பதற்காக என்னை நீ தப்பா புரிஞ்சிக்காத. இந்த ரதன் என்னைக்குமே தப்பான வழியில போறவனில்ல."

"அது எனக்குத் தெரியும்."

"அப்போ எதற்காக சும்மா அலட்டிக்கிறே?"

"இந்த சமூகம் உங்களையும் தப்பான வழியில போக வைச்சிடுமோன்னு பயம்மா இருக்கு."

அவளது கண்கள் கலங்கிப் போயின. அதைக் கண்ணுற்ற ரதன் பதறிப்போனான். அழுது கொண்டிருந்த அவளை சமாதானப்படுத்துவதற்குள் அவனுக்கு போதும் போதும் என்றாகிவிட்டது.

சீதா சொல்லிவிட்டுப் போன தகவல் மஞ்சளாவுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. சீதா சொன்னதை முதலில் அவளால் நம்ப முடியாமல்தான் இருந்தது. இருப்பினும் ரதனின் தற்போதைய நடவடிக்கைகள், சீதா சொன்னது உண்மை என்று நிரூபித்தது. இதனால் சீதா சொன்னதை அவள் நம்பினாள். இந்த விஷயத்தை இன்றே ரதனிடம் கேட்டுவிட வேண்டுமென்று அவள் தீர்மானித்துக்கொண்டாள்.

▫▫

"இன்னைக்கு அந்தப் பொண்ணு நம்ம வீட்டுக்கு வந்தா."

"எந்தப் பொண்ணு?"

"சீதா!"

"வாவ்...அப்புறம் அப்புறம் என்ன சொன்னா?"

"அவ சொன்னது இருக்கட்டும். அவளையே உங்களுக்கு கல்யாணம் பண்ணி வைக்கிறதா நான் முடிவு பண்ணிட்டேன்."

"ஹேய்...நீ சம்பந்தா சம்பந்தமில்லாம ஏதேதோ பேசுறே."

"அப்போ அந்த சீதா சொன்னதெல்லாம்?"

"அடுத்த மாசம் கல்யாணத்தை வைச்சிருக்கலாம்னு என்கிட்ட சொல்லச் சொல்லி இருப்பா."

"ஆமா அப்படித்தான் சொன்னா."

"மஞ்சு கல்யாணம் எனக்கில்லம்மா உனக்குத்தான்."

"அண்ணா நீங்க என்ன சொல்....றீங்க?"

"ஆமா மஞ்சு! உனக்கும் சீதாவோட அண்ணனுக்கும்தான் அடுத்த மாசம் கல்யாணம். பொண்ணை சீதா பார்த்தாப் போதும்னு மாப்பிள்ளை சொல்லிவிட்டாராம். சீதா இன்னைக்கு இங்க வந்ததே உன்னைப் பார்க்கத்தான். வீட்டுக்கு ஏன் லேட்டா வர்றீங்கனு அடிக்கடி கேட்பியே அதற்கு காரணமும் இதுதாம்மா. உன் கல்யாணத்தை ஜாம் ஜாம்னு நடத்தணும் என்பதுதான் இந்த ஏழை அண்ணனோட ஆசை. அதான் ஆபீஸ் முடிஞ்சதும் ஓவர்டைம் செய்தேன். அன்னைக்கு பஸ்ஸில நான் பயணம் செய்தது வேறு யாரோடுமல்ல சீதாவோடதான். அதுவும் உன் கல்யாண விஷயமா மாப்பிள்ளையோட பேசத்தான் போனேன். கல்யாணம் முடிவானதற்கு அப்புறம் இதைப் பற்றி உன்கிட்ட சொல்லலாம்னு இருந்தேன்."

"அண்ணா நீங்க சுத்த மோசம்."

அவள் பொய் கோபத்தோடு சிணுங்க,

"ஏய் இந்தக் கோபம்தானே வேண்டாங்கிறது."

அவன் குறும்பாகவும், அதிக பட்ச சந்தோஷத்தோடும் கூறினான்!

இலக்கிய நயத்தில்
காதல் உதாரணங்கள் யாவும்
அந்தக் காலத்தில் இருந்துதான்
கொண்டுவர வேண்டுமோ
தற்கால உதாரணம் ஒன்று
தந்தால் என்னவாம்
என்று மடல் தீட்டியவர்களுக்காக...

# சந்தோச வேளையில் ஒரு சந்தேகம்








"ஜனனி கோல் ஃபோர் யூ."

டெலிபோன் ஒப்பரேட்டர் நுனி நாக்கால் தகவல் சொல்ல,

ஃபைல் புரட்டி குறிப்பெடுத்துக் கொண்டிருந்த 19 வயதான, ஸ்கேட் அணிந்து ரீ சேட் இன் பண்ணியிருந்த, ரீ சேட் உபயத்தில் இளமைகளின் விஸ்தீரணம் பளிச் பண்ணிக் கொண்டிருந்த ஜனனி, நாற்காலி தள்ளி எழுந்து, முன் நெற்றியில் விழுந்திருந்த முடி சரிசெய்தபடி போய்,

"தாங்யூ" என்று சொல்ல,

தன்னைவிட இவள் அழகாக இருக்கிறாளே என்று தினமும் பொறாமைப் பட்டு வயிறு எரியும் ஒப்பரேட்டர் 'தாங்யூ'வை அலட்சியம் பண்ணி, தன் விரல் நகங்களில் அன்று காலை பூசிய பொலிஷ் சரியாக இருக்கிறதா என்று அக்கறைப்பட்டபடி, காதை மட்டும் தீட்டி வைத்துக் கொண்டிருக்க,

மறுமுனையில் 'ஹலோ' என்ற குரல் மட்டும் கேட்டு, குரலுக்குரியவன் யாரென்று தெரிந்த நெருக்கமான பரிச்சயத்தில், யார் பேசுவது? என்ற கேள்விக்கு இடமில்லாமல் போக,

"குட்மோர்னிங்."

என்றாள் குரலில் வெட்கமும், அதிக பட்ச சந்தோசமும் கலந்து ஜனனி.

"மோனிங் குட் ஆக இருந்தால் போதுமோ ஜனனி. ஈவினிங்கும் குட் ஆக இருக்க வேண்டும்! சோ... ஈவினிங் எங்கே நாம் சந்திக்கலாம்?"

பதில் சொல்லாமல் டெலிபோன் ஒப்பரேட்டரைப் பார்க்க அவள் இப்போதும் நக அழகு பற்றியே ஆழ்ந்த கவலையில் இருந்தாள்.

"கஷ்டம்."

"என்ன கஷ்டம். பஸ் எல்லாம் ஒழுங்காக ஓடுது தாயே. அல்லது நான் வரவா அங்கே."

"வேண்டாம். வேண்டாம்."

"ஓ.கே. நீர் வாரும்."

"கஷ்டம். பார்க்கலாம். வேறை என்ன, வேலையெல்லாம் எப்படிப் போகுது?"

"நான் என்ன கேட்டனான்?"

"நான் இப்ப என்ன சொன்னனான்?"

"வருவீரோ? மாட்டீரோ?"

"பார்ப்பம்."

"அப்பிடியெண்டா?"

"அப்பிடித்தான்."

"பக்கத்திலை வில்லியோ."

"ஓம் ஓம். ஊரிலை இருந்து கடிதம் வரேல்லையோ?"

"வில்லிக்கு ஏன் பயப்பிடவேணும்?"

"என்ன பயம்? அம்மா எப்ப வாறாவாம்?"

"அவ வருவா. அது சரி உவ என்ன கதைக்கிறதை கேட்டுக்கொண்டு இருக்கிறாவோ?"

"இல்லை. இருக்கும்! அம்மா வந்தவுடனை சொல்லுங்கோ."

"சொல்லாமம? அப்ப என்ன செய்யிறா? வேறை வேலை செய்யிறமாதிரி காதை மட்டும் கொடுத்துக்கொண்டு இருக்கிறாவோ? யமகாதகி. வில்லி எண்டா வில்லிதான். எம்.என். ராஜம் மாதிரியப்பா."

ஜனனி சிரித்தாள். ஒப்பரேட்டரை பார்க்க, அவள் நிமிர்ந்து பார்த்த பார்வையில் நூறுவீதம் விரோதம் தெரிந்தது.

"அப்ப பிறகென்ன?"

"ஏன் கதைக்க விருப்பமில்லையாக்கும். பயங்கர பிஸியோ?"

"அப்பிடி இல்லை. அம்மாவுக்கு பாஸ் கொடுத்தாச்சாமோ?"

"எனக்கு வாற விசருக்கு. என்ன மாதிரி வருவீரோ இல்லையோ."

"இல்லையெண்டா என்ன நடக்குமாம்?"

"நேரடியா வீட்டை வந்து தூக்கிக் கொண்டு வரவேண்டியிருக்கும்."

"நல்லாய் இருக்கும். செய்யுங்கோ."

"இனிமேல் ஃபோனே எடுக்கமாட்டன் ஓ..."

"நல்லது. இருங்கோ பார்ப்பம்."

போர் பயனற்றது. உடனே போர் நிறுத்தம் செய்தான். மிரட்டல் ஆயுதம் கீழே போட்டான். சமாதான வாசகம் தயாரித்து,

"பார்க்காமல் இருக்கிறது எவளவு கஷ்டம் தெரியுமோ? நாலு நாள் 4 வருசம் மாதிரி இருக்குது. உமக்கு ஒரு இது கிடையாது."

ஒப்பரேட்டரின் மேசையில் இருந்த மற்றொரு தொலைபேசி உயிர்க்க, அதை எடுத்து அவள் மறுமுனையோடு பேச,

"சரி ஈவினிங் கட்டாயம் வருவேன். இப்ப சந்தோசமாக்கும்."

என்றாள் அவசரமாக, ஒப்பரேட்டர் மறு போனில் பேசுவதை கவனித்தபடி.

"ஏமாற்றினா நடக்கிற கதையே வேறை. பிறகுதான் என்னைப் பற்றித் தெரியும்."

"ஓ.கே. ஈவினிங் பார்க்கலாம்."

□□□

"என்ன, கோபமாக்கும்."

"ஏன் வாறது கஷ்டம் எண்டு சொன்னனீர்? இந்த லெவல் அடிக்கிற வேலை ஒண்டும் வேண்டாம்."

"அதுதான் சொன்ன மாதிரி வந்திருக்கிறனே? இப்ப நீங்களும் எனக்கு லெவல் எண்டு சொல்லிப் போட்டியள். நீங்கள் மட்டும்தான் சொல்லேல்லை எண்டு நினைச்சனான். இப்ப சொல்லிப் போட்டியள்."

கவலையாய் சொன்னாள். ஒரு பேச்சுக்கு சொன்னது அவளை சுட்டுவிட்டது என்று புரிந்து மெழுகாய் உருகிப் போனான் தனேஸ். அது தனேஸ்வரனின் சுருக்கம்.

"ஐயோ நான் சும்மா ஒரு பேச்சுக்கு சொன்னது. அதுக்குப் போய்..."

"என்ன சும்மா...நான் நம்பமாட்டன்."

"அது சரி. என்னை புரிஞ்சு கொண்டது அவளவுதான்."

"நான் சரியாய்தான் புரிஞ்சு வைத்திருக்கிறன்."

"கஷ்டம்."

"என்ன?"

"என்னைப் புரிஞ்சு கொள்ளுறது?"

இப்போது அவன் கவலை புரிந்து, தன் கரம் நீட்டி அவன் இடக்கரம் பற்றி இழுத்து தன் உள்ளங்கைகளுக்குள் சிறைப்படுத்திக் கொண்டாள்.

"ஏன் இவளவு ஆசை வைத்தீர்கள். கஷ்டம்தானே?"

"என்ன கஷ்டம்?"

"உங்களுக்கும் கஷ்டம். எனக்கும் கஷ்டம். சும்மா இருந்த என்னை குழப்பி, குளத்திலை கல்லெறிந்து...அப்பப்பா கஷ்டமப்பா."

"நான்தான் குழப்பினதாக்கும். நீர் இல்லை."

"ஏன், நான் என்ன செய்தனான்?"

"இந்த மேனகையைப் பற்றிக் கேள்விப்பட்டனீரோ?"

"யார் அது?"

"அதுதான். அந்த முனிவருக்கு முன்னாலே டான்ஸ் எல்லாம் ஆடி, அவரை உசுப்பி, எக்கச் சக்கமாய் உணர்ச்சி வசப்பட வைச்சு, பிறகு இசகு பிசகாகி...தெரியாதே கதை,"

"நான் என்ன டான்ஸ்சோ ஆடினனான்?"

"நீர் ஆடேல்லை. ஆனா உம்மைக் கண்ட என்னர மனசு இருக்குதே மனசு, அது ஆடத் தொடங்கிப் போட்டுது. பிறகென்ன அப்பிடியே சரிஞ்சு உம்மிலே விழுந்திட்டுது. இனி சத்தியமாய் திருப்பி எடுக்கேலாது."

அவள் உள்ளங்கையில் இருந்து தன் இடக்கரத்தை மட்டும் விடுவித்து உயர்த்தி தோள் தொட்டு தன்னோடு அணைத்தான்.

அவன் தோளில் தலை சரித்துக் கொண்டாள். சுகமாக இருந்தது. ஏதாவது பேச வேண்டுமே என்பதற்காக கேட்டாள்,

"என்னில் அப்படி என்னதான் கண்டனீங்கள்? ஏன் இவளவு ஆசை?"

## இலக்கிய நயம்

"எங்கள் ஜனாதிபதி மாதிரிப் பேசுகிறீர் நீர்."

"விளங்கேல்லை."

"நாட்டில் இனப்பிரச்சனையாலை பயங்கரமான விளைவுகள் எல்லாம் நடக்க, இனப்பிரச்சனையே இல்லை எண்டு சொல்லுறமாதிரி, அதாவது... யப்பா... இவளவு அழகான..."

அவன் விழிகள் செல்லுமிடம் புரிந்து, வெட்கத்தால் முகம் சிவந்து,

"சீ..ஆளைப்பார்."

"அம்சமான, ஆராயப்படவேண்டிய, அறிந்துகொள்ள வேண்டிய, இறங்கிவிட்டால் மீண்டுவரமுடியாத வலைகள், ஆயுதங்கள், முரசங்கள், முத்துக்கள் எல்லாம் இருக்க, மாடிவீட்டு ஏழையென்று பொய் சொல்லலாமோ நீர்?"

"போதும். போதும்."

"பேசியது போதும்தான்."

வேகமானான். அவளும் மோகமானாள். மேகமானான். அந்த மேகத்திடம் மழை காணும் ஆவலில் அவள் பூமியானாள்.

இடையிலே அவன் கேட்டான்.

"எனக்கொரு சந்தேகம்?"

அத்துமீறிய அவன் கரம் ஒன்றை தடுத்து நிறுத்தியபடி கேட்டாள்,

"என்ன?"

"உமது உடல் என்ன அமிழ்தத்தால் செய்யப்பட்டதா ஜனனி?"

பதில் சொல்லவில்லை. நாணமானாள்.

நாம் பதிலை திருவள்ளுவரிடம் கேட்போம்.

அதொன்றுமில்லையப்பா! தன் காதலியின் உடலை தீண்டும் காதலனுக்கு தொடும்போதெல்லாம் புதிய சீவ சக்தி வந்துவிடுகிறது. அதனால்தான் அமிழ்தத்தால் செய்யப்பட்ட உடலோ என்று ஐயம் வருகிறது என்பது திருவள்ளுவரின் பதில்.

**உறுதோ றுயிர் தளிப்பத் தீண்டலாற் பேதைக்**
**கமிழ்தி னியன்றன தோள்.**

குறள் 1106
அதிகாரம் 111

### கவனிக்கவும்

16ம் பக்கத்தில் இடம்பெற்றுள்ள **கனவு காணும் வாழ்க்கை** என்னும் சிறுகதையை எழுதியவர் **முகில் வண்ணன்**. கதையில் பெயர் விடுபட்டுள்ளது தவறுதல்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல–46

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | | ■ | 3 | 4 |
| 5 | | | ■ | 6 | | |
| | | ■ | ■ | | ■ | |
| | 7 | | | | | ■ |
| | | ■ | 8 | | | 9 |
| | | 10 | ■ | ■ | ■ | |
| ■ | 11 | | | | | |

**இடமிருந்து வலம்**
1. அன்புக்கு அடையாளமாகக் காட்டப்படுவது.
3. பாக்கி இருப்பதை இப்படியும் சொல்லலாம்.
5. ஆடைகளுக்கு இது அழகு.
6. நண்பனுக்கு எதிர்ச் சொல்.
7. வீதிகள் ஒழுங்காக இல்லாவிட்டால் இதுவும் பாதிக்கப்படும்.
8. ராகத்தில் ஒருவகை.
11. இதில் அதிசயமானவற்றிற்கு மதிப்பு அதிகம்.

**மேலிருந்து கீழ்**
1. பசியைத் தீர்க்க உதவும்.
2. பயிற்சி செய்யும் போது இதுவும் ஏற்படும்.
4. இந்தப் பெயரில் ஒரு திரைப்படமும் இருக்கிறது.
6. பாடலின் முடிவாய் வரும்.
9. உறுதியை இப்படியும் சொல்லலாம்.
10. தங்கத்தால் செய்தால் இதன் மதிப்பு அதிகம்தான்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 30.04.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-46
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு -05.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-44க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 க | டு | க் | க | ன் | ■ | 2 மா |
| றை | ■ | 3 ம | ந் | தி | ர | ம் |
| 4 யா | 5 ச | க | ம் | ■ | ■ | ப |
| ன் | ர் | ர | ■ | 6 சீ | 7 சோ | ழ |
| ■ | க் | ந் | ■ | தை | ம் | ம் |
| 8 ளி | க | த | க | ■ | ப | ■ |
| 9 கி | ரை | ம் | ■ | 10 க | ல் | வி |

குறுக்கெழுத்துப் போட்டி இல.44இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. வி. பாஸ்கர் ஆரையம்பதி.
2. ஏ. மகேஸ்வரி கொழும்பு-05.
3. எம். கிருஷ்ணன் ஹட்டன்.
4. எம்.ஐ.எம். அஷ்ரப் நிந்தவூர்.
5. ஆர். அல்பேட் மொரட்டுவை.
6. எஸ்.எம். ஜவாஹர் கல்முனை.
7. ஏ. பிரபாகர் திருகோணமலை.
8. எம்.பி.எம். ரமீஸ் மாத்தறை.
9. எஸ். கலைமொழி கொழும்பு-6.
10. ஏ.எவ். பதுறுன் நிஸா அக்குறணை.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக த்லா ரூபா 50/= வழங்கப்படும்.

## சிந்தியா பதில்கள்

மனிதனின் வாழ்க்கைக்கு தேவையானவை எவை?

**எஸ்.பழமுதிர்செல்வன்-அக்கரபத்தனை.**

உண்மை, நேர்மை, உழைப்பு.

□□

தென் மாகாணசபைத் தேர்தல் முடிவுக்கு பின்னர் சந்திரிகாவின் எண்ணத்தை கூறுங்களேன்?

**ஏ.எஸ்.முபாரக் இக்பால்-முள்ளிப்பொத்தானை.**

தென் மாகாணம் போலவே தேசம் முழுவதும் இருந்துவிட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நினைத்துக்கொண்டிருப்பார்.

□□

தற்போது வெளிவரும் புதிய பாடல்களின் கருத்து எப்படியுள்ளது?

**ஆர்.உதயச்சந்திரன்-அவிசாவளை.**

வார்த்தைகள் காதில் விழுந்தால்தானே கருத்துச் சொல்வதற்கு.

□□

பணத்தை கண்டு மனம் மாறுபவர்களை பற்றி..?

**நிர்மலா முருகையா-பண்டாரவளை.**

மனதுக்குள் குரங்கு வளர்ப்பவர்கள்.

□□

நமது பொருளாதார நிலை எப்படியிருக்கிறது?

**எஸ்.ரவிக்குமார்-திருகோணமலை.**

வளர்ந்த நாடுகளை வள்ளல்கள் என்று வாயாரப் புகழ்ந்து கொண்டிருக்கிறது.

□□

டியர் சிந்தியா! பெண் ஒரு புதிரா?

**க.சுதர்சன்-செங்கலடி.**

சுவாரசியமான புதிர். அதை விடுவிக்க முனைந்து கொண்டிருப்பது வாழ்வில் சுவையான விசயம்தானே?

□□

என் காதலியை கவரக்கூடியதாக எனக்கு ஒரு கவிதை சொல்லுங்களேன் பிளீஸ்?

**ஆர்.மார்டின்-கொழும்பு-7.**

காதலியே ஒரு அழகான கவிதைதானே மார்டின். கையில் வெண்ணெய் இருக்க நெய் தேடி அலையலாமோ?

□□

### நமது பொருளாதார நிலை எப்படியிருக்கிறது?

முஸ்லிம் காங்கிரசின் வளர்ச்சி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**எம்.பஷீர்-கல்முனை.**

முஸ்லிம்கள் ஒன்றுபட வேண்டும் என்று முனைவது தவறல்ல. ஆனால் தமக்கெதிராக வாக்குப் போட்டவர்கள் அனைவரும் தமிழர்கள்; போத்தல்களால் வாங்கப்பட்டவர்கள் என்று எப்படி சொல்கிறார்கள்; வாக்கு சீட்டில் புள்ளடி போட்டவர்களது முகம் தெரியும் ஏற்பாடு ஏதாவது உண்டா என்பதுதான் குழப்பம். அஷ்ரப் கொஞ்சம் கவனிக்க வேண்டும்.

□□

பெரியவர்களிடம் காலில் விழுந்து ஆசிர்வாதம் பெறுவது கௌரவக் குறைச்சலா சிந்தியா?

**சி.ஊர்மிளா-கண்டி.**

வயதில் பெரியவர்கள் என்பதால் மட்டும் எல்லோரும் வணக்கத்துக்குரியவர்களாகி விடுவதில்லை. பாத்திரம் அறிந்து பிச்சையிட வேண்டும். தகுதி அறிந்துதான் மரியாதை கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்கும்போது கௌரவக் குறைச்சல் ஒன்றும் கிடையாது.

□□

தமிழ் மக்களை காப்பாற்றுவதற்கு யாரால் முடியும்?

**அ.ஜெனிபா-குருநாகல்.**

காப்பாற்றப் போவதாக சொல்லிக்கொண்டிருப்பவர்கள்தான் கவிழ்த்தும் கொண்டிருக் கிறார்கள். யாரைத்தான் நம்புவதோ பாவம் மக்கள்.

□□

ஒரு மனிதனின் ஆணவத்தை எவ்வாறு அடக்கலாம்?

**சீ.கணேசமூர்த்தி-அக்கரைப்பற்று-08.**

கஷ்டப்படுவானேன். அவ்வாறானவர்களது ஆணவமே அவர்களை அடக்குவது மட்டுமல்ல உயரத்தில் இருந்து அறுத்தும் விழுத்தும்.

□□

நட்பு நிலைத்திருக்க என்ன செய்ய வேண்டும்?

**எல்.செல்வேந்திரன்-மட்டக்களப்பு.**

நாகரிகமான இடைவெளியொன்றை நடுவில் வைத்திருக்க வேண்டும். அந்தரத்தில் உதவுங்கள். அந்தரங்கத்தில் அனாவசியமின்றி மூக்கை நுழைக்காமல் இருக்க பழகுங்கள். நட்பு நிலைக்கும்.

□□



இலங்கை அகதிகளை திருப்பி அனுப்ப செல்வி ஜெயலலிதா அவசரம் காட்டுகிறாரே?

**மா.ஜனகன்-வவுனியா.**

தனது சிம்மாசனத்துக்கு அகதிகள் பிரச்சனை சிம்மசொப்பனமாகிவிடுமோ என்று பயப்படுகிறார். இலங்கை அகதிகள் இல்லா விட்டால் முகமூடிக் கொலைகளும், முடிச்சு மாறல்களும் மறைந்துவிடும் என்பதுபோல பேசியிருப்பது அவர் தகுதிக்கு அழகல்ல.

□□

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

**இவ்வாரம் (24.04.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

**அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்**

# மகாபாரதம்

அங்கம் 26

**காலத்தின் குரல்:** மகாபாரதம் பாரத நாட்டு மக்களின் பிரச்சனைகளை அடிப்படையாகக் கொண்ட கதையல்ல. மெஞ்ஞானத்துக்கும் அஞ்ஞானத்துக்குமிடையிலான போராட்டங்களை எடுத்துக்காட்டும் காலக் கண்ணாடி அது. கிருஷ்ணன் மெஞ்ஞானத்தைப் பிரதிபலிக்க திருதராட்டிரனோ அஞ்ஞான அந்தகாரத்தில் உழல்பவனாகிறான். இந்த இரு பாத்திரங்களையும் பின்னிப் பிணைந்தே காவியம் செல்கிறது. ஆகவே கிருஷ்ணனையும் நாம் அடிக்கடி தரிசிக்க வேண்டியிருக்கிறது. இதற்காக சாந்திப முனிவரின் ஆசிரமத்துக்கு மீண்டும் செல்கிறோம். மகான் பரசுராமர் கிருஷ்ணனைக் காண வரும்போது நாமும் அங்கே இருப்பது நல்லது.

-காட்சி தொடக்கம்-

சாந்திப முனிவரின் ஆசிரமம்

**சாந்தி:** குசேலா! குருமாதாவிடம் போய் பரசுராமர் அவர்களுக்கும் உணவு ஆயத்தம் செய்யும்படி கூறு.

குசேலர் சென்றதும் பரசுராமரை கிருஷ்ணன் அணுகுகிறான்.

**கிருஷ்:** தங்கள் வாழ்த்துக்காகக் காத்திருக்கிறேன்.

**பரசு:** என்னோடு விளையாடுகிறாயா கிருஷ்ணா? என் வருகையை விரும்பியவன் நீயல்லவா?

**கிருஷ்:** நான் என்ன செய்ய வேண்டும் ஐயா?

**பரசு:** உனக்குக் கட்டளையிட நான் யாரப்பா? நீ வேண்டுவதனால் கூறுகிறேன். எனது வாழ்த்துக்களையும் தருகிறேன். சத்திரியர்களில் உயர்வானவனான ஸ்ரீ இராமபிரானுடன் எனது உலக விவகாரங்களை விட்டுவிட்டேன். அதன்பின் சத்திரியர்களும் வரம்பு கடந்து விட்டார்கள்.

பரசுராமர் தனது வலது கரத்தை உயர்த்தியதும் அதில் சக்கரம் சுழல்கிறது.

**பரசு:** இந்தப் புனிதமான ஆயுதம் உன் கையில் இருக்கட்டும். இதன் உதவியுடன் இந்த அண்டசராசரத்தின் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்வாயாக.

கிருஷ்ணன் தனது கையை உயர்த்த பரசுராமரின் கையிலிருந்து சக்கரம் கிருஷ்ணனின் கைக்கு இடம் மாறுகிறது.

**பரசு:** புதிய யுகம் புலர்ந்து விட்டது. கிருஷ்ணா! நீ எதற்காக அவதாரம் எடுத்தாயோ அக்கடமையினை நிறைவேற்றும் காலம் வந்துவிட்டது. முதலில் மதுராபுரி சென்று அங்கு ஜராசந்தன் அடிக்கடி புரியும் கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியது உன் பொறுப்பு.

கிருஷ்ணனும் பலராமனும் விடை பெறுகின்றனர்.

-காட்சி மாற்றம்-

போர் முனை- உக்கிரசேனர் தலைமையில் வாசுதேவருக்கும் அக்ருதருக்கும் படைநடத்த மறுமுனையில் ஜராசந்தன் மும்முரமாகத் தாக்குகிறான். கிருஷ்ணனும் பலராமனும் வரும் இரதம் யுத்தகளத்தை அடைகிறது. கிருஷ்ணர் தனது சுதர்சன சக்கரத்தை ஏவி உக்கிரசேனரின் படைக்கு உதவுகிறார். எதிரிகளை வென்றதும் மதுரா நகர்ப் படைகள் வெற்றி கொண்டாடுகின்றனர்.

**உக்கிரசேனர்:** கிருஷ்ணனும் பலராமனும் சரியான சந்தர்ப்பத்தில் வந்து உதவா விட்டால் வெற்றி கிட்டியிருக்க முடியாது. உண்மையில் உங்களிருவருக்கும் நாங்கள் கடமைப்பட்டவர்கள்.

**கிருஷ்:** அப்படிக் கூறலாகாது மகாராஜா! பூமாதேவிக்கு உதவினேன் என்று எவரும் பெருமை கொள்ள முடியாது. எனது தலையாய கடமையைத்தான் செய்தேன். இருப்பினும் ஜராசந்தன் இத்துடன் ஓய்ந்துவிடுவான் என்று எண்ணலாகாது.

**பலரா:** நாங்கள் யாதவ குலத்தவர். மகத நாட்டுக்கு அஞ்சப்போவதில்லை.

**உக்ர:** கிருஷ்ணன் தேவகியின் எட்டாவது புதல்வன். கம்சனின் கொடுமைகளிலிருந்து இந்த நாட்டைக் காப்பதற்காக அவதரித்தவன். அவன் கூறும் கருத்துக்களையும் முழுமையாகக் கேட்போம்.

**அக்ருதர்:** அதுதான் எப்போதோ முடிந்த கதையாகிவிட்டதே!

**வாசு:** போர் இன்னும் முடியவில்லை பிரபு. கம்சனின் முடிவைத் தொடர்ந்து அடிக்கடி ஜராசந்தன் படை எடுத்து தாக்கி வருகிறான்.

**கிருஷ்:** அப்பா கூறுவது சரியே!

**பலரா:** அப்போ ஜராசந்தனை ஒரேயடியாக முடித்து விடலாம் அல்லவா?

**கிருஷ்:** *(சிரித்தவண்ணம்)* ஒரு வீரன் கொலைவெறி கொண்டவனாக மட்டுமிருக்கலாகாது. போர் புரிவதானாலும் அதற்கான நல்ல காரணம் அவசியமல்லவா?

**வாசு:** அப்போ எங்கள் மீது கருணை காட்டும் வண்ணம் ஜராசந்தனிடம் போய்க் கெஞ்சவேண்டுமா?

**அமைச்சர்:** கிருஷ்ணா! தங்கள் கருத்து என்ன? தோல்வியை ஒப்புக்கொள்வது கோழைத்தனமல்லவா?

**கிருஷ்:** இல்லை. எவ்வகையிலும் எம் தாயகத்தின் பெருமையை நாம் காப்பாற்றியாக வேண்டும்.

**பலரா:** கிருஷ்ணா! எப்போதும்போல் சுற்றி வளைக்காமல் நேரடியாகவே எதையும் கூறமாட்டாயா?

**கிருஷ்:** யாதவகுலத்தவர் அனைவரும் மதுராபுரியை விட்டு வெளியேற வேண்டும்.

இதனைக் கூறியதும் சபையோர் அனைவரும் "மதுராவை விட்டு வெளியேற மாட்டோம்" என்று ஆரவாரிக்கின்றனர்.

**கிருஷ்:** கோபம் அறிவுக்கு எதிரி.

**பலரா:** ஜராசந்தன் தாக்குவான் என்று பயந்து எமது தாய் நாட்டைவிட்டு ஓடிவிட வேண்டும் என்கிறாயா? நந்தகோன் கிராமத்துக்கும் அவமானம் அல்லவா?

**அக்ரு:** எம்மைக் கோழைகள் என்று வரலாறு பொறித்துவிடுமே!

**கிருஷ்:** உண்மையில் எமது தாய்நாட்டின் பெருமையினைப் பாதுகாக்கவே நான் முயலுகிறேன். சரியாகச் சொல்வதானால் மகத நாட்டு மன்னனுக்கும் எனக்கும் தான் இந்தப் போர். கம்சனைக் கொன்றமையினால் அவன் மகள்கள் இருவரும் விதவைகளாகிவிட்டனர். ஆகவே, இந்தச் சண்டையில் மதுராபுரி ஏன் அழிய வேண்டும்?

**பலரா:** ஜராசந்தனை நீ மட்டும் தனித்தே வீழ்த்திவிடலாமே!

**கிருஷ்:** வேறு வழிகள் இல்லையானால் மட்டுமே நான் அந்த முடிவுக்கு வரலாம்.

**வாசு:** வேறு மார்க்கங்களும் உண்டா..?

**கிருஷ்:** ஆம்! மதுராவை யுத்த பீதியிலிருந்து காக்கும் வழி ஒன்றுண்டு. மதுராபுரியை விட்டு வேறோர் இடம் செல்ல வேண்டும்.

சபையோர் அதிர்ச்சியடைகின்றனர்.

**கிருஷ்:** மதுராபுரிக்கு பிரியாவிடை கூறும் காலம் வந்துவிட்டது. துவாரகை என்ற பெயரில் புதிய நகரம் அமைக்கப்பட வேண்டும். பாதுகாப்புடன் சுபீட்சமாக அங்கு வாழலாம்.

**பலரா:** இது நமக்குப் பெரும் அவமானத்தைத் தான் தேடித்தரும்.

**கிருஷ்:** கோழை என்ற பெயர் எனக்குக் கிட்டினாலும் நான் கவலை கொள்ளப் போவதில்லை. எவ்வாறு அழைக்கப்பட்டாலும் நான் எப்போதும் கிருஷ்ணனாகவே இருப்பேன்.

**பலரா:** சுதர்சன சக்கரம் உன்கையிலுள்ளது. அதனைப் பயன்படுத்தி ஜராசந்தனுக்கு முடிவு கட்ட உன்னால் முடியாதா?

**கிருஷ்:** அந்தப் பெருமை மிகுந்த ஆயுதத்தால் கொய்யப்படும் அளவு அவன் தலை அத்தனை சிறப்புடையதல்ல. உண்மையில் இந்த மண்ணின் மீது பற்றுக் கொண்டிருந்தால் இந்த இடத்தைவிட்டு வேறு இடம் நாடவேண்டியதே நல்லது. இதுவே எனது கோரிக்கை. இனி மகாராஜாவின் தீர்மானத்துக்கு விட்டு விடுகிறேன்.

**உக்ர:** கிருஷ்ணனின் கருத்தினை நான் ஆதரிக்கிறேன்.

சபையோர் அனைவரும் அமர்கின்றனர்.

**பலரா:** கிருஷ்ணனை இறுதியில் சகலரும் ஆதரிப்பீர்கள் என்று எனக்குத் தெரியும். சரி, துவாரகாபுரியை நிர்மாணிப்பவர் யார்?

**கிருஷ்:** விஸ்வசர்மா அவர்கள் நிர்மாணிப்பார்கள்.

விஸ்வசர்மா தோன்றி கிருஷ்ணனுக்கு வணக்கம் செலுத்துகிறார்.

**கிருஷ்:** மதுராபுரி மன்னர் உக்ரசேனரின் சார்பில் தங்களை வரவேற்கிறேன். புதிய நகரமான துவாரகாபுரி ஆழ்கடலால் சூழப்பட்ட பாதுகாப்பான நகரமாக விளங்க வேண்டும்.

**விஸ்வ:** அதற்கான மாதிரி உருவமைப்பினை இதோ கொண்டு வந்திருக்கிறேன் பிரபு!

சபையோர் முன் மாதிரியினை விஸ்வகர்மா வைக்கிறார்.

**கிருஷ்:** மகாராஜா! உலகிலேயே ஈடு இணையற்ற நகரமாக துவாரகாபுரி விளங்கும். அண்ணா! தங்கள் அபிப்பிராயம் என்னவோ?

**பலரா:** எல்லாம் ஏற்கனவே தீட்டப்பட்ட உனது திட்டம் என்பது புலனாகிறது.

**கிருஷ்:** அமைதி நிறைந்த நகரான துவாரகாபுரி அமைக்கும் பணியினை என்று தொடங்கப்போகிறீர்கள்? ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கிறோம்.

**காலத்தின்குரல்: எல்லையைக் கடந்து நான் துவாரகாபுரிக்கு உங்களையும் அழைத்து வந்துவிடுகிறேன். தேவர்களால் நிர்மாணிக்கப்பட்ட அந்நகரில் யாதவகுலத்தவர் குடியேறி, அமைதியும் அன்பும் அரசோச்ச வாழ்கிறார்கள்.**

- ஆழ்கடல் சூழ்ந்த துவாரகாபுரி அழகுடன் காட்சி தருகிறது.
- துவாரகாவின் அரசவை கூடுகிறது.
- அக்ருதர், வாசுதேவர், கிருஷ்ணன் மற்றும் பலராமர், ஆகியோர் மாமன்னர் உக்கிரசேனருக்கு வணக்கம் செலுத்தி ஆசனங்களில் அமர்கின்றனர்.

**உக்கி:** மதுராபுரியைவிட்டு நீங்கவேண்டும் என்று கிருஷ்ணன் ஏன் கூறினான் என்பதனை அனைவரும் இப்பொழுது ஒப்புக்கொள்ளுகிறீர்களா?

**பலரா:** எனது தம்பியின் எண்ணங்கள் எந்த வகையிலும் தவறுவதில்லை. இருப்பினும் போருக்குப் பயந்து ஓடிவந்தது எனக்குப் பிடிக்கவேயில்லை.

**கிருஷ்:** அண்ணா! எனது தீர்மானங்கள் பின் விளைவுகளை அடிப்படையாகக் கொண்டவை. இங்கு எந்தப் பிரச்சனையுமற்று அமைதியாக வாழ்கிறோம். அமைதியே ஆக்கம் தரும்- சமாதானமே சுபீட்சத்தின் திறவுகோல்.

சத்தியாகி என்பவர் வருகிறார்- மன்னவரை வணங்குகிறார்.

**உக்ர:** சத்தியாகி! அஸ்தினாபுரியிலிருந்து எப்போது வந்தீர்கள்? அங்கு நிலமைகள் எப்படி?

**சத்தி:** நேற்றுத்தான் வந்தேன். அங்கு அமைதி என்பது போல் வெளியே தோன்றியபோதிலும் உட்பூசல்கள் அதிகரித்துவிட்டன மகாராஜா! பாரத நாட்டு வழக்கப்படி பார்த்தால் இளவரசர் யுதிஷ்டிரர்தான் ஆட்சி பீடம் ஏற வேண்டியவர். மக்களும் அதனையே பெரிதும் விரும்புகின்றனர்.

**அக்ரு:** அப்போ அங்கு வேறு பிரச்சினை எழ நியாயமில்லையே!

**சக்தி:** அரியாசனம் சிறந்த மன்னரையே எதிர்பார்க்கிறது. ஏற்றவர் யுதிஷ்டிரன். ஆனால் திருதராட்டினரோ தன் மகன் துரியோதனனுக்கு முடிசூட்ட ஆசைப் படுகிறார்.

**உக்கி:** அந்த நிலமை ஏன் ஏற்படவேண்டும்? பிதாமகர் பீஷ்மர் தலையிட்டு சீர் படுத்த முடியவில்லையா?

**சக்தி:** சூழ்நிலை காரணமாக அவர் எந்த முடிவுக்கும் வரமுடியாதவராகிவிட்டார்.

**கிருஷ்:** சிறந்த ஞானிகளும் அறிவாளிகளும் அங்கிருந்தும் சுமுகமாகப் பிரச்சனை தீர்க்கப்படவில்லையானால் நிர்மூலத்தைத் தவிர்க்க முடியாமற்போகும்.

-காட்சி மாற்றம்-

திருதராட்டிரன் அரண்மனை.

**பீஷ்ம:** அஸ்தினாபுரியின் அடுத்த மன்னர் யார் என்பதை அறிவிக்க இன்னும் ஏன் தாமதிக்க வேண்டும் மகாராஜா!

**சகுனி:** இதற்கான தீர்மானத்தை எடுப்பது அத்தனை சுலபமானதொன்றல்லவே!

**பீஷ்ம:** காந்தார நாட்டு இளவரசரின் அறிவுரையினை நான் கோரவில்லையே!

**சகுனி:** எனது மைத்துனருக்காகவே நான் குறுக்கிடவேண்டியிருக்கிறது.

**பீஷ்ம:** அவரே நேரடியாக என்னிடம் பேசட்டும்!

**சகுனி:** தங்கள் மீது அவர் வைத்துள்ள மரியாதை காரணமாக அவரால் தங்களிடம் பேச முடியாதிருக்கிறது. அஸ்தினாபுரி மீது தாங்கள் எடுத்துள்ள கடமையினையும் தாங்கள் மறந்து விடலாகாது சகோதரரே!

**பீஷ்ம:** நான் என் கடமையை மறக்கவில்லை. நாட்டின்மீது நான் கொண்டுள்ள அக்கறையையும் பற்றினையும் மன்னரும் அறிவார் காந்தார இளவரசரே!

**திருத:** தாங்கள் எனக்குக் கட்டளையிடலாம் அல்லவா சித்தப்பா!

**பீஷ்ம:** கட்டளை இட எனக்கு அதிகாரம் இல்லை. ஆட்சிப் பொறுப்பேற்கத் தகுதியானவரைத் தேர்ந்தெடுக்க வேண்டியவர் தாங்களே! தங்கள் மகன்களை மட்டும் கருத்தில் கொள்ளாமல் முழு நாட்டின் நன்மையையும் கருத்தில் கொண்டு தீர்மானம் எடுக்க வேண்டும் என்பதை மறக்க வேண்டாம். மக்கள் கருத்துக்கு மதிப்பளிக்கவில்லையானால் பெரும் பிரச்சினைகளையும் எதிர்கொள்ள வேண்டிவரும்.

இவ்வாறு கூறி பீஷ்மர் சென்றதும் திருதராட்டினர் கவலையில் ஆழ்கிறார்.

**திருத:** மைத்துனர் சகுனி! நான் துரியோதனனை அரசனாக அறிவித்தால் மக்கள் கிளர்ச்சி செய்வார்கள் என்ற கருத்திலா சித்தப்பா பீஷ்மர் அவ்வாறு கூறினார்?

**சகுனி:** அக்கருத்தை வெறுமனே அவர் கூறவில்லையே! எச்சரிக்கையாக விடுத்துள்ளார் மகாராஜா!

**திருத:** உண்மையாகவா? என்னால் நம்ப முடியவில்லை. அவர் கிளர்ச்சியைப் பற்றிக்கூறியமையினால் அவருக்கு ஏதோ தகவல் கிட்டியிருக்கவேண்டும். சகுனி! நமது ஒற்றர்களை ஏவி மக்களின் மனோநிலை எவ்வாறுள்ளது என்று அறிந்துவர ஏற்பாடு செய்!

★★★

நகரில் மக்கள் கூட்டம். ஒற்றன் ஒருவன் மக்களிடம் மாறு வேடத்தில் உலவுகிறான்.

- யுதிஷ்டிரன் அஸ்தினாபுரி மன்னனாவதையே மக்கள் விரும்புகின்றனர் என்பதை மக்களுடன் பழகும்போது ஒற்றன் அறிகிறான்.
- துரியோதனன் மன்னனாக்கப்பட்டால் மக்கள் கிளர்ச்சி செய்வார்கள் என்பதனையும் ஒற்றன் அறிகிறான்.

**கிராமவாசி:** அஸ்தினாபுரியின் அரசனாக யிதிஷ்டிரன் முடிசூடுவதையே சாதாரண பாமரர்களும் விரும்புகின்றனர். பாண்டவர்களில் மூத்தவனும் அவனே!

**ஒற்றன்:** அரசனாகும் தகுதி துரியோதனனுக்கும் இருக்கிறதல்லவா?

**கி.வாசி:** என்ன சொன்னாய்?

**ஒற்றன்:** ஒன்றுமில்லை அப்பனே.

இவ்வாறு கூறிய ஒற்றன் வேறிடம் சென்ற போதும் மக்கள் அதே கருத்தையே தெரிவிக்கின்றனர். தான் அறிந்தவற்றைக் கூற ஒற்றன் சகுனியிடம் வருகிறான்.

★★★

சகுனியின் இருப்பிடம்- பகடையை உருட்டுகிறான்.

**சகுனி:** ஐந்தும் இரண்டும் ஏழு...!

**ஒற்றன்:** வணக்கம் பிரபு!

**சகுனி:** என்ன தகவல் கொண்டு வந்திருக்கிறாய்?

**ஒற்ற:** நலம் தரும் செய்தி எதனையும் கொண்டு வரமுடியவில்லை பிரபு!

**சகுனி:** அப்படியா?- சரி நீ போ...

பகடையை உருட்டுகிறான். எண் 8 விழுகிறது.

★★★

துரியோதனனின் அரண்மனை- படுக்கையில் துரியோதனன் தூங்குகிறான்.

**சகுனி:** தூங்குவதற்கு இது தருணமல்லடா மருமகனே!எழுந்திரு.

**துரியோ:** மாமா... என்ன இந்த அகால வேளையில்?

**சகுனி:** விழித்திருக்க வேண்டிய வேளை இது!

தூங்குகிறாய்! நிலத்திலிருந்து வேரோடு பிடுங்கி எறியப்படுகிறாய். வானம் கீழிறங்கி உன் தலையில் முட்டுகிறது.

**துரியோ:** ஏதாவது விபத்து நடந்துவிட்டதா மாமா?

**சகுனி:** இன்னும் இல்லை. உனது அப்பா நெருக்கடியில் சிக்கியுள்ளார். யுதிஷ்டிரனை அரசனாக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுவடைந்துவிட்டன.

**துரியோ:** நடக்க முடியாது! அப்பா எனக்கு அநீதி இழைக்க மாட்டார்.

**சகுனி:** நீ விழித்திருக்கும்போதே கிரீடத்துடன் அரியணையிலேறி யுதிஷ்டிரன் உன்னைப் பார்த்துச் சிரிக்கப் போகிறான்.

**துரியோ:** மாமா நான் என்ன செய்ய வேண்டும்?

**சகுனி:** தூங்கிக்கொண்டேயிருக்கும் உன் அப்பாவிடம் போ! உனது உரிமையை நிலைநாட்ட உடன் புறப்படு.

துரியோதனன் வெகுண்டெழுந்து திருதராட்டினரும் காந்தாரியுமுள்ள அரண்மனைக்குச் செல்கிறான்.

**துரியோ:** அப்பா! நான் கேள்விப்பட்டது உண்மையா? யுதிஷ்டிரனை அரசனாக்கும்படி நீங்கள் நிர்ப்பந்திக்கப்படுகிறீர்களாம். அஸ்தினாபுரியின் மாமன்னருக்குக் கட்டளையிட எவருக்கு உரிமை இருக்கிறது?

**திருத:** ஆத்திரப்பட வேண்டாம் மகனே!

**துரியோ:** நான் என்ன செய்ய வேண்டும் அப்பா? எனது உரிமைகளை என்னிடமிருந்து பிடுங்கி வேறொருவரிடம் கொடுக்க என்னைப் பெற்ற தந்தையே முடிவெடுத்துவிட்டார். அஸ்தினாபுரி மாமன்னரின் மூத்தமகன் நானிருக்க வேறொருவருக்கு அரசுரிமையை வழங்கலாமா?

**காந்தா:** பாரம்பரிய வழக்கத்தின்படி மன்னரின் மூத்த மகன் என்ற தகுதிமட்டுமிருந்தால் மன்னரின் வாரிசாகிவிட முடியாது. பரதச் சக்கரவர்த்தியும்....

**துரியோ:** நூற்றாண்டுகளுக்கு முன் நடந்தவை பற்றி எனக்குக் கவலையில்லை. முன்னேற முயல்பவன் பின் நோக்க வேண்டியதில்லை. அரசியலின் பெயரால் எனது தந்தையின் உரிமையை விதுரர் தட்டிப்பறித்தபோது தந்தையார் பட்ட வேதனையை அறிவீர்கள் அல்லவா?

அப்பா பார்வை இழந்தவர்தான். ஆனால் நான்..! நான் பார்வை அற்றவனல்ல. கவுரவ வம்சத் தலைமகன் நான். எனக்குரிய உரிமைகள் வேறொருவருக்கு அளிக்கப்படுவது எனக்குத் தாங்க முடியாத அவமானம். அவமானத்தைத் தாங்கிக்கொள்ளும் திராணியை என் தந்தை எனக்குப் புகட்டவில்லை.

**திருத:** உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த வேண்டும் மகனே! ஆத்திரம் கண்ணை மறைத்துவிடும். அமைதியாக இரு.

**துரியோ:** நான் ஒரு துர்ப்பாக்கியசாலி. அப்பா பிறவியிலேயே பார்வை இழந்தவர். கணவனுக்கு உடந்தையாக எனது தாயே தனது பார்வையை இறுக மூடிக் கொண்டாள். அவமானத்தினாலும் புறக்கணிப்பினாலும் நானும் இன்று அந்தகனாகிவிட்டேன். எனக்கு அநீதி இழைத்துவிட்டு நீங்கள் அமைதியாகத் தூங்கலாம். ஆனால் இத்துடன் எல்லாமே முடிந்துவிடவில்லை என்று எச்சரிக்க விரும்புகிறேன்.

இவ்வாறு கூறிய துரியோதனன் கோபத்துடன் வெளியேறுகிறான். காந்தாரி தடுக்க முயன்றும் முடியவில்லை.

**காந்தா:** பிரபு என் கைகளைக் கொஞ்சம் பிடியுங்கள். எனக்கு பயமாக இருக்கிறது. மகனுக்கு நாம் அதிகமான இடம் கொடுத்து அவனைப் பழுதாக்கிவிட்டோம் என்றே எனக்குப் படுகிறது.

**திருத:** இல்லை. அவன் முக்கியமான கருத்துக்களையே முன் வைத்திருக்கிறான். நான் அந்தகனாகப் பிறக்கவில்லையானால் தம்பி பாண்டு இந்நாட்டின் மன்னனாக வந்திருக்க முடியாது. எனது குறைபாட்டுக்காக எனது மகன் புறக்கணிக்கப்படலாமா? அரசியல் கோட்பாடுகள் என்னதான் கூறுகின்றன என்பதனை விதுரரிடம் இன்று கேட்கப் போகிறேன்.

**காந்தா:** விதுரரிடம் ஏன் போகவேண்டும்? பிதாமகர் பீஷ்மரிடம் கேட்பதுதானே! அவர் நீதிக்கு மாறாக எதையும், செய்யமாட்டார் அல்லவா?

★★★

பீஷ்மர் கங்கைக் கரை சென்று கங்கா தேவியைத் துதிக்க அவர் தோன்றுகிறார்.

**பீஷ்ம:** வணக்கம் தாயே!

**கங்கை:** நீடூழி வாழ்க மகனே!

**பீஷ்ம:** அம்மா! எனது துயரங்கள் தீரும் நாள் எந் நாளோ?

**கங்கை:** அஸ்தினாபுரி என்று பாதுகாப்பான நிலையினை அடைகிறதோ அன்றே உன் பிரச்சனைகள் தீரும். திருப்தியற்ற இன்றையச் சூழலைப் பெரும் சுமையாகக் கருதலாகாது என் வீர மகனே!

**பீஷ்ம:** பாண்டு புத்திரர்களால்தான் நாட்டைப் பாதுகாக்க முடியும் என்பதே என் கருத்துத்தாயே!

**கங்கை:** எல்லாம் வல்ல இறைவன் நீயல்ல மகனே! இப்பூமியே உனக்கு ஒரு போர்க் களம். உனது இறுதி இலட்சியங்களை அடைய போராட வேண்டியது உனது கடமை மகனே!

**பீஷ்ம:** நான் விரும்பியே ஏற்ற பாதை இது. பெற்றாரின் அரவணைப்பைப் பெற முடியாத பிள்ளை எப்போதும் பேரவாவாகிக் கொண்டிருக்கும். எனக்கு துயரம் தோன்றும் வேளைகளில் தாயே உங்களை தேடி ஓடி வருகிறேன்.

அம்மா! அஸ்தினாபுரத்தின் வரலாற்றில் நாளை மிக முக்கியமான" நாள். ஒரு தந்தையின் பாசத்துக்கும் அரசரின் நீதிக்கும் இடையில் நடைபெறவிருக்கும் மோதலில் அஸ்தினாபுரி மக்கள் நீதிபெற அருள் பாலியுங்கள் தாயே!

**கங்கை:** விதியை வெல்ல எவராலும் முடியாது மகனே! அமைதியைக் கடைப்பிடி.

கங்கை மறைகிறாள். பீஷ்மர் அமைதியடைந்து திரும்புகிறார்.

-காட்சி மாற்றம்-

அஸ்தினாபுரி அரசவை.

**திருத:** பெரியப்பா! கவுரவர்களின் மூத்தவர் தாங்களே! துரியோதனன் எழுப்பியுள்ள பிரச்சினைகளுக்கு தங்கள் தீர்வு என்ன?

**பீஷ்ம:** அரசியல் பிரச்சனையை குடும்ப பிரச்சினையாக்குவது முறையற்றது மகாராஜா!

**விதுர:** தாங்கள் பார்வையற்றவராக தொடர்ந்து அரசராகவிருப்பது தனக்கு இடையூறாக இருப்பதாக துரியோதனன் கருதுகிறான்.

**திருத:** அவன் கருத்தில் நியாயமுண்டு. ஆனால் இதற்கு ஏற்ற விடைதான் கிடைக்கவில்லையே!

**கிருபா:** துரியோதனனின் நிலைப்பாட்டை நியாப்படுத்த முயல்வது அடிப்படையிலேயே பொருத்தமற்றது மகாராஜா!

**திருத:** நான் என்ன செய்ய வேண்டும் என்பதைக் கூறுங்கள். என் மகனின் கோரிக்கையிலும் தவறிருப்பதாகத் தெரியவில்லை. என் மகனைப் போன்றே என் தம்பி பாண்டுவின் புத்திரர்களையும் நேசிக்கிறேன். துரோணாச்சாரியாரின் அபிப்பிராயம் என்னவோ?

**துரோ:** எல்லோரும் எனது மாணவர்களே! யுதிஷ்டிரன்தான் அரசனாகத் தகுதியுடையவன் என்று நான் கூறினால், அர்ச்சுனன் எனது அபிமான மாணவன் என்பதனால் தான் நான் பாண்டவர்கள் பக்கம் சார்ந்துவிட்டேன் என்று துரியோதனன் கருதிவிடலாகாது.

**சேனாபதி:** யுதிஷ்டிரன் அரசனாக்கப்படாவிட்டால் மக்கள் கிளர்ந்தெழுவார்கள். நானும் அவர்களுடன் சேரக்கூடும்.

**பீஷ்ம:** மக்கள் கிளர்ச்சிக்கு மன்னன் அஞ்சுவதானால் அவன் ஆட்சி புரிய அருகதையற்றவன். மக்கள் நலம் கருதியே தன் தீர்ப்பினை மன்னன் வழங்க வேண்டும்.

**அமைச்சர்:** சேனாதிபதியின் கருத்தை நான் ஆதரிக்கிறேன். மக்களின் நலனைக் கருத்தில் கொண்டே எமது தீர்மானம் அமைய வேண்டும்.

**பீஷ்ம:** அஸ்தினாபுர மாமன்னரை அச்சுறுத்துவதை என்னால் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது.

**விதுர:** அவ்வாறு எதுவும் நடக்கப் போவதில்லை. துரியோதனனின் கோரிக்கை அடிப்படையற்றது மகாராஜா! அஸ்தினாபுரி உங்கள் சொந்தச் சொத்தல்ல. யுதிஷ்டிரனின் தந்தைக்குரித்தான அரியணைக்கு நீங்கள் பாதுகாவலர் மட்டுமே! அரசனாகும் தகுதி யுதிஷ்டிரனுக்கே என்பதே என் கருத்து.

**திருத:** யுதிஷ்டிரனே ஆட்சிக்குரியவன் என்று நேரடியாகக் கூறியிருக்கலாமே!

**விதுர:** என் கருத்தைக் கூற காலம் வரும்வரை காத்திருக்கிறேன்.

**திருத:** ஆனால் நாளை சபை கூடும்போது நான் என்ன கூறவேண்டும்?

**பீஷ்ம:** வினாவை விடுப்பவருக்கு விடையும் தெரிந்திருக்க வேண்டுமே! நான் கூறுவதை ஏற்றுக்கொண்டால் காலம் சரியான பதிலைத் தரும்.

-தொடர்ந்து வரும்-

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

www.padippakam.com

நன்றி - நூலகத்







தருவது–லியோன்ஸ்

## சீறிச் செல்லும் சின்ன ஜெட்




'சிஸ்மி லெப்பெட்' என்ற இந்தச் சிறிய விமானம் பிரிட்டனில் வடிவமைக்கப்பட்டது. அளவில் சிறிய தானாலும் 'கடுகு சிறுத்தாலும் காரம் பெரிது' என்று கூறும் அளவுக்கு பல நல்ல வசதிகளைக் கொண்டிருக்கிறது. நான்குபேர் பயணம் செய்யக்கூடிய இவ்விமானம் கண்ணாடி இழை பொதித்த பிளாஸ்ரிக்கினால் உருவாக்கப்பட்டது. இலண்டனிலிருந்து ரோம் நகர்வரை இடையில் எங்கும் தரிக்காமல் நேரடியாகவே இவ்விமானம் செல்லுவதற்கு வசதியாக பெற்றோல் கொண்டு செல்லக்கூடியது.

## இங்கே தெரிவது அன்பு



அமெரிக்க காடுகளில் பெரியவகைக் கழுகுகள் வாழுகின்றன. அமெரிக்காவின் தேசியப் பறவையும் கழுகுதான். வேட்டைக்காரர்களால் தேசியப் பறவைக்கும் ஆபத்து. ... சரணாலயத்தில் உள்ள தாய் ... முத்தம் கொடுத்து ... அன்பு மனிதர்களுக்கு மட்டும் உரியதல்ல.

## கொடும் போரில் சிக்கிய அரும்பு!



பொஸ்னியாவில் பற்றி எரியும் போர் நெருப்பில் சின்ன மழலைகளும் கருகிப்போகின்றன.


சீறிவரும் குண்டுகள் ஒரு புறம், தனியாத பட்டினிக்கொடுமை மறுபுறம்.

மனிதாபிமானிகள் எடுத்த முயற்சியால் பிரிட்டிஷ் அரசாங்கம் விமானங்களை அனுப்பியது. படுகாயமடைந்த பச்சிளம் சிறுவர்களை தனது நாட்டுக்கு அழைத்து சிகிச்சை கொடுக்க ஏற்பாடு செய்தது. விமான நிலையத்தில் சிகிச்சைக்கு அனுப்பப்பட இருந்த குழந்தைகளில் ஒன்றுதான் படத்தில்! படுபாதகப் போரின் ஈரமில்லாத கொடுமைக்கு இந்தக் குழந்தை ஒன்று போதும் அல்லவா சாட்சிக்கு!

மனிதர்கள் மட்டும்தான் பிறந்தநாள் கொண்டாட வேண்டுமா என்ன?

அமெரிக்கா-அலபாமா மாநிலத்தில் உள்ள ஃபோட்பேன் என்ற நகரமும் பிறந்தநாள் விழாவை அட்டகாசமாகக் கொண்டாடியிருக்கிறது. அதுவும் 100நாள் பிறந்தநாள் விழா. பிறந்தநாள் விழாவுக்கு கேக் வேண்டுமல்லவா? அதற் காகத்தான் இந்த கேக் உருவாக்கப்பட்டது. எடை என்ன தெரியுமோ? 58.08தொன் (128,238 1/2 இறாத்தல்) ஐசிங்கா 7.35 தொன் (16,209 இறாத்தல்) செலவு. இதன் நீளம் 24.4 மீட்டர், அகலம் 9.8 மீட்டர் (80.03 அடி) உலகில் இதுவரை செய்யப்பட்ட மாபெரிய கேக் இதுதான். உலகசாதனை படைத்த கேக்.

## உலகில் பெரியது இது! சாதனை படைத்தது இது!!




திவைப்ரசுவாரமலர்

பிறக்கும்போதே இறப்பது என்பதும் நிச்சயமான விசயம். வாழும்போது எப்படி வாழ்வது என்று ஒரு முடிவோடு தெளிவோடு வாழ்பவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் வாழத் தெரிந்தவர்கள். படத்தில் உள்ளவர் ஒரு படி மேலே போய் தான் வாழ்ந்து முடிந்த பின்னரும் எப்படியான கல்லறையில் எப்படி கடைசி தூக்கம் நடத்துவது என்றும் தீர்மானித்து விட்டார். அதற்காகவே கல்லறை ஒன்றைக் கட்டி முடித்து, அதற்கு அருகில் நின்று புகைப்படமும் எடுத்துக்கொண்டுவிட்டார். மரித்த பின்னும் மரியாதையோடு உறங்க ஆசை!

## சாவதற்கு முன்னரே சமாதி ரெடி!




ஷர்மினா விளையாட்டுக்கழக கட்டிட நிதிக்காக

# நட்சத்திர நடன இசை விழா

| ஏப்ரல் 22 | ஏப்ரல் 23 | ஏப்ரல் 24 |
| --- | --- | --- |
| பிரபல சிங்கள கலைஞர்களின் நாடகம் கோப்பி கடே | பிரபல சிங்கள கலைஞர்களின் இன்னிசை நிகழ்ச்சி | பிரபல இந்தியக் கலைஞர்களின் நடன இசை விழா |

இவ்விழா ஏப்ரல் 22-23-24ம் திகதி மாலை 6.30 மணிக்கு, விகாரமகாதேவி பூங்காவில் (திறந்த வெளி அரங்கு)

சில்க் சுமிதா—இளவரசி—விசித்ரா பபிதா, கோகிலா, கௌதம் கல்பனா ராகவேந்தர், பிரசன்னா ராகவேந்தர்
பாடகர்கள்: ராகேஷ் வெங்கட் சிவபிரசாத் எஸ்.ஆர்.சுவர்ணா - சுபா - மலேசியா வாசுதேவன் ஜெய்குமார்



சில்க் ஸ்மிதா ★ எஸ்.ஆர். ஈஸ்வரி

டிக்கெட் கிடைக்குமிடங்கள்
சர்மினா ஸ்போர்ட்ஸ் கிளப் 101, 1வது ஒழுங்கை, காலேஜ் வீதி தொலைபேசி: 334224
நியூ ஆரியபவான் இல. 2, டாம் வீதி, கொழும்பு-12. தொலைபேசி: 435352
சர்மினா டிரவல்ஸ் பீப்பிள்ஸ் பார்க், கொழும்பு தொலைபேசி: 436726, 436727

அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க ஏப்ரல் 23 திகதியன்று மாலை 6.30 மணிக்கு சுகததாச ஸ்டேடியத்தில் நட்சத்திர நடன இசை விழா இடம்பெறும்
மண்டப வாயிலில் டிக்கட் கிடைக்கும்.




இப்பத்திரிகை ... தினமுரசு பதிப்பகத்தாரால் ... அச்சிட்டு வெளியிடப்படுகிறது